REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 டிசம்பர் 21 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 91 இல. 302 | Thursday 21, December, 2023 | 16 பக்கங்கள் | 50/-




# இலங்கை திறந்த அரச கூட்டிணைவு தேசிய செயல் திட்டம் முன்னெடுப்பு

**மக்களின் கருத்தறிய ஜனாதிபதி செயலகம் எதிர்பார்ப்பு**

2023-2025 வரையான காலப்பகுதியில் இலங்கை திறந்த அரச கூட்டிணைவு தேசிய செயல் திட்டம் (Open Government Partnership National Action Plan) தொடர்பில் மக்கள் கருத்தறிய ஜனாதிபதி செயலகம் எதிர்பார்த்துள்ளது.

"திறந்த அரச கூட்டிணைவு" என்பது சிவில் சமூக மற்றும் பிரஜைகளுக்கு இடையிலான கூட்டிணைவினூடாக வெளிப்படைத்தன்மை, ஒத்துழைப்பு, பொறுப்புக்கூறல் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்தின் திறந்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னெடுப்பாகும்.

இதுவரையில், 75 நாடுகளும் 104 உள்ளூராட்சி நிறு

06

# GCE A/L மாணவர்களுக்கு வழங்கும் ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில்கள்

**விண்ணப்பங்கள் ஏற்பு நாளையுடன் நிறைவு**

உயர்தர மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியம் வழங்கும் புலமைப்பரிசில்கள் தொடர்பான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது நாளை 22 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இதற்கிணங்க பாடசாலைகளுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது நாளை (22) திகதியுடன் நிறைவு பெறுகிறது.

இம்முறை க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பணிப்புரைக்கு அமைய,

06

# தேசிய நாடக விழாவின் விருது விழா







புத்தசாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசாரத் திணைக்களம், இலங்கை கலைக்கழகம் மற்றும் அரச நாடக ஆலோசனைக்குழு ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தேசிய நாடக விழாவின் 'பொன்விழா', மஹரகம தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தில் (19) நடைபெற்றது. 'நாடகக் கீர்த்தி' அரச உயர்விருதை வாழ்நாள் சாதனையாளர்களான சிரேஷ்ட கலைஞர்கள் கலைஞானி கலைச் செல்வன், பேராசிரியர் சுனந்த மஹேந்திர ஆகியோர் பெற்றுக்கொண்டனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவர்களுக்கான விருதுகளை வழங்கியபோது பிடிக்கப்பட்ட படம்.

**அரசாங்கத்தின் பொருளாதார மீட்சியில் சாதக முன்னேற்றம்**

# இலங்கைக்கு உலக வங்கி ரூ. 8,150 கோடி விடுவிப்பு

**தொடர்ந்தும் பயணிப்பதற்கு வலுசேர்க்கும் வகையில் இரண்டாவது தவணையாக வழங்குவதாகவும் தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வரும் பொருளாதார மறுசீரமைப்பு சாத்தியமானதாக முன்னெடுக்கப்படுவதால், தொடர்ந்தும் பயணிப்பதற்கு வலுசேர்க்கும் வகையில் இலங்கைக்கு (250 மில்லியன் டொலரை) சுமார் 8,150 கோடி ரூபாவை விடுவிப்பதற்கு உலக வங்கி தீர்மானித்துள்ளது.

உலக வங்கி இலங்கைக்கு வழங்கவுள்ள 500 மில்லியன் டொலர் வேலைத்திட்டத்தின் இரண்டாவது தவணையாக, இந்த 250 மில்லியன் டொலரை விடுவிப்பதற்கு உலக வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

வரவு செலவுத் திட்ட ஒத்துழைப்பு வேலைத் திட்டமாக பெயரிட்டு இந்த வேலைத் திட்டத்துக்காக கடந்த ஜூன் 28இல், அனுமதி கிடைத்துள்ளது. இதையடுத்து அதன் இரண்டாவது தவணையை இவ்வாறு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த வங்கி தெரிவித்துள்ளது. இலங்கை முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாணும் நோக்கில், இந்த நிதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துதல் வறுமை மற்றும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கான அழுத்தத்தை கட்டுப்படுத்துதல், தனியார்துறைக்காக சலுகைகளைப் பெற்றுக்கொள்ளல் ஆகியன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விரிவான மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும்போது அரசாங்கம் திருப்திகரமான முன்னேற்றத்தை பெற்றுள்ள நிலையில் பொருளாதார கொள்கை வரைபு முறையானது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வங்கிகளை பலப்படுத்துதலை இலக்காகக் கொண்டு விசேட சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவற்றைக் கருத்திற்கொண்டே இரண்டாவது தவணை வழங்கப்படுமென உலக வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

# பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த விரிவான மூலோபாய செயற்பாடுகள்

**ஒன்றிணைந்தால் ஓரிரு வருடங்களில் சுபீட்சம்**



நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் வகையில் விரிவான மூலோபாய அடிப்படையில், செயற்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அனைவரும் ஒன்றிணைந்து தற்போதைய சவால்களை எதிர்கொண்டால், அடுத்த ஒரு சில வருடங்களில் இலங்கையின் பொருளாதார சுபீட்சத்தை உறுதிசெய்யவும் பொருளாதார சவால்களை வெற்றிகொள்ளவும் முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நேற்று(20) நடைபெற்ற உள்நாட்டு இறைவரி

06

# யானை - மனிதன் மோதல்களை குறைக்க நவீன தொழில்நுட்பம்

**வனப்பகுதி எல்லைகளில் வாழ்வோருக்கு உதவிகள்**



யானை மனித மோதலைக் குறைக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதால், இதற்கான முன்னோடித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வன ஜீவராசிகள், வன வளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார்.

பிரகாசமான ஒளி, அதிவேக ஒலி அலைகள் மற்றும் டிரோன் விமானங்கள் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்படும் இந்த முன்னோடித் திட்டங்கள் அநுராதபுரம், புத்தளம், அம்பாறை மற்றும் யானை மனித மோதல்கள் அதிகம்

06

# கிளிநொச்சி மாவட்ட வெள்ளம் அமைச்சர் டக்ளஸ் கள விஜயம்



கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடினார். கிளிநொச்சி கண்டாவளை பாடசாலை மற்றும் முருகானந்தா ஆரம்ப பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ள மக்களை நேரடியாக சந்தித்த அமைச்சர், அவர்களுக்கான நிவாரணங்கள்

06

# இறக்குமதியான 365 பாசுமதி அரிசி மாதிரிகளில் 162 வகை நிராகரிப்பு

**பத்தலகொட ஆராய்ச்சி தர ஆய்வில் தெரிவிப்பு**




2021 முதல் தற்போது வரை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்காக பரிசோதிக்கப்பட்ட பாசுமதி அரிசியின் 365 மாதிரிகளில் 162 மாதிரிகள் நிராரிக்கப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட தரத்துக்கு இவை, இணங்காதிருந்தமை பத்தலகொட ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் நடத்திய

06

# வருடாந்த அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்காத 23 இலட்சம் வாகனங்கள்

**கடும் நடவடிக்கை எடுக்கப்படும்**

லோரன்ஸ் செல்வநாயகம்



மூன்று வருடத்திற்கு அதிகமான காலம் வருமான அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காத சுமார் 23 இலட்சம் வாகனங்கள் தொடர்பில், அடுத்த வருடத்தில் புதிய சட்டமொன்றைக் கொண்டுவர தீர்மானித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த தெரிவித்தார்.

இந்த வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள

06

# A/L பரீட்சார்த்திகளின் அட்டைகளை நாளை வரை திருத்த அனுமதி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளில், திருத்தம் செய்வதற்கான கால அவகாசம் நாளை (22) வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரியின் பெயர், விண்ணப்பித்த பாடங்கள், மொழி மூலம், பிறந்த திகதி உள்ளிட்டவற்றில் தவறுகள்

06

# மின்சார சபை ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் நிறுத்தம்

லோரன்ஸ் செல்வநாயகம்



இவ்வருடத்திற்காக ஊழியர்களுக்கு வழங்கும் ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்காதிருப்பதற்கு மின்சார சபை தீர்மானித்துள்ளது. இதுதொடர்பான பணிப்புரைகளை எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன

06




# டிஜிட்டல் NIC: விநியோகம் ஜனவரி முதல் ஆரம்பம்

03

# போதகர் ஜெரோமின் பிணை மனு விசாரணை

**ஜனவரி 04இல் விசாரிக்க தீர்மானம்**

லோரன்ஸ் செல்வநாயகம்



பௌத்த மதம் உட்பட ஏனைய மதங்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டாரென்ற குற்றச்சாட்டின் பேரில், சிறைத்தண்டனை அனுபவித்துவரும் போதகர் ஜெரோம்

06

# தேர்தல்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சிந்தித்து வாக்களிக்கும்

**அரசாங்கத்தின் தலைவர் எமது கட்சியைச் சேர்ந்தவரில்லை**



லோரன்ஸ் செல்வநாயகம்


அரசாங்கத்தின் ஒரு பகுதியாக பொதுஜன பெரமுன கட்சி இருந்தாலும் தற்போதைய அரசாங்கத்தின் தலைவர் மற்றும் அரச தலைவர் வேறு கொள்கையை பின்பற்றும் மற்றுமொரு அரசியல் கட்சியின் தலைவராவாரென, முன்னாள் ஜனாதிபதியும் பொது ஜன பெரமுன கட்சியின்

06

# 'யுக்திய' விசேட சுற்றிவளைப்புகள் 24 மணி நேரத்தில் 2,296 பேர் கைது

**பெருந்தொகை போதைப்பொருட்களும் மீட்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் விசேட சுற்றிவளைப்பில், கடந்த 24 மணித்தியாலங்களில் 2,296 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் 109 பேரை, தடுத்து வைத்து விசாரணை செய்யும் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

மேலும் 14 சந்தேக நபர்களின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள்

06

# நகர்வலம்



## கொழும்பு பீர்சாஹிபு வீதி சனசமூக நிலையம் மக்கள் பாவனைக்கு திறப்பு





(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

கொழும்பு மாநகர சபையின் விளையாட்டு மற்றும் பொழுது போக்கு திணைக்களத்துக்கு கொழும்பு 12 இல் அமைக்கப் பட்ட பீர்சாஹிபு வீதி சனசமூக நிலையம் பொதுமக்கள் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி செயலக பணிக்குழாம் பிரதம நிர்வாகியுமான சாகல ரத்னாயக்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு சனசமூக நிலையத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

இதன்போது, ஜனாதிபதி உள்ளிட்ட நாட்டு மக்களுக்கு நல்லாசி வேண்டி இஹ்ஸானியா அரபுக் கல்லூரி மாணவர்களின் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

கொழும்பு மாநகர சபை முன்னாள் மேயர் ரோஸி சேனாநாயக்க, மாநகர சபை ஆணையாளர் பத்ரானி ஜயவர்தன உள்ளிட்ட பிரதேச தலைவர்களும் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு

# வேட்பு மனு தாக்கல் செய்த அரச உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம்

## பிரதமரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக வேட்பு மனு தாக்கல் செய்துள்ள அரசியல் உரிமைகளுக்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் திகதி நியமிக்கப் படாமலேயே ஒத்திப்போடப்பட்டுள்ளதன் காரணமாக எழுந்துள்ள சிக்கல்களுக்கு தீர்வை பெற்றுக் கொள்ளகுழுவொன்றைநியமிப்பது சிறந்தது என தேர்தல் ஆணையாளர் நாயகத்தினால் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

அதற்கிணங்க, மேற்படி குழுவின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் இணக்கப்பாடு கிடைத்துள்ளது. அந்த குழுவின் பரிந்துரைக்கமைய பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.



2023.04.25ஆம் திகதி முதல் 2023.05.08ஆம் திகதி வரையான காலத்தை சம்பளத்துடனான விடுமுறையாக பணித்து அடிப்படை சம்பளத்தை வழங்குதல், மற்றும் 2023 உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக வேட்பு மனு தாக்கல் செய்துள்ள அதிகாரிகள் 2023.05.08ஆம் திகதிய பொதுநிர்வாக அமைச்சின் 07/2023 சுற்றறிக்கைக்கிணங்க கண்டிப்பாக கடமைக்கு சமுகமளிக்குமாறு உறுதிப்படுத்தல். அத்துடன் அரசியல் உரிமைக்கு உரித்தான அரசாங்க ஊழியர்களின் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்கான விடயங்களை உள்ளடக்கிய பொதுநிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையை வெளியிடுதல் ஆகிய விடயங்களே பிரதமரின் யோசனையில் உள்ளடக்கப் பட்டுள்ளன.

## ஹோமாகம சமுர்த்தி வங்கியில் கொள்ளை

ரூ. 7 இலட்சம் ரூபா தலைமறைவு



லோரன்ஸ் செல்வநாயகம்

ஹோமாகம பகுதி வங்கியொன்றிலிருந்து துப்பாக்கி முனையில் ஏழு இலட்சம் ரூபாய் கொள்ளையிடப்பட்டுள்ளதாக ஹோமாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் முற்பகல் இந்த கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் கொள்ளையர்கள் ஹோமாகம, தலகல பிரதேசத்திலிருந்து அங்கு வருகைதந்துள்ள நிலையில் பணத்தைக் கொள்ளையடித்த பின்னர் மீண்டும் அந்த பிரதேசத்திற்கு தப்பிச்சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகம, பிடிபன, கபடாவத்த சமுர்த்தி வங்கிக்கு துப்பாக்கியுடன் பிரவேசித்த இரண்டு நபர்களே இவ்வாறு ஏழு இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம்

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு பணிப்பாளரும் சட்டத்தரணியுமான க.கபிலன் தலைமையில் நாளை 22ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்ச்சியில் மொழி உரிமை (உரிமை மறுப்பு நிவாரணங்கள்) என்னும் தலைப்பில் சட்டத்தரணி சு. தவச்செல்வன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## மஹர சிறைச்சாலை பள்ளிவாசலை மீண்டும் திறக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ரிஷாட் எம்.பி கோரிக்கை

(கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)

மூடப்பட்டுள்ள மஹர சிறைச்சாலை பள்ளிவாசலில் ஐவேளைத் தொழுகை உள்ளிட்ட இறைவழிபாடுகள் மீண்டும் இடம்பெற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழிவகை செய்ய வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து மூடப்பட்ட நிலையிலுள்ள மஹர சிறைச்சாலை வளாகத்திலுள்ள பள்ளிவாசலுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டதோடு இக்கோரிக்கையையும் விடுத்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, 'மஹர பிரதேசத்தில் பல கிராமங்களில் வாழும் முஸ்லிம்கள், 1903 இல் இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களுக்காக கட்டப்பட்ட இப்பள்ளிவாசலில் தான் தொழுகை உள்ளிட்ட இறைவழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர். கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து இப்பள்ளிவாசல் மூடப்பட்டுள்ளது. ஆனால் 100 வருட காலத்துக்கும் மேற்பட்ட வரலாறு கொண்ட இப்பள்ளிவாசலிலே இப்பிரதேச முஸ்லிம்கள் தங்களது சமயக் கடமைகளை நிறைவேற்றி வந்தனர். தற்போது இங்கு வாழ்கின்ற சுமார் 350க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தமது மார்க்கக் கடமைகளில் ஈடுபட முடியாமல் கஷ்டப்படுகின்றனர். ஐவேளை தொழுகைக்காக பள்ளிக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

ஜும்ஆ தொழுகை மற்றும் ஒருவர் மரணித்துவிட்டால் அவருக்காக மார்க்க கடமைகளை முன்னெடுக்க முடியாத ஒரு துரதிஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான பல கஷ்டங்களுக்கு அவர்கள் நாளாந்தம் முகங்கொடுத்துள்ளனர்.

அதனால் இப்பள்ளிவாசலை மீண்டும் முஸ்லிம்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறேன். இப்பள்ளிவாசலை அம்மக்களுக்கு மீண்டும் வழங்க வேண்டும். இல்லாவிடில், அப்பிரதேச மக்கள் தொழுகை நடாத்துவதற்காகப் பள்ளிவாசல் ஒன்றை கட்டுவதற்குப் பொருத்தமான காணியை வழங்க வேண்டும். இரண்டில் ஒன்றை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்று கேட்டுள்ளார்.

## 'இறைவழியை போதிக்க அயராது உழைத்த உத்தமர்' முனீர் மௌலவி மறைவுக்கு ரிஷாட் எம்.பி அனுதாபம்

புத்தளம் இஸ்லாஹியா பெண்கள் அரபுக்கல்லூரியின் அதிபரும் புத்தளம் காஸிமிய்யா அரபுக் கலாசாலை விரிவுரையாளருமான அஷ்ஷெய்க் ஹதியத்துல்லாஹ் முஹம்மத் முனீர் (முனீர் மௌலவி) இறையடிசேர்ந்த செய்தி பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

முனீர் மௌலவியின் மறைவு குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"மறுமையில் எம்மை ஈடேற்ற உதவுவது இறைகல்வியே. மார்க்கத்தில் தெளிவு ஏற்பட்டு சிறந்த அமல்புரிய உலமாக்கள் எங்களுக்கு வழிகாட்டுகின்றனர். நேர்வழிகாட்டும் உலமாக்களின் இழப்பு சமூகத்தில் சமய நெறி, ஒழுக்க விழுமியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடாது. இதற்காகத்தான் அரபுக்கல்லூரிகளை ஸ்தாபித்து உலமாக்களை உருவாக்கி வருகிறோம்.

இந்த வகையில், எதிர்கால உலமாக்களை உருவாக்குவதற்கு மர்ஹூம் முனீர் மௌலவி பெருந்தொண்டாற்றினார். இஸ்லாஹியா அரபுக்கல்லூரி அன்னாரின் சிறந்த நிர்வாகத்தால் புகழின் உச்சிக்குச் சென்றுள்ளது. எம் சமூகத்தின் உயர் பெறுமானமாகத் திகழ்பவர் மர்ஹூம் முனீர் மௌலவி. அன்னாரின் பிரிவால் துயருறும் சகலருக்கும் "ஷகீனத்" என்ற அமைதியை அல்லாஹுத்தஆலா நல்குவானாக!



குவைத் மக்களுக்கு மகத்தான சேவை ஆற்றிய அமீர் ஷேக் நவாஃப் அல் அஹமது அல் ஜாபிர் அல் சபாவின் மறைவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அனுதாபம் தெரிவித்துள்ளார். கொழும்பிலுள்ள குவைத் தூதரகத்துக்குச் சென்று, இலங்கைக்கான குவைத் நாட்டின் பொறுப்பதிகாரி உஸ்மான் அல்உமரை சந்தித்து தனது அனுதாபத்தை தெரிவித்துக்கொண்ட பின் அனுதாபப் பதிவேட்டிலும் அனுதாபம் தெரிவித்து கையொப்பமிட்டபோது எடுத்த படம்.

## முஸ்லிம் சமூகம் புத்திஜீவிகளை இழந்து வருவது கவலைக்குரியது

### அனுதாபச் செய்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம்



இலங்கையைப் பொறுத்தவரை கடந்த சில மாதங்களாக இஸ்லாமிய அறிவுசார் புத்திஜீவிகளை முஸ்லிம் சமூகம் அடுத்தடுத்து இழந்து வருவது ஆழ்ந்த கவலையளிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அனுதாபச் செய்தியொன்றின் ஊடாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த வாரத்தின் ஆரம்ப நாட்களிலேயே குர்ஆனிய சமூகத்தை உருவாக்குவதற்காக அயராது ஈடுபட்டுழைத்த இரு பெரும் ஆளுமைகள் இறைவனின் நாட்டப்படி எங்களை விட்டு மறைந்தது முஸ்லிம்கள் மத்தியில் அதிர்வலைகளைத் தோற்றுவித்திருப்பதாக உணர்கிறேன்.

செவ்வாய்க்கிழமை(19) அதிகாலையிலேயே புத்தளம் இஸ்லாஹியா பெண்கள் அரபுக் கல்லூரியின் அதிபர் உஸ்தாத் ஷெய்க் முஹம்மத் முனீர் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்ட செய்தி வெளியாகியது. அதற்கு முன்னதாக, பதுளை மாவட்டத்தில் இஸ்லாமிய விழுமியங்களின் அடிப்படையில் சன்மார்க்கப் பணியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயலாற்றிவந்த அஷ் ஷெய்க் ரிஸான் ஸெய்ன் (நளீமி) யின் மறைவுச் செய்தி எங்களை எட்டியிருந்தது.

இவர்கள் இருவரிலும் ஒத்த தன்மைகள் சிலவற்றைக் காண்கின்றோம். அல் குர்ஆனின் போதனைகளின் அடிப்படையில் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றி ,இஸ்லாத்தின் தூதை உரிய முறையில் எத்திவைப்பதற்காக இருவரும் அர்ப்பணிப்புடன் உன்னதமான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள்.எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்கள் ஆற்றியுள்ள அரும் பணிகளை அங்கீகரித்து, இருவருக்கும் மேலான ஜென்னத்துல் பிர்தௌஸுல் அஃலா என்ற உன்னதமான சுவனபதியை வழங்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

## அநுராதபுரம் மாவட்டத்தில் HIV நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்டத்தில் அதிகரித்து வரும் எச்.ஐ.வி நோயாளர்களின் அதிகரிப்பு குறித்து சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர். மாவட்டத்தில் இந்த வருடத்தில் 19 எச்.ஐ.வி நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நிமல் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

ரஜரட்ட விஞ்ஞான அறக்கட்டளை நிறுவனம் அண்மையில் ஏற்பாடு செய்த கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இந்த ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் 10 எச்.ஐ.வி நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர் பெண்களுடன் ஒப்பிடுகையில் அதிக எண்ணிக்கையிலான ஆண்கள் எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரத் தரவுகள் காட்டுவதால் இந்த விடயங்களை பகுப்பாய்வு செய்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும்,




இதற்காக இதுவரையில் அநுராதபுரம் மாவட்டத்தில் இவ்வாறான நோயாளிகளை கண்டறிய சுமார் 41 கிளினிக்குகளை நடாத்த முடிந்துள்ளதாகவும், எவ்வாறாயினும் எச்.ஐ.வி பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு பொது மக்கள் தமது அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நிமல் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் பாலின நோய்களுக்கான மருத்துவ நிபுணர்களான டாக்டர் அஜித் கரவிட்ட, டாக்டர் திலானி ரத்னாயக்க, டாக்டர் ஹேமா வீரக்கோன், ரஜரட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களான அசித்த மலவர ஆராச்சி, சுசித் சிறிவர்தன ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## சிங்கள மொழி பேச்சுப் போட்டியில் 2ஆம் இடம்



அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் சாஹிரா கல்லூரியில் தரம் 06 இல் கல்வி கற்கும் றமீஸ் சிம்லா என்ற மாணவி அகில இலங்கை இரண்டாம் மொழி சிங்கள தின பேச்சுப் போட்டி நிகழ்ச்சியில் 02ஆம் இடத்தைப்பெற்று பாடசாலைக்கு பெருமை தேடிக்கொடுத்துள்ளார். குறித்த மாணவி 2023 சமூக விஞ்ஞான போட்டி மற்றும் தமிழ்மொழி தினப் போட்டியிலும் அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் வீ. றமீஸ் மற்றும் தேவநம்பிய திஸ்ஸபுர அல் அஸ்ஹர் முஸ்லிம் வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியை நிஷா பாருக் தம்பதிகளின் புதல்வியாவார்.

## அநுராதபுரம் மாவட்டத்தில் வாழை பயிர்ச்செய்கை ஆரம்பம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கில் அநுராதபுரம் மாவட்டத்தில் சிறந்த இன வாழை பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேற்படி திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கை அநுராதபுரம் ராஜாங்கனை பகுதியில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி மாவட்டத்தின் தம்புத்தேகம, நொச்சியாகம, திறப்பனை பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம் நாட்டுக்கு பாரிய அளவிலான அன்னிய வருமானத்தினை ஈட்டிக்கொள்ள முடியுமென்பதுடன் செய்கையாளர்களும் பெரிதும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டம் விவசாயத் திணைக்களத்தின் பூரண கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுவதாக அநுராதபுரம் மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் தேனுவர மேலும் தெரிவித்தார்.

# பட்ஜட்: முன்மொழிவு அபிவிருத்திகளை துரிதப்படுத்துமாறு பிரதமர் பணிப்பு

## ஆளுநர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர்களுக்கும் ஆலோசனை



புதிய வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் கீழ் நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு, பிரதமர் தினேஷ் குணவர்த்தன சகல ஆளுநர்களுக்கும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கும் ஆலோசனை வழங்கினார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்கள் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆளுநர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுடன் (19) அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலிலே, பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில், நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள், உணவுப் பாதுகாப்பு, கடற்றொழில், புதுப்பிக்கத்தக்க சக்தி வளம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இதன் போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

மாகாண சபைகளுடன் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் இடமாற்றம், வெற்றிடங்களை நிரப்புதல், புதிய ஆட்சேர்ப்பு மற்றும் மாகாண சபைகளின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் குறித்த திருத்தம் தொடர்பான விடயங்களும் கவனத்திற்கொள்ளப்பட்டன.

பல்நோக்கு ஊழியர்களை பணியிடங்களில் அமர்த்துதல் மற்றும் மாகாண மட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. சில மாகாணங்கள் கூட்டுறவுச் சாசனத்தை இன்னும் நிறைவேற்றத் தவறியுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார். கூட்டுறவு முறைமை தொடர்பில் அமைச்சரவை உபகுழுவும், பாராளுமன்றத்தின் விசேட செயற்குழுவும் உள்ள போதிலும் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான சில சொத்துக்கள் ஏலத்தில் விடப்படும் நிலைமைக்கு உள்ளாகியிருப்பதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். பொது மக்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தும் வகையில் கூட்டுறவுச் சொத்துக்களில் கைவைப்பதைத் தவிர்க்குமாறு பிரதமர் இங்கு வலியுறுத்தினார். கூட்டுறவு நடைமுறையின்படி, 2024 ஆம் ஆண்டில் பால் உற்பத்திக்கான தேசிய வேலைத்திட்டம் முதன்மையான திட்டமாக செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சில மாகாணங்களில் அபிவிருத்தி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது ஆளுநர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கிடையில் கருத்து முரண்பாடு 06

# டிஜிட்டல் NIC: விநியோகம் ஜனவரி முதல் ஆரம்பம்



டிஜிட்டல் தேசிய அடையாள அட்டைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக புதிய அடையாள அட்டைகளை பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கு டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

இதனை தொடர்ந்து படிப்படியாக சகலருக்கும் டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அடையாள அட்டைக்கான டிஜிட்டல் புகைப்படத்தை பெறுவதற்கான கட்டணம் 400 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி மூலம் புதிய கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 150 ரூபா முதல் பல்வேறு கட்டணங்கள் வசூலிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை–இந்திய மீனவர் கைது விவகாரம் நெகிழ்வுப்போக்கை பேணுவது அவசியம்

## இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் ஜகதீப் தங்கர்

இலங்கை, இந்திய கடற்றொழிலாளர்கள் கடல் எல்லையைத் தாண்டுவது உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் விடயமல்ல, மீனவர்களைக் கைது செய்யும் போது இரு நாடுகளும் நெகிழ்வான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமென மாநிலங்களவைத் தலைவரும், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவருமான ஜகதீப் தங்கர் சுட்டிக்காட்டியுள்ளார். 06

# சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் அலுவலகத்தில் ஐந்து மணி நேரம் சோதனை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் சமன் ரத்நாயக்கவின் அலுவலகம், குற்றத்தடுப்பு விசாரணை பிரிவு அதிகாரிகளால் ஐந்து மணித்தியாலங்கள் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

குற்றத்தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகள் நேற்றுக் காலை 10 மணிமுதல் ஐந்து மணித்தியாலங்கள் அந்த அலுவலகத்தை சோதனையிட்டனர்.

இதன்போது, மேலதிக செயலாளரிடமும் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. தரமற்ற மருந்தை இறக்குமதி செய்துள்ள விவகாரம் தொடர்பில் நீதிமன்ற உத்தரவுக்கமைய, இந்த அலுவலகம் சோதனைக்குட்படுத்தப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் அந்த அலுவலகத்தை சீல் வைப்பதற்கும் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# புதிய பாடசாலை தவணையில் வகுப்பு வட்டங்கள் கட்டாயம்

## கல்வியமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாடசாலை தவணை ஆரம்பமாகி இரண்டு வாரங்களுக்குள் சகல பாடசாலைகளிலும் வகுப்பு வட்டங்களை ஒழுங்கமைப்பதில் பாடசாலை பிரதானிகளும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென, கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

பெற்றோர்கள் மற்றும் வகுப்புக்கு பொறுப்பான ஆசிரியர்களுக்கிடையில் பலமான தொடர்புகளை உருவாக்குவது இதன் நோக்கமாகுமென்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வருடம் பிறந்ததும் குறைந்தபட்சம் வகுப்புக்கள் மற்றும் தரங்கள் என்ற வகையில் பெற்றோர்களை அழைத்து, பிள்ளைகள் வகுப்பின் பொறுப்பாசிரியர் ஆகியோருக்கும் தெளிவுபடுத்தல் மேற்கொள்வது அவசியமாகும்.



அதற்கிணங்க அந்த வருடத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் பிள்ளைகளின் ஒழுக்கம் மற்றும் வினைத்திறன் போன்றவற்றை பாதுகாப்பது எவ்வாறு என்ற புரிந்துணர்வை பெற்றுக் கொடுக்கவேண்டும். இதற்கான சுற்றறிக்கையில் திருத்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலைகள் அடுத்த வருடம் பெப்ரவரி 19 ஆம் திகதி ஆரம்பித்தவுடன் கண்டிப்பாக அனைத்து அரசாங்கப் பாடசாலைகளிலும் வகுப்பு வட்டத்தை ஒழுங்கமைக்க வேண்டும் என்ற பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. இதன் முன்னேற்றம் தொடர்பில் மாதாந்தம் மற்றும் வருடாந்தம் மீள்பார்வை மேற்கொள்ள வேண்டும். இதன்மூலமே, பாடசாலைகளுக்கும் பெற்றோருக்கும் இடையிலான தொடர்புகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியும்.

நாட்டில் நிலவிய கொவிட் காரணமாக இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியாமல் இருந்தது. அதனை மீண்டும் கொண்டுவர வேண்டும்.

# மாவிலாறு பகுதியிலிருந்து பழைய ஆயுங்கள் மீட்பு

சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவிலாறு மதகுக்கு அருகில், பழைய ஆயுதங்கள் சிலவற்றை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர். இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின்படி, தேடுதல் நடத்தப்பட்டு இவை, மீட்கப்பட்டன.

T56 துப்பாக்கிக்கான 22 தோட்டாக்கள், இரண்டு மகசீன்கள், இரண்டு கைக்குண்டுகள் மற்றும் T56 துப்பாக்கியின் ஒரு பகுதி ஆகியவையே மீட்கப்பட்டன.மீட்கப்பட்ட இராணுவ உபகரணங்கள் மேலதிக விசாரணைகளுக்காக சேருநுவர பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# ஜன.04 முதல் 31 வரை GCE A/L பரீட்சை

## சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

2023ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சையை எதிர்வரும் 2024 ஜனவரி 04 ஆம் திகதி நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் 2,298 பரீட்சை நிலையங்களில் ஜனவரி 04ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை உயர்தர பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர்கள் மற்றும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்களின் முகவரிகளுக்கு பரீட்சை தொடர்பான அட்டவணைகள், பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் மற்றும் பரீட்சை அட்டவணைகள் கிடைக்காவிட்டால், பாடசாலை அதிபர்கள், தனியார் பரீட்சார்த்திகள் ஆகியோர் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரவேசித்து ஆவணங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடத்தப்பட்ட 18,000 மாத்திரைகளுடன் இருவர் கைது

போதைப்பொருள் கடத்தல், பாவனைக்கு எதிரான பாரிய 'யுக்திய' நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், மன்னாரில் இரண்டு சந்தேக நபர்களை கைது செய்தனர்.

இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்டதாக நம்பப்படும் சட்டவிரோத போதை மாத்திரைகளும் இதன்போது கைப்பற்றப்பட்டன . சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 18,000 போதை மாத்திரைகளின் பெறுமதி 2.1 மில்லியன் ரூபா என கணிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 23 ஆம் திகதி வரை இச்சோதனை நடவடிக்கைகள் தொடருமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.


# 'வித்யா ' முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வு



கல்வி அமைச்சின் ஆய்வுகள் மற்றும் புத்தாக்க பிரிவும் லேக்ஹவுஸ் நிறுவனமும் இணைந்து வெளியிடும் 'வித்யா ' (அறிவியல்) மும்மொழி இணையத்தள e பத்திரிகையின் முதலாவது ஆண்டு நிறைவு கொண்டாட்டம் நேற்று (20) லேக்ஹவுஸ் பணிப்பாளர் சபை மண்டபத்தில் நடைபெற்றது. ' வித்யா ' மும் மொழி இணையத்தள e பத்திரிகையின் ஆண்டு நிறைவு பதிப்பு சஞ்சிகையை லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், கல்வி அமைச்சின் ஆய்வுகள் மற்றும் புத்தாக்க பிரிவின் மேலதிக செயலாளர் சமந்தி வீரசிங்கவிடம் கையளித்தார்.

கல்வி அமைச்சின் ஆய்வுகள் மற்றும் புத்தாக்க பிரிவின் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) குமாரி மீகஹகொட்டுவ, பணிப்பாளர் நாயகம்( ஆய்வுகள்) பி. எம் தர்மதிலக்க, உதவிப் பணிப்பாளர் (ஆய்வுகள்) எஸ். கே .லக்மினி, லேக்ஹவுஸ் ஆசிரிய பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, லேக்ஹவுஸ் அரசாங்க தொடர்புகள் திணைக்கள முகாமைத்துவ ஆசிரியர் சமந்த கருணாசேக்கர உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இலங்கை மாணவர் இங்கிலாந்தில் பலி



இங்கிலாந்தின் நாட்டிங்ஹாம் ட்ரென்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 31 வயதான இலங்கை மாணவர், விபத்தில் உயிரிழந்துள்ளார். 31 வயதான ஒஷத ஜயசுந்தர என்ற பல்கலை மாணவர், வீதியில் சென்று கொண்டிருந்த போது வேகமாக வந்த கார் இவர் மீது மோதி, சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.இவ்விபத்து (13) இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பாக 27 06

# இயலாமையுடைய நபர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

## இம்மாதம் முதல் வழங்க ஏற்பாடு

இயலாமையுடைய நபர்களுக்கு டிசம்பர் முதல் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க அனுமதி வழங்கியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்தார். இயலாமையுடைய நபர்கள் தொடர்பில் உணர்திறன் 06

# ஜனாதிபதி ரணிலை பொது வேட்பாளராக நிறுத்த வேண்டியது காலத்தின் தேவை

லோரன்ஸ் செல்வநாயகம்

## முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளராக களமிறங்குவாரென, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். சகல கட்சிகளும் இணைந்து ரணில் விக்கிரமசிங்கவை பொது ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது காலத்தின் தேவையாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட ஏனைய அனைத்து கட்சிகளும் இணைந்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்து வருகின்றன.

நாட்டின் தற்போதைய நெருக்கடியான பயணம் இலகுவானதல்ல. இருளில் செல்லும் பயணம். அந்தவகையில்,முறையான ஒரு எதிர்காலத்திற்கான தூர நோக்கு மிக்க பயணத்தைக் காண முடிகிறது.

மக்களுக்கு முழுமையான நிவாரணம் கிடைக்காவிட்டாலும், உள்ளதைக் கொண்டு ஓரளவு இயல்பு வாழ்க்கை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதனை பாதுகாத்து முன்செல்ல வேண்டியது அவசியமாகும். 06




அருந்ததி நிறுவனத்தின் மாற்று மோதிரம் மணப்பெண் அலங்கார நிகழ்வு நேற்று மாலை கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றுபோது, விழா மலரின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் ஹாசிம் உமர், நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி மேகலாவிடமிருந்து பெறுவதை படத்தில் காணலாம்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 06ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 06

## குறள் தரும் சிந்தனை



கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்

இருப்பதை ஒளிக்காமல் வழங்கிடும் இரக்க சிந்தையுடைவரிடம் கூட, இரவாமல் இருப்பது கோடி மடங்கு உயர்வுடையதாகும்.

# உள்நாட்டு வளங்களை மின்னுற்பத்திக்கு பயன்படுத்துவது சிறப்பான திட்டம்

மின்கட்டண திருத்தம் கடந்த சில மாதங்களாக பேசுபொருளாகியுள்ளது. அதிலும் கடந்த ஒக்டோபர் மாதத்தில் மின்கட்டணம் செலுத்தத் தவறிய ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட பாவனையாளரின் மின்இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டன. அத்தோடு ஜனவரியில் அதிகரிக்கப்படவிருக்கும் வற்வரி, மின்கட்டணமும் உயர வழிவகை செய்யும் என்ற ஐயமும் இதற்கு வலுசேர்ப்பதாக உள்ளது. இவ்வாறான நிலையில் மின்கட்டணத் திருத்தம் மக்கள் மத்தியில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் விடயமாக மாறியுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் மின்சாரம் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாக விளங்குகிறது. மின்சக்தி இன்றி நாடொன்று பெரும்பாலும் இயங்க முடியாது என்றளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அந்த வகையில் இந்நாட்டில் மின்சாரம் நீர், காற்று, சூரிய சக்தி மற்றும் டீசல், நிலக்கரி என்ற மூலங்களைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்படுகிறது. அதன் பயனாக 24 மணித்தியாலயங்களும் நாட்டு மக்களுக்கு தொடராக மின்சக்தி பெற்றுக்கொடுக்க முடிகிறது. சூரிய சக்தி, காற்று உள்ளிட்ட சக்தி முதல்களும், நீர் வளமும் இந்நாட்டில் இயற்கையாகவே கிடைக்கப்பெறுகின்ற போதிலும் நிலக்கரி, டீசல் என்பன வெளிநாடுகளில் இறக்குமதி செய்யப்பட்டு மின்னுற்பத்திக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆனாலும் உள்நாட்டில் கிடைக்கப்பெறும் சக்தி மூலங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மின்னுற்பத்திக்கான செலவை விடவும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து பயன்படுத்தப்படும் மூலங்கள் ஊடான மின்னுற்பத்திக்கான செலவு அதிகமாகும். இந்நிலையில் மின்கட்டணத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன.

அந்த வகையில் வருடத்தில் வருடத்திற்கு இரண்டு தடவை மின்கட்டணத்தில் திருத்தம் செய்வதற்கு ஏற்ப கடந்த வருடம் தீர்மானம் எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனாலும் கடந்த செப்டம்பரில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிலையில் மின்கட்டணம் செலுத்தாத ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்டோரின் மின்இணைப்புக்களைத் துண்டிப்பதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

கடந்த சில மாதங்களாக நாட்டில் மழையுடனான காலநிலை நிலவி வருகிறது. இதன் பயனாக மின்னுற்பத்திக்கு தேவையான நீரை நாடு போதியளவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய மின் சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, 'நாட்டில் நிலவிவரும் மழையுடன் கூடிய காலநிலையின் பயனாக நீர் மின்னுற்பத்தி அதிகரித்துள்ளதோடு அனல் மின்னுற்பத்திக்கான செலவும் குறைவடைந்துள்ளது. உற்பத்தி செலவும் வீழ்ச்சி அடைந்துள்ளது. அதனால் மின்சார சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள இலாபத்தின் பயனை மக்களும் அனுபவிக்கும் வகையில் ஜனவரியில் விலைத் திருத்தத்தை மேற்கொள்ளும் போது மின்கட்டணத்தை குறைக்க முடியும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மின்கட்டண அதிகரிப்பு பேசுபொருளாக இருக்கும் சூழலில் அமைச்சரின் இந்த அறிவிப்பு மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும். இது வரவேற்கப்பட வேண்டிய அறிவிப்பு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருந்த போது மக்கள் பல அசௌகரியங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுத்தார்கள். பொருளாதார மறுமலர்ச்சிப் பாதையில் நாடு பிரவேசித்துள்ள சூழலில் அவர்கள் நிவாரணங்களை எதிர்பார்த்தவர்களாக உள்ளனர். அதனைப் பெற்றுக்கொடுப்பதும் அவசியமானது.

இவ்வாறான நிலையில் ஜனவரி முதல் நாட்டில் வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக மின்கட்டணம் மேலும் அதிகரிக்கும் என்ற அச்சமும் மக்கள் மத்தியில் நிலவுகிறது.

ஆனால் அமைச்சர் கஞ்சன விஜேசேகர அந்த அச்சத்திற்கும் உரிய பதிலளிக்கவும் இச்செய்தியாளர் மாநாட்டைப் பயன்படுத்திக் கொண்டார். 'ஜனவரி முதல் வற் வரி அதிகரிக்கப்பட்டாலும் அதனுள் மின் கட்டணம் உள்வாங்கப்பட்வில்லை. அதனால் வற் வரி அதிகரிப்பு மின் கட்டணத்தில் தாக்கம் செலுத்தாது. எரிபொருள் விலையில் தாக்கம் செலுத்தலாம். அதனால் அது தொடர்பில் நிவாரணங்ளை வழங்குவது குறித்து நிதியமைச்சில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன' என்றுள்ளார்.

ஆகவே ஜனவரியில் வற் வரி அதிகரித்தாலும் அது மின்கட்டணத்தில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. மழையுடன் கூடிய காலநிலை அதற்கு பெரிதும் உதவக்கூடியதாக உள்ளது. அதே நேரம் அமைச்சரின் கூற்றுப்படி, உள்நாட்டில் கிடைக்கப்பெறும் வளங்களை மின்னுற்பத்திக்கு அதிகம் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டக் கூடியதாக உள்ளது. அதனால் நீர், காற்று, சூரிய சக்தி மூலமான மின்னுற்பத்தியை அதிகரிப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மக்களின் விருப்பமும் அதுவேயாகும். இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது சம்பந்தப்பட்ட தரப்பினரின் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட திறன் வகுப்பறை

கொழும்பு_6 வெள்ளவத்தையில் அமைந்துள்ள சைவமங்கையர் வித்தியாலயத்தில் கடந்த 17 ஆம் திகதி திறன் வகுப்பறையானது, பௌதிகவியல் ஆய்வுகூடத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தப் பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களின் நவீன கற்றல் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக, இந்தத் திறன்வகுப்பறையானது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

Ratnam Foundation, UK மற்றும் வ.ஹரிச்சந்திரன் (விசன்ஸ், அமெரிக்கா) அவர்களின் இணைந்த நிதிப்பங்களிப்பில் வழங்கப்பட்ட இந்தத் திறன் வகுப்பறையை, விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ட் நிறுவனம் வைபவ ரீதியாக தொடங்கி வைத்தது.

சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி அருந்ததி ராஜவிஜயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், விசன்ஸ் நிறுவனத்தின் தலைவர் ந.தெய்வேந்திரராஜா மற்றும் விசன்ஸ் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி அ.மயூரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டு திறன் வகுப்பறையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.







சைவமங்கையர் வித்தியாலய உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கேற்றலுடன் நடைபெற்ற இந்நிகழ்வில், அப்புத்தளை வின்ரோஸ் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் பணிப்பாளர் செல்வி ரேகா கொட்வின் பால் மற்றும் விசன்ஸ் நிறுவனத்தின் சார்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்திருந்த நான்கு பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நான்கு முன்மாதிரித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

திறன் வகுப்பறை மூலம் க.பொ.த உயர்தர மற்றும் சாதாரண தர மாணவர்கள் திறன் தொழில்நுட்பத்துடன் நவீன முறையில் கற்றல் செயல்பாடுகளில் வெவ்வேறு நேரசூசி அடிப்படையில் நாளாந்தம் பயன்பெறுவர் என்று தெரிவித்த பாடசாலை அதிபர், இந்த திறன் வகுப்பறையை வழங்கிய இரட்ணம் பவுண்டேஷன் (இலண்டன்) மற்றும் வ.ஹரிச்சந்திரன் (விசன்ஸ், அமெரிக்கா) அவர்களுக்கும், ஆரம்பித்து வைத்த விசன்ஸ் நிறுவனத்திற்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

## '200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி...'

# மலையக மக்கள் முன்னணியின் மாநாட்டில் நூல்கள் வெளியீடு

நுவரெலியாவில் மலையக மக்கள் முன்னணி எதிர்வரும் டிசம்பர் 24 ஆம் திகதி ஏற்பாடு செய்துள்ள '200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி' மாநாடு வரலாற்று நிகழ்வில் மலையக எழுத்தாளர்களான சி.வி.வேலுப்பிள்ளையின் 'மலையக அரசியல்_தலைவர்களும் தளபதிகளும்', தெளிவத்தை ஜோசப் எழுதிய 'தெளிவத்தை ஜோசப் கதைகள்', சாரல் நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்', மலையக ஆய்வாளர் மு.நித்தியானந்தனின் 'மலையக இலக்கியம்: சிறுமை கண்டு பொங்குதல்', 'மலையக சுடர்மணிகள்', மாத்தளை பெ.வடிவேலனின் 'வல்லமை தாராயோ?', மலரன்பனின் 'கொலுஷா' ஆகிய ஆறு நூல்கள் வெளியிடப்படுகின்றன.

மலையக மக்கள் முன்னணி தலைவர் வே.இராதாகிருஷ்ணன் தலைமையில் மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்களான செயலாளர் பேராசிரியர் எஸ்.விஜயசந்திரன், தேசிய அமைப்பாளர் ஆர்.ராஜாராம், மலையக தொழிலாளர் முன்னணி பதில் செயலாளர் புஷ்பா விஸ்வநாதன் ஆகியோர் நூல்களை வெளியிட்டு வைப்பர்.



கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் நாங்கள் வெளியிட்ட மலையக அரசியல், சமூக, இலக்கிய நூல்கள் மலையக நூல் வெளியீட்டுத் துறையில் அழுத்தமான தடங்களை பதித்துள்ளன.

'மலையகத்தின் எழுச்சித் தலைவர் பெ.சந்திரசேகரன்' என்ற தலைப்பில் 2014 இல் வெளியிடப்பட்ட வரலாற்று நூல் நம் காலத்தில் வாழ்ந்து மறைந்த ஒர் அரசியல் தலைவனின் சாதனைப் பதிவாக அமைந்துள்ளது.

இரண்டு பதிப்புக்களை கண்ட அந்த நூல் லண்டனில் முதல் வெளியீட்டை நிகழ்த்தியது. அந்த வழிமுறையில் தேசிய தொழிலாளர் சங்க முக்கிய ஆளுமையான சி.வி. வேலுப்பிள்ளையின் 'மலையக அரசியல்; தலைவர்களும் தளபதிகளும்' என்ற நூல் மலையக அரசியல் வரலாற்றில் அரசியல் எழுத்துப் பதிவாகும். மலையக அரசியல் வரலாற்றை அறிய விரும்பும் எவரும் சி.வி. எழுதிய இந்த வரலாற்றுப் புதையலை கடந்து போக முடியாது என்கிறார் மலையக பேராசான் மு.நித்தியானந்தன்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் 'பத்திரிகையாளர் எஸ்.எம்.கார்மேகம்: வாழ்வும் பணியும்' என்று வெளியான நூல், ஈழத்தின் இதழியலில், குறிப்பாக மலையகப் பத்திரிகையுலகில் ஆற்றல்மிக்கவராகத் திகழ்ந்த அமரர் எஸ்.எம் கார்மேகத்தின் பெயரை வரலாற்றில் பதித்தது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதகிருஷ்ணனால், கம்போடியாவில் நடைபெற்ற சுமார் 1500 பேராளர்கள் கலந்துகொண்ட உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்டு அங்கீகாரம் பெற்றது. தொடர்ந்து லண்டனிலும் இந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.



புரட்சி பாவலன் பி.ஆர்.பெரியசாமியின் 'தோட்டத் தொழிலாளர் வீரப்போராட்டம்' என்ற நூல் 1957 இல் வெளியாகியது. ஐம்பத்தாறு ஆண்டுகள் கழித்து அந்த அரிய நூலைக் கண்டெடுத்து, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நாங்கள் மலையகத்தின் மூத்த ஆளுமைகளான பி.பி. தேவராஜ், தெளிவத்தை ஜோசப், பேராசிரியர் சோ. சந்திரசேகரன் ஆகியோரால் அந்நூலை கொழும்பில் வெளியிட்ட போது, அரசியல் அரங்கில் அதற்கு வரவேற்புக் கிடைத்தது.

அமரர் சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' 2022 இல் நூல் வடிவம் பெற்றது. தொழிற்சங்கப் போராட்டத்திற்காகத் தூக்கில் தொங்கிய ரா.வீராசாமி, ஐ.வேலாயுதம் ஆகியோரின் வரலாற்றை மிக விரிவாக, துல்லியமாகப் பதிவு செய்த மு.நித்தியானந்தனின் நீண்ட முன்னுரை, தொழிற்சங்கப் போராட்ட சரித்திரத்திற்குக் கிடைத்த அரும்பெரும் பொக்கிஷமாகும்.

மாத்தளை பெ.வடிவேலன் எழுதிய 'வல்லமை தாராயோ?' என்ற சிறுகதைத் தொகுப்பு சென்ற ஆண்டு தமிழகத்தில் வெளியாகி, டொக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி கல்லூரி முனைவர் குமார் ராஜேந்திரனின் ஒரு இலட்சம் ரூபா விருதினைப் பெற்று, மலையக எழுத்திற்குக் கடல் கடந்த அங்கீகாரத்தைத் தேடித் தந்தது.

இந்த ஆண்டு மாத்தளை மலரன்பன் சிங்களத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்த உலகச் சிறுகதைகளை 'கொலுஷா' (பிறமொழி சிறுகதைகள்) என்ற தலைப்பில் நாங்கள் வெளியிட்ட போது, சிங்கள_ தமிழ் இலக்கிய நல்லுறவுக்குப் பாலமாகவும் பலமாகவும் அமைந்தது. மாத்தளை சிங்கள எழுத்தாளர்கள் தங்கள் மாநாட்டில் அந்த நூலுக்கு கௌரவம் வழங்கினர்.

பேராசான் மு.நித்தியானந்தன் எழுதிய 'மலையகச் சுடர்மணிகள்', 'மலையக இலக்கியம்: சிறுமை கண்டு பொங்குதல்' என்ற இரண்டு நூல்கள் இவ்வாண்டு வெளியாகி, மலையக இலக்கியத்தின் அருமை பெருமைகளை தமிழ் கூறும் நல்லுலகெங்கும் எடுத்துச் சென்றுள்ளன. இதில் மலையக சுடர்மணிகள் தொகுதியில் மலையகத்தின் 18 ஆளுமைகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், 'மலையக இலக்கியம்: சிறுமை கண்டு பொங்குதல்' என்ற நூலில் மலையகத்தின் 22 ஆளுமைகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களின் 59 சிறுகதைகளை தொகுத்து, அவர் வாழும் நாளிலேயே அவரது கரங்களில் சமர்ப்பிக்க எண்ணியிருந்தோம். கதைகளை அவர் படித்து பிழைகளை திருத்திக் கொண்டிருந்த நேரத்தில் அவர் எம்மை விட்டு பிரிந்தது பெரும் துரதிருஷ்டமாகும். 'தெளிவத்தை ஜோசப் கதைகள்' என்ற தலைப்பில் 476 பக்கங்களில் மு.நித்தியானந்தனும், எச்.எச்.விக்ரமசிங்கவும் வெளியிட்டிருக்கும் தொகுப்பு மலையக நூல் வெளியீட்டில் தனி அத்தியாயம் பதிக்கிறது.

எதிர்வரும் காலங்களில் நாம் வெளியிடவிருக்கும் 'மலையகம் இங்கிருந்து எங்கே' பி.மரியதாஸ், எழுத்தாளர் அகிலன் அவர்களின் முன்னுரையுடன் சி.வி.வேலுப்பிள்ளையின் 'எல்லைபுறம்', 'கோப்பிக்கிருஷிக் கும்மி' ஆபிரகாம் ஜோசப், 'கோ.நடேசய்யர் சில ஆய்வுக்குறிப்புகள்' மு.நித்தியானந்தன் ஆகிய மலையக நூல்களும் மலையக அரசியல், சமூக, இலக்கிய வரலாற்றில் செழுமையைச் சேர்க்கும் என்பது திண்ணமாகும்.



**எச்.எச்.விக்கிரமசிங்க...**

# சவூதி தூதரகம் அனுஷ்டித்த சர்வதேச அரபுமொழி தினம்

கடந்த திங்கட்கிழமை (18.12.2023) அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச அரபுமொழி தினத்தை முன்னிட்டு இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரகம் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் 'அரபுமொழி கவிதை மற்றும் கலைகளின் மொழி' என்ற கருப்பொருளின் கீழ் பிரமாண்டமான நிகழ்வொன்றை வெற்றிகரமாக நடத்தியிருந்தது.

இந்நிகழ்வு சர்வதேச அரபுமொழி தினத்தையொட்டி இலங்கை இராஜதந்திர மட்டத்தில் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட முதல் நிகழ்வாகும். இது குறித்து இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலிதுல் கஹ்தானி மற்றும் தூதரக அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதரக இராஜதந்திரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரபுமொழி பேராசிரியர்கள், கல்விமான்கள், திணைக்கள அதிகாரிகள், அரபுக் கல்லூரி விரிவுரையாளர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை விஷேட அம்சமாகும். அரபுமொழி என்பது அல்குர்ஆனிய மொழி. அது சுமார் 25 நாடுகளின் முதன்மை மொழி மற்றும் 40 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட மொழியாகும். அத்துடன் உலகில் மிக அதிகமானவர்களால் பேசப்படும் மொழிகளிலும் ஒன்றாகும்.



இவ்வாறான சிறப்புகளை தன்னகத்தே கொண்ட அரபுமொழியின் முக்கியத்துவத்தை வெளிக்கொணரவும், அதனைக் கற்பதற்கான ஈர்ப்பினை வலுப்படுத்தவும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் பெரிதும் உதவுமென்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அரபுமொழி தினத்தை பாடசாலை மட்டங்களில் கொண்டாடுமாறு இலங்கை அரசாங்கம் கல்வி அமைச்சினூடாக வழிகாட்டல் செய்திருப்பதானது பாராட்டத்தக்க அம்சமாகும்.

சவூதி அரேபியா மற்றும் மொரோக்கோ நாடுகள் 1973 டிசம்பர் 18 ஆம் திகதி முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பினால் (UNESCO) அரபுமொழியும் உத்தியோகபூர்வ மொழியாக அங்கீகரிக்கப்பட்டு 2012 முதல் டிசம்பர் 18 ஆம் திகதி சர்வதேச அரபுமொழி தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




**அபூ அரீஜ் பாஹிர்...**



## இலங்கைக்கு சமூக பொருளாதார உதவிகளை நல்குவதில்

# அதிக அக்கறை எடுத்துக்கொண்ட குவைத் மன்னர் நவாப் அல் அஹமட் அல் ஜாபிர் அல் ஸபாஹ்

குவைத் நாட்டின் 16ஆவது மன்னரான அஷ்ஷெய்க் நவாப் அல் அஹமட் அல் ஜாபிர் அல் ஸபாஹ் தனது 86ஆவது வயதில் கடந்த சனிக்கிழமை (16) இறையடி சேர்ந்தார். இவர் வளைகுடாவின் ஸ்திரமானதும் முன்மாதிரியுமான தலைவராக அனைவராலும் மதிக்கப்பட்டார். காலஞ்சென்ற மன்னர் அஷ்ஷெய்க் ஸபாஹ் அல் அஹமட் அல் ஸபாஹ்வைத் தொடர்ந்து கடந்த மூன்று வருடங்களுக்குமுன் ஆட்சியைப் பொறுப்பெடுத்தார்.



1937 ஆம் ஆண்டு ஜூன் 25ம் திகதி குவைத் தலைநகரில் பிறந்த இவர், மன்னர் அஷ்ஷெய்க் அஹமட் அல் ஜாபிர் அல் ஸபாஹ்வின் 5வது மகனாவார். அன்றைய அரச பணிமனையான 'தஸ்மான் மாளிகையில்' வளர்ந்த இவர், முபாரகியா பாடசாலையில் கல்வி பயின்றார்.

மன்னர் நவாப் அல் அஹமட் அல் ஜாபிர் அல் ஸபாஹ்வின் இறையடியெய்திய செய்தியை அரச பணிமனை உத்தியோகபூர்வமாக அறிவித்ததோடு சகல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் இரத்துச் செய்து அல் குர்ஆன் ஓதல் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. திடீரென இதய நோய்க்குட்பட்ட மன்னர், கடந்த நவம்பர் மாதம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மன்னர் நவாப் 2006ஆம் ஆண்டு முடிக்குரிய இளவரசராக முடி சூட்டப்பட்டு 14 வருடங்கள் பதவி வகித்தார். பின் 2020 ஆம் ஆண்டு மன்னர் ஸபாஹ் அல் அஹமட் அல் ஜாபிர் அல் ஸபாஹ்வின் மரணத்தைத் தொடர்ந்து நாட்டின் மன்னராக அவர் பதவியேற்றார். குவைத் நாடு வளைகுடாவில் வடமேல் மூலையில் ஈராக்கையும் சவூதியையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது. இது மொத்தம் 17,818 கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டதொரு நாடாகும்.

2020 ஆம் ஆண்டு சர்வதேச மட்டத்தில் நாடுகளின் பொருளாதாரம் நெருக்கடிகளுக்கு உள்ளான போது மன்னர் நவாப் தம் நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகாமல் பாதுகாத்த பெருமைக்குரிய தலைவராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். என்றாலும் இவரது 03 வருட ஆட்சிக்காலத்தில் பலமுறை ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

குவைத்தானது 1962 ஆம் ஆண்டு தொடக்கம் 'பாராளுமன்ற அமைப்பை பின்பற்றி செனட் சட்ட சபை ஊடாக நிர்வாக அமைப்பை முன்னெடுத்து வருகிறது. குவைத் அரச அமைச்சர்கள் ஆளும் ஸபாஹ் குடும்பத்தினராலேயே நியமனம் செய்யப்படுகின்றார்கள். 50 உறுப்பினர்களைக் கொண்ட குவைத் மக்கள் சபையின் பிரதிநிதிகள் 04 வருடங்களுக்கு ஒருமுறை மக்கள் வாக்கெடுப்பால் தெரிவு செய்யப்படுகின்றனர். இங்கு பிரதிநிதித்துவ குழுக்கள் இயங்க இடமளிக்கப்பட்டுள்ள போதிலும், கட்சி அரசியலுக்கு அனுமதிக்கப்படவில்லை. அரசியலமைப்பின் பிரகாரம் குடும்ப ஆட்சியே குவைத்தில் இடம்பெறுகிறது



மன்னர் நவாப் அல் அஹமட் அல் ஜாபிர் அல் ஸபாஹ்

குவைத் மன்னர் யாப்பு ரீதியில் நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக விளங்குகிறார். அவர் கையொப்பமிட்டால் மாத்திரமே அங்கு சட்டங்கள் செல்லுபடியாகும். அதனால் மக்கள் சபையால் எடுக்கப்படும் தீர்மானங்கள் அனைத்துக்கும் மன்னரின் கையொப்பம் பெறப்படுவது அவசியம்.

### இலங்கை – குவைத் நட்புறவு

இலங்கையுடன் மிக நெருங்கிய நட்புறவைப் பேணிவரும் குவைத் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவி, ஒத்துழைப்புகளை நல்கி வருகின்றது. அத்தோடு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கூட 2011 களில் குவைத் இந்நாட்டுக்கு ஆதரவு நல்கியுள்ளது. அண்மையில் மறைந்த குவைத் மன்னர் அஷ்ஷெய்க் நவாப் அல் அஹமட் அல் ஜாபிர் அல் ஸபாஹ் இலங்கை அரசாங்கத்துக்கு மாத்திரமன்றி நாட்டில் வாழுகின்ற மூவின மக்களுக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்கி வருவதில் கூடுதல் கவனம் எடுத்துக்கொண்டவர் என்பது இத்தருணத்தில் நன்றியுணர்வுடன் நினைவுகூரப்படுவது பொருத்தம்.

இந்நாட்டு மக்களுக்கு மருத்துவ உதவிகள் தேவைப்பட்ட காலப்பகுதியில் மனிதாபிமான அடிப்படையில் மருந்துப்பொருட்களையும் கூட குவைத் அனுப்பி உதவியுள்ளது. அதேபோன்று நாட்டின் கல்வித்துறை மேம்பாட்டுக்கும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் கூட நிறைய உதவிகளை குவைத் நாடும் குவைத் மக்களும் வழங்கி வருகிறார்கள்.

அதேநேரம் இந்நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கும் மத்திய கிழக்கின் முக்கிய நாடுகளில் ஒன்றாக குவைத் விளங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் நாட்டின் வேலையின்மையைக் குறைப்பதற்கு குவைத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இந்நாட்டின் முஸ்லிம் சமூகத்தினர் மாத்திரமல்லாமல் ஏனைய சகோதர இன மக்களும் பயனடையும் வகையில் காலத்திற்கு காலம் பல்வேறு உதவிகளையும் குவைத் அரசு நல்கி வருகிறது. அந்த வகையில் வளப்பற்றாக்



குறை நிறைந்த பாடசாலைகளுக்கு குவைத் அரசின் உதவியுடன் புதிய கட்டடங்கள் மற்றும் தளபாட வசதிகளும் பெற்றுக்கொடுக்கின்றமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். இவற்றுக்கு மறைந்த மன்னர் பேருதவியாக இருந்து செயற்பட்டார்.

உலகில் எண்ணெய் வளம் கொண்ட நாடுகளில் செல்வாக்குமிக்க நாடாக விளங்கும் குவைத், வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரும் வகையில் பல புதிய சீர்திருத்தங்களை அறிமுகமாக்கியுள்ளது. அதனால் தான் கொவிட் 19 உலகத்தை தாக்கிய காலத்திலும் அதன் பின்னரும் பொருளாதார, அரசியல், பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து வருகின்ற நாடு குவைத் என்றால் அது மிகையாகாது.

**அஷ்ஷெய்க்**
**எம்.ஏ.ஏ நூருல்லாஹ் (நளீமி)**
பணிப்பாளர், அல் ஹிமா இஸ்லாமிய சேவைகள் அமைப்பு



# ஹம்பாந்தோட்டை இக்ராவில் 10 வருட பூர்த்தி விழா

















ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் பத்து வருட பூர்த்தியை முன்னிட்டு கொண்டாடப்படும் தசம வருடவிழா பாடசாலையின் அதிபர் எம். இஸட். எம். இர்பான் தலைமையில் ஹம்பாந்தோட்டை சிங்கப்பூர் நட்புறவு மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென் மாகாண கல்வித்திணைக்களத்தின் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். ஏ. எம். மஷாயிர், ஹம்பாந்தோட்டை கோட்டக் கல்விப்பணிப்பாளர் பிரார்தனா ஜயசூரிய, ஸாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் எம். எம். ரிஸான், ஹம்பாந்தோட்டை நியூஏசியன் ஹாட்வெயார் உரிமையாளர் நிஸாம் காஸிம், வங்கிகளின் முகாமையாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், தொழில் அதிபர்கள் பாடசாலை அபிவிருத்தி நிர்வாக சபை உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள், புத்திஜீவிகள், நலன் விரும்பிகள், பழையமாணவர்கள், பெற்றோர்கள் உட்பட மேலும் பெருந்திரளானோர் கலந்துசிறப்பித்தனர். இந்நிகழ்வில் சாதனையாளர் கௌரவிப்பும் இடம்பெற்று பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன.

BMICH இல் அலுவலகம் அமைத்து

# வாகனங்கள் விற்பனை செய்வதாக காண்பித்து 05 கோடி ரூபா மோசடி

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்யும் அலுவலகமொன்றை நடத்தி வந்த நபர் சுமார் ஐந்து கோடி ரூபாவுடன் தலைமறைவாகியுள்ளதாக குருந்துவத்தை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சொகுசு ஜீப் மற்றும் சொகுசு கார் வாங்க வந்த இருவரிடமிருந்தும் பணத்தை ஏமாற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அந்த காரியாலயத்தில் பணிபுரிந்த 03 பெண்கள் உட்பட 09 பேர் விசாரணைக்காக பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தின் இரண்டாவது மாடியில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டதுடன், நேற்று (20) பிற்பகல் பாணந்துறை மற்றும் மாத்தறை பிரதேசங்களைச் சேர்ந்த இருவர் காரியாலய அறிவித்தலின்பேரில் வாடிக்கையாளருக்கு விற்பதற்காக அவ் வாகனங்களுடன் வந்திருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரண்டு வாகனங்களையும் வாடிக்கையாளர்கள் வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்து ஜீப் வாங்குவதற்கு மூன்று கோடி 30 லட்சம் ரூபாயும், கார் வாங்குவதற்காக, ஒரு கோடியே 25 லட்சம் ரூபாயும் காரியாலயத்தை நடத்தி வந்த நபரிடம் கொடுத்ததாக பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஆவணங்கள் தயாரிக்கப்படும் வரை விற்பனையாளர்கள் மற்றும் கொள்வனவு செய்பவர்களை பொறுத்திருக்குமாறு கூறிய சந்தேக நபர், அதன் போது காரியாலயத்தின் பின் கதவு ஊடாக பணத்துடன் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## இலங்கை திறந்த அரச கூட்டிணைவு...

வனங்களும் ஆயிரக்கணக்கிலான சிவில் சமூக அமைப்புக்களும் திறந்த அரச கூட்டிணைவு வேலைத்திட்டத்துடன் தொடர்புபட்டுள்ளன. திறந்த அரச கூட்டிணைவு வேலைத்திட்டத்தின் உறுப்பினராக இலங்கை, 2023 2025 வரையான காலப்பகுதிக்கான செயல் திட்டத்தை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் அமைச்சரவை அனுமதியுடன் அரச மற்றும் சிவில் தரப்பினர்களுடன் ஒன்றிணைந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. திறந்த அரச கூட்டிணைவு வேலைத்திட்டத்தின் இணை செயற்பாட்டாளராக தங்களது பெறுமதியான ஆலோசனைகளை வழங்குவதற்கான வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி இலங்கைக்குள் திறந்த, ஒத்துழைப்புடன் கூடிய பொறுப்புக்கூறும் அரச நிர்வாக முறைமையொன்றை மேம்படுத்த மக்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. மேலதிக விபரங்களை ஜனாதிபதி செயலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான https://www.presidentsoffice.gov.lk ஊடாக காணலாமென்றும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## GCE A/L மாணவர்களுக்கு வழங்கும்...

கடந்த வருடமும் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் டிசம்பர் மாதம் 01ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. நாட்டின் நூறு கல்வி வலயங்களையும் உள்ளடக்கும் வகையில், ஒவ்வொரு வலயத்திலிருந்தும் 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, 5,000 மாணவர்களுக்கு மாதாந்தம் 6,000 ரூபா புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

2022 (2023) ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்கு முதல் முறையாகத்தோன்றி, பரீட்சையில் சித்தி பெற்று, உயர்தரம் கற்கத் தகுதிபெற்று, அரச பாடசாலையிலோ அல்லது கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலையிலோ கல்வி பயிலும், விண்ணப்பதாரரின் குடும்பத்தின் மாத வருமானம் ரூ. 1,00,000 வுக்கு குறைவாக காணப்படுகின்றமை இந்த புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகுதியாகும்.

இந்த புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் அது தொடர்பான விபரங்களை ஜனாதிபதி செயலகத்தின் இணையத்தளங்கள்: presidentsoffice.gov.lk, ஜனாதிபதி நிதியம்: presidentsfund.gov.lk மற்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு: pmd.gov.lk ஆகியவற்றிற்குச் சென்று பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்த பின், குறித்த மாணவர்கள், 2023 டிசம்பர் 22ஆம் திகதிக்கு முன், தாங்கள் பரீட்சை எழுதிய பாடசாலையின் அதிபரிடம் விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டும்.

செல்லுபடியாகும் காலம் மீண்டும் நீட்டிக்கப்படாதென எதிர்பார்க்கப்படுவதால், தகுதியுடைய சகல மாணவர்களும் டிசம்பர் 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி நிதியம் கேட்டுக்கொள்கிறது.

## யானை மனிதன் மோதல்களை...

காணப்படும் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே வனஜீவராசிகள், வன வளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, வன வளத்தைப் பாதுகாப்பதே வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணியாகும். நான் அமைச்சராக பதவியேற்ற பின்னர், திணைக்களத்தின் செயற்பாடுகள் புதிய தொழில்நுட்பத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய வனப் பகுதிகளை அண்மித்து வாழும் மக்களின் பாதுகாப்பிற்கான உதவிகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

வன வளம் அவர்களின் வாழ்வாதாரத்துக்கு வழிவகுப்பதாக அமையும் பட்சத்தில் மக்கள் வனத்தை பாதுகாப்பர். வனப் பகுதிகளின் எல்லையில் வாழும் மக்கள், வனத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய மூலப்பொருட்கள் பல உள்ளன. வனப்பகுதிகளை அண்மித்து வாழ்வோருக்கு மேற்படி மூலப்பொருட்களைத் தேடுவதற்கான அனுமதியை வழங்கும் பட்சத்தில் அவர்களால் வனங்களும் பாதுகாக்கப்படும். பசுமை மேம்பாட்டுத் திட்டங்களும் வலுப்படும். சுற்றுச்சூழலிருக்கும் மூலப்பொருட்களை விற்பனை செய்யும் பட்சத்தில் பெருளவான டொலர்களை ஈட்டிக் கொள்ள முடியும்.இதனால், மாற்றுச் சிந்தனைகளுடன் செயற்பட எதிர்பார்க்கிறோம். நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 29% ஆக காணப்படும் வனங்களைக் கொண்டு முழுமையாக பயனடைவதற்கும், பாதிக்கப்பட்ட வனங்களின் பாதுகாப்புக்காக புதிய மரங்களை நடவும் நடவடிக்கை எடுப்போம். நாட்டிலுள்ள வன வளத்தை மேம்படுத்தும் வகையில் அதற்கு அவசியமான மரக் கன்றுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம்.

வீதிகளின் இரு மறுங்கிளும் மரங்களை நடுவதற்கு அவசியமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. மக்களின் வாழ்வாதாரத்துக்கு அவசியமான மரக் கன்றுகளைப் பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். எமது அமைச்சு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 135% இலாபத்தை ஈட்டியுள்ளது.

## கிளிநொச்சி மாவட்ட வெள்ளம்...

வழங்குவது தொடர்பில் ஆராய்ந்தார். அத்துடன் இரணைமடுக்குளம் வான் கதவுகள் திறக்கப்பட்டதால் தாழ் நிலப்பகுதிகளில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டமை தொடர்பில் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இதையடுத்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு ஜனாதிபதியின் வடக்கு விஜயம் தொடர்பிலும் கருத்து தெரிவித்தார்.

## இறக்குமதியான 365 பாசுமதி அரிசி...

சோதனையில் தெரியவந்துள்ளது. இந்த 365 மாதிரிகளில் 203 மாதிரிகள் மட்டுமே இறக்குமதிக்கு தரமானதாக இருந்தது. அப்போது, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து இலங்கைக்கு பாசுமதி அரிசி இறக்குமதி செய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பாசுமதி அரிசி மாதிரிகளின், தர அறிக்கையை வழங்குமாறு விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர அண்மையில் பத்தலகொட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துக்கு அறிவித்தார். இதன்படி, மூன்று வருடங்களில் இந்தியாவிலிருந்து 109 பாசுமதி அரிசி மாதிரிகள் பத்தலகொட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. இதில், 68 மாதிரிகள் ஏற்கத்தக்கவையாக இருந்ததோடு , 41 மாதிரிகள் நிராகரிக்கப்பட்டன.

அந்த காலகட்டத்தில், பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்வதற்காக 214 அரிசி மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டன, அவற்றில் 121 மாதிரிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், 93 அரிசி மாதிரிகள் தரம் இல்லாததால் நிராகரிக்கப்பட்டன .

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் மற்ற நாடுகளிலிருந்து 42 அரிசி மாதிரிகள் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டன, அவற்றில் 14 மாதிரிகள் பொருத்தமான தரத்தில் இருந்தன. அத்துடன், 28 மாதிரிகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக பத்தலகொட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் அமைச்சருக்கு வழங்கிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## போதகர் ஜெரோமின்...

பெர்னாண்டோவினால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை ஜனவரி 04 இல், விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேற்படி மனு மீதான விசாரணை,

மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்தி முன்னிலையில் நேற்று (21) முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சட்டமா அதிபரின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சிரேஷ்ட அரச சட்டத்தரணி சமிந்த விக்கிரமசிங்க நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தார். மேற்படி நபர் தாக்கல்செய்துள்ள மனுமீதான விசாரணையை பிறிதொரு தினத்திற்கு பெற்றுத்தருமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இதன்போது, ஜெரோம்பெர்னாண்டோ சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி அனுஷ பிரேமரத்ன தெரிவிக்கையில், இந்த சந்தேகநபர் கிறிஸ்தவ மதத்தவர் என்பதால் அண்மையில் வரும் நத்தாரை கவனத்திற் கொண்டு மனுமீதான விசாரணையை இன்று (நேற்று) மேற்கொள்ளவேண்டுமென கேட்டுக்கொண்டார்.

அந்த வேண்டுகோளுக்கு ஆட்சேபனை தெரிவித்த சிரேஷ்ட அரச சட்டத்தரணி, மனுவை சாதாரண முறைமையின் கீழ் விசாரணைக்கு எடுத்துக்கொகள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

சிறிபால என்றாலும் சோமபால என்றாலும் நடைமுறையிலுள்ள சட்டம் போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கும் ஒன்றாகவே இருக்கவேண்டும். அத்துடன் இந்த சந்தேகநபர் பல மாதங்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தவிர்த்து வந்தவர். அந்தவகையில் சட்டத்தின் முன் சகலரும் சமம். எந்த விசேட சலுகைகளும் வழங்கப்படக்கூடாது என்றும் கேட்கப்பட்டது . அதற்கிணங்கவே மேற்படி மனுமீதான விசாரணையை ஜனவரி 04 ஆம் திகதி முன்னெடுக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

## தேர்தல்களில் ஸ்ரீலங்கா பொதுஜன...

தலைவருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அனைத்து வாக்காளர்களும் எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிக்கும் போது அவ்வாறு வாக்களிக்கப்படும் கட்சியின் வரிக் கொள்கை மற்றும் கடந்த கால பொருளாதார செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நேற்று விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, அதில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதிகரித்த வரி விதிப்புக் காரணமாக நாட்டில் கல்விமான்கள் மற்றும் ஏனைய துறை சார்ந்த நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ள மை சிக்கல்களை உருவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ‘யுக்திய’ விசேட சுற்றிவளைப்புகள்...

ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன்184 சந்தேக நபர்கள் புனர்வாழ்வுக்காக புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் விசேட செயலணிப் பிரிவின் பட்டியலில் தேடப்படும் சந்தேக நபர்கள் 218 பேரும் இந்நடவடிக்கைகளின் போது கைதாகினர்.

24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில், 01 கிலோவுக்கு அதிகமான ஹெரோயின் போதைப்பொருள், 648 கிராம் ஐஸ்போதைப் பொருள், 11 கிலோவுக்கு அதிகமான கஞ்சா, 46 கிலோகிராம் மாவா போதைப்பொருள், போதை மாத்திரைகள் 19,507 ஆகியவற்றையும் கைப்பற்ற முடிந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

## மின்சார சபை ஊழியர்களுக்கான...

விஜேசேகர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார். அத்துடன் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் 25% சம்பள அதிகரிப்பையும் நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இது தொடர்பிலும் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அமைச்சர் வழிகாட்டல்களை வழங்கியுள்ளதாக அந்த சபையின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மின்சார சபை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் சம்பந்தமாக தகவல்கள் மற்றும் அதிகாரிகள் வாடகைக்குப் பெற்றுள்ள வாகனங்கள், அதற்கு வழங்கும் வாடகைப் பணம் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையை தமக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றும் மின்சார சபை தலைவரிடம் அமைச்சர் கேட்டுள்ளார்.

## பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த...

ஆணையாளர் சங்கத்தின் 19ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிர்வாகத்தில் 82% இச்சங்கம் அங்கத்துவம் பெற்றுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிர்வாகத்துடன் நேரடியாகச் செயற்படும் பிரதான உத்தியோகத்தர்கள் மாத்திரமே இச்சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். நாட்டின் வர்த்தகத் துறையில் உள்ள சவால்கள் மற்றும் அதிக போட்டித்தன்மை கொண்ட பொருளாதாரத்தை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதன்படி எமது அரசாங்கம், இந்தியா, சீனா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை செய்து செயலாற்றி வருகிறது. இதுமாத்திரமன்றி, அதையும் தாண்டிய வாய்ப்புக்களை ஆராய்வதுடன் ஐரோப்பிய யூனியனுடனான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதே எமது இலக்காகும். அந்த இலக்கை அடைவதில் எதிர்கொள்ளும் போட்டியை முறியடிக்கும் வகையில், இலங்கை தற்போது முழுமையான டிஜிட்டல் மயமாக்கலில் ஈடுபட்டுள்ளது. அதன்படி, டிஜிட்டல் பரிமாற்ற முகவர் நிலையம் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான ஆராய்ச்சி மையமும் (AI) இணைந்து செயல்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் நாட்டை முழுமையாக டிஜிட்டல் மயமாக்குவதற்கான விரிவான திட்டத்தை உருவாக்குவதே, இதன் முதன்மை நோக்கமாகும்.

பசுமைப் பொருளாதாரமாக மாறுவதற்கான முயற்சிகளுடன், உலகளாவிய நிலைபேற்றுத் தன்மை இலக்குகளை அடைவதற்கு, சூழலுக்கு உகந்த நடைமுறைகளை உறுதி செய்வதன் மூலம் நிகர பூஜ்ஜிய இலக்கை அடைய இலங்கை செயற்பட்டு வருகிறது. இந்த இலக்குகளை அடைய, குறுகிய காலத்தில் குறைந்த முயற்சியுடன் எளிதாக அடையக்கூடிய துறைகளை நாம் கண்டறிந்து மேம்படுத்த வேண்டும். அதன்படி, சுற்றுலா, விவசாயம், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத்தை நவீனப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. நெல் விளைச்சலை மேம்படுத்துதல், பயன்படுத்தப்படாத நிலங்களை விடுவித்தல் மற்றும் சிறிய அளவிலான விவசாயத்தை ஊக்குவிப்பதில் நாம் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொடர்பில், இலங்கையின் இயலுமை குறித்து இன்னும் முழுமையாக மதிப்பிடப்படவில்லை. இந்தியா உட்பட ஏனைய நாடுகளுக்கு எமது மேலதிக வலுசக்தியை ஏற்றுமதி செய்ய முடியும் என்று கண்டறிந்துள்ள, காற்று மற்றும் சூரிய வலுசக்தித் திட்டங்களில் கணிசமான முதலீடுகளைச் செய்ய நாம் எதிர்பார்க்கிறோம் என்றார்.

## வருடாந்த அனுமதிப்பத்திரங்களை...

போதும், மூன்று வருடங்களுக்கு அதிகமான காலம் புதுப்பிக்கப்படாதுள்ளன. இந்த வாகனங்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை நாடளாவிய ரீதியில் பதிவு செய்யப்பட்டுள்ள 83 இலட்சம் வாகனங்களில் 55 இலட்சம் வாகனங்களே பதிவை புதுப்பித்துள்ளன.

அவ்வாறு பதிவை புதுப்பித்துக் கொள்ளாத வாகனங்கள் தொடர்பில், ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் அடுத்த வருடத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் உயர்மட்ட அதிகாரிகள் உள்ளடங்கிய குழு ஒன்றின் மூலம் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகிறது. அடுத்த வருடத்தில் அந்த வாகனங்கள் தொடர்பில் விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இன்றைய பலன்கள்

**( 21. 12. 2023 )**



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
தன வரவு வந்தாலும் வந்த நிமிடமே செலவாகி விடும். உத்தியோகத்தில் மேல் அதிகாரிகள் உங்கள் திறமைக்கு உரிய அங்கீகாரம் வழங்க மாட்டார்கள்.

**ரிஷபம்:**
பங்குச்சந்தையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு எதிர்ப்பாராத இலக்கை அடைய முடியும். ஊர் மாற்றம், இடமாற்றம் பற்றி எடுத்து முடிவு பலன் தரும்.

**மிதுனம்:**
பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேரும் வாய்ப்பு உருவாகும். உத்தியோகத்தில் சில பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும்.

**கடகம்:**
தொழில் வளர்ச்சிக்கு முதலீடுகள் செய்ய வாங்கிய இடத்தை விற்க நேரிடும். அணிகலன்களை அடமானம் வைக்கும் சூழ்நிலை கூட உண்டு.

**சிம்மம்:**
தைரியத்தையும் தன்னம்பிக்கையும் தளர விட வேண்டாம். செல்வ இறுதியில் தடை ஏற்படாது. தொட்டது துலங்கும்.

**கன்னி:**
தன வரவு தாராளமாக வந்து சேரும். வீடு ,இடம் வாங்கும் யோகம் உண்டு. பூர்வீக இடத்தை விற்றுவிட்டு புதிய சொத்துக்கள் வாங்கலாமா என்று யோசிப்பீர்கள்.

**துலாம்:**
பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் நடைபெறலாம் உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் மனதில் இடம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:**
பொன் கொளிக்கும் நேரமாகும். எதிர்பார்த்த காரியங்கள் இப்பொழுது நிறைவேறும். பங்குச்சந்தையில் லாபம் உண்டு.

**தனுசு:**
எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். உத்தியோகத்தில் கேட்ட இடத்திற்கு மாறுதல்கள் கிடைக்கும். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம்.

**மகரம்:**
சொத்துக்கள் விரயமாகலாம். என்றைக்கோ குறைந்த விலையில் வாங்கி போட்ட சொத்து இப்போது அதிக விலைக்கு விற்கலாம்.

**கும்பம்:**
பெற்றோரின் ஆதரவு பெருமை சேர்க்கும். பகைமை நிலை மாறும். இந்த நேரம் மிகுந்த நற்பலன்கள் கிடைக்கும் .

**மீனம்:**
பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். நீண்ட தூர பயணங்களால் நன்மை கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் எதிர்பாராத விதத்தில் மாற்றங்கள் ஏற்படலாம்.

## பட்ஜட்: முன்மொழிவு... (03ஆம் பக்கத் தொடர்)

உருவாவது தொடர்பான விடயங்களை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் பிரதமரிடம் முன்வைத்தனர்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், புதிய வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவாக முன்னோக்கிச் செல்லும் பாதை குறித்து அறிவித்துள்ளதாகவும், ஆளுநர்கள் மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்கள் இணைத் தலைவர்களாக மாவட்ட மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## இலங்கை-இந்திய மீனவர்... (03ஆம் பக்கத் தொடர்)

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையிலான இலங்கைத் தூதுக் குழுவினர், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவை அண்மையில் சந்தித்தனர்.

கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்குமிடையில் காணப்படும் தொடர்புகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் வரலாற்று காலமுதல் காணப்படும் நெருங்கிய உறவுகளை தொடர்ந்தும் வலுவான முறையில் கொண்டு செல்ல வேண்டியதன் அவசியத்தை இந்திய சபாநாயகர் வலியுறுத்தினார். தற்போதைய பொருளாதார நிலைமையின் போது, இலங்கைக்குத் தொடர்ந்தும் பலமாக இருப்பதாகவும் இந்திய மக்களவை சபாநாயகர் உறுதியளித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்தன தலைமையிலான குழுவினர் மாநிலங்களவைத் தலைவர் மற்றும் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் ஜகதீப் தங்கரை சந்தித்தனர்.

இச்சந்திப்புக் குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய மாநிலங்களவைத் தலைவர், இலங்கையிலிருந்து இதுபோன்றதொரு தூதுக்குழு ஐந்து வருடங்களின் பின்னர் இணைந்திருப்பதாகத் தெரிவித்தார்.

இரு நாட்டு மக்களுக்கும் இடையே உள்ள ஆழமான உறவை மேலும் பாதுகாத்துப் பேணுவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வு காண்பது அத்தியாவசியமானதென, சபாநாயகர் மஹிந்த யாப்பா தலைமையிலான தூதுக்குழுவினர் வலியுறுத்தினர்.

## இலங்கை மாணவர்... (03ஆம் பக்கத் தொடர்)

வயதான காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரிட்டனுக்கான உயர் ஸ்தானிகர் ரோஹித போகொல்லாகம, மரணமான ஜயசுந்தரவின் பெற்றோருடன் தொடர்பு கொள்வதற்கு தனிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டார். சடலத்தை விரைவாக நாட்டுக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை துரிதப்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இயலாமையுடைய நபர்களுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

கொண்ட அரசாங்க பொறிமுறையை உருவாக்க உதவுமாறு இயலாமையுடைய நபர்கள், இயலாமையுடைய நபர்கள் பற்றிய பாராளுமன்ற ஒன்றியத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் ஒன்றியத்தின் உறுப்பினர்களான மதுர விதானகே மற்றும் (வைத்தியகலாநிதி) சுதர்ஷினி பெர்னாந்துபுள்ளே ஆகியோரும், தலைவரின் அனுமதியுடன் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் மற்றும் (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதி ரணிலை... (03ஆம் பக்கத் தொடர்)

அந்த வகையில் 2024ஆம் ஆண்டு நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சிறந்த ஆண்டாக அமைய வேண்டும். அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே சகல கட்சிகளும் இணைந்து வேட்பாளராக நிறுத்துவது உறுதி. எவரும் போட்டியிட முடியும். எனினும், மிக நெருக்கடியான காலத்தில் நாட்டிற்கு தலைமைத்துவம் வழங்கி ஆட்சியை முன்னெடுத்துச் செல்பவரே அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## A/L பரீட்சார்த்திகளி அட்டைகளை...

இருந்தால் இதன்போது திருத்திக் கொள்ள முடியும். https://onlineexams.gov.lk/onlineapps/ என்ற இணையத்தளம் ஊடாக திருத்தங்களை, செய்து கொள்ள முடியும் என ஆணையாளர் கூறியுள்ளார்.

# ஒரு கோடியே 80 லட்சம் முட்டைகளை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் தட்டுப்பாடின்றி நியாயமான விலையில் நுகர்வோருக்கு முட்டைகளை விற்பனை செய்யும் வகையில் மேலும் ஒரு கோடியே 80 லட்சம் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது .

உள்ளூர் சந்தைகளில் முட்டைகளின் விலை வெகுவாக அதிகரித்துச் செல்லும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைக்கிணங்க இந்தியாவிலிருந்து மேற்படி ஒரு கோடியே 80 இலட்சம் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

முட்டைகளுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் இதுவரை அரச பொது வாணிப கூட்டுத்தாபனம் மூலம் 155 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது .

அதனையடுத்து எதிர்வரும் டிசம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் மேலும் ஒரு தொகை முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ அமைச்சரவைக்கு பத்திரம் ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

அது தொடர்பில் இம்முறை அமைச்சரவையில் அவரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.





மத்திய கொழும்பு கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள இருமொழி பாடசாலையான ஆட்டுப்பட்டித்தெரு மகளிர் கல்லூரிக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், களவிஜயமொன்றை மேற்கொண்டு பாடசாலை நிலமையை கேட்டறிந்த போது......










கொழும்பு, கலாநிதி பதியுதீன் மஹ்மூத் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு கலைவிழா நேற்று நடைபெற்றது. சின்னஞ்சிறார்களின் வண்ண நடனங்கள், பாடல்கள், அபிநயங்கள், பேச்சு, கராட்டி போன்ற நிகழ்வுகள் இக்கலைவிழாவில் மேடையேற்றப்பட்டன. மிகவும் சிறப்பாக நடைபெற்ற இக்கலைவிழாவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர், மேல்மாகாண தமிழ்ப்பிரிவு கல்விப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், பெற்றோர், நலன்விரும்பிகள் பங்கேற்றனர்.

## பறகஹதெனிய தேசிய பாடசாலையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு



பறகஹதெனிய தேசிய பாடசாலையின் 2023ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் வைபவம் பறகஹதெனிய தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், கல்லூரியின் அதிபர் ஐ.அப்துர் ரஹ்மான் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பறகஹதெனிய தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவில் பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாணவர்களும் பரிசில்கள் வழங்கி ஊக்கமூட்டப்பட்டதுடன் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழும் 100 க்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழுடன் பதக்கமும் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களான, எம்.எச்.எம். தாரிக் ( 149), எம். எஸ்.எஸ். ஸஹீமா ( 150), எம்.ஐ. ஹில்மா ( 152), எம். ஆர். றிபாத் (159), எம். எஸ். துர்ரா (163), எம். ஆர். றுஹ்மா ( 165), ஆர்.எப். பர்ஹா ( 169), எம். எஸ். ஸஹீர் அஹமட் ( 188) ஆகியோருக்கு சான்றிதழ், பதக்கம் என்பவற்றுடன் கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அத்துடன் தரம் 5 இல் கல்வி கற்பித்த ஆசிரியர்களும் கேடயங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் தற்போது தரம் நான்கில் கல்விகற்கும், அடுத்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களை ஊக்கமளிக்கும் விதமாக அவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வடமேல் மாகாண ஆளுநரின் இணைப்பாளராக ரபீக் நியமனம்



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் நகரசபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களுக்கான வடமேல் மாகாண ஆளுநரின் விஷேட இணைப்பாளராக முன்னாள் நகர பிதா எம்.எஸ். எம்.ரபீக் நியமிக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்களுக்கான விஷேட கூட்டம் நேற்று முன்தினம் (19) மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே, வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வடமேல் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள் அனைவரும் அவர்களின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் ஆளுநரின் விஷேட இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி, புத்தளம் நகர சபையின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.எம். ரபீக் , புத்தளம் நகரசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளுக்கான ஆளுநரின் இணைப்பாளராக செயற்படுவார்.

அத்துடன், பொதுமக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளை ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு செல்வது, ஆளுநரின் புத்தளம் விஜயத்தை ஒழுங்குபடுத்துவது, அபிவிருத்தி திட்டங்களுக்கான திட்ட மொழிவுகளை முன்வைப்பது போன்ற பணிகள் ஆளுநரின் இணைப்பாளர்களுக்குரிய அதிகாரங்களாக வழங்கப்பட்டுள்ளன.



இலங்கை மற்றும் ஜித்தாவை தளமாகக் கொண்ட பலதரப்பு நிறுவனங்களுக்கு இடையிலான பரஸ்பர நலன்களை மேம்படுத்துவது குறித்த கலந்துரையாடல் கவுன்சல் ஜெனரல் பலாஹ் அல்ஹப்ஷி மௌலானா, இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பின் பொதுச் செயலாளர் சிறப்பு தூதுவர் மற்றும் ஆலோசகர் மற்றும் சவூதி அரச குடும்ப உறுப்பினரின் சிறப்பு ஆலோசகர் செரன்டிப் இன்டர்நெஷனல் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரியாஸ் சாலி ஆகியோருக்கிடையில் அண்மையில் இச்சந்திப்பு நடைபெற்றது.

## கற்பிட்டி ஏத்தாளை பகுதியில் வீதி விபத்து; குடும்பஸ்தர் பலி

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கற்பிட்டி ஏத்தாளை பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கற்பிட்டி பாலக்குடா , கரடிப்பானி வத்தையைச் சேர்ந்த தெஹிவலகே ஜானக ஏரங்க கொஸ்தா (வயது 37) எனும் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தலவில பகுதியில் இருந்து நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்திற்கு மரக்கறிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறியுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று பின்னால் சென்று மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## காட்டு யானையை கொலை செய்த சந்தேக நபர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கஹட்டகஸ்திகிலிய பகுதியில் சட்டவிரோத மின்வேலியில் சிக்கவைத்து காட்டுயானை ஒன்றினை கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ரத்மல்கஹவெவ கதுறுகஸ்கட பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய விவசாயி ஒருவரையே கஹட்டகஸ்திகிலிய வட்டார வன ஜீவராசிகள் திணைக்கள அலுவலக அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நெலுகொள்ளாகட திருக்குராகம பகுதியில் அமைந்துள்ள சோளச் சேனைக்கு பொருத்தப்பட்டிருந்த சட்டவிரோத மின்வேலியில் சிக்கி காட்டுயானை உயிரிழந்த சம்பவம் தொடர்பிலேயே குறித்த விவசாயி நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக வேண்டி சந்தேக நபரை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர் .

## 'BOC Sprits awards 2022' ஊடாக அயராது பாடுபடும் பணியாளர்களை இலங்கை வங்கி கௌரவித்தது





BOC Sprits awards 2022 ஊடாக அயராது பாடுபடும் பணியாளர்களை இலங்கை வங்கி கௌரவித்தது. "ஒற்றுமையாக பணியாற்றுவோம் ஒற்றுமையுடன் வெற்றி பெறுவோம்"

இலங்கை வங்கியின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபடும் கிளைகளையும் பணியாளர்களையும் கௌரவிக்கும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட BOC Sprit awards 2022 வருடாந்த விருது வழங்கல் விழாவானது இலங்கை வங்கியின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி றொனால்ட் சி. பெரேராவின் தலைமையில் கொழும்பிலுள்ள ஷங்ரில்லா ஹோட்டலில் இடம்பெற்றது.

இலங்கை வங்கியின் பொது முகாமையாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி ரஸல் பொன்சேக்கா உள்ளிட்ட நிறுவன நிறைவேற்று முகாமைத்துவத்தின் உறுப்பினர்கள், கிளை முகாமையாளர்கள் மற்றும் கிளை பணியாளர்கள் எனப் பலரும் இவ்விருது வழங்கலில் கலந்து கொண்டனர்.

"ஒற்றுமையாக பணியாற்றுவோம் ஒற்றுமையுடன் வெற்றி பெறுவோம்" என்றத் தொனிப்பொருளின் கீழ் நடத்தப்பட்ட இவ்வருடாந்த விருது வழங்கல் விழாவில் நாட்டின் அதிசிறந்த கிளை, 5S எண்ணக்கருவை சிறப்பாக நடைமுறைப்படுத்துகின்ற கிளை மற்றும் பசுமை வீட்டுத் தோட்டத்தினைக் கொண்ட கிளை என மூன்று அதிசிறந்த விருதுகள் வழங்கப்பட்டன. நாட்டின் அதிசிறந்த கிளைக்கான விருதினை இலங்கை வங்கியின் மதுரங்குளிய கிளை பெற்றுக்கொண்டதுடன், இந்நிகழ்வில் மொத்தமாக 46 விருதுகள் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

கிளை செயற்பாடுகளுக்கான பிரதிப் பொது முகாமையாளர் பிரியால் சில்வா அவர்களின் வழிநடத்தலின் கீழ் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

கடினமான தருணங்களிலும் இவ்விருது வழங்கல் விழாவினை நடத்துவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தோம். நாட்டின் அதிசிறந்த கிளை, 5S எண்ணக்கருவை சிறப்பாக நடைமுறைப்படுத்துகின்ற கிளை மற்றும் பசுமை வீட்டுத் தோட்டத்தினைக் கொண்ட கிளை போன்ற பிரிவுகளில் விருதுகளை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டோம். இலங்கை வங்கிக்கு இதுவோர் முக்கியமான மற்றும் விசேடமான விருது வழங்கல் என அடையாளப்படுத்த முடியும்.

கிளை மற்றும் பிரதேச மட்டத்தில் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வழங்கப்படுகின்ற சேவையை கௌரவித்தல் மற்றும் பணியாளர்களின் அர்ப்பணிப்பை கௌரவித்தல் ஊடாக அவர்களை ஊக்குவித்தலே இதன் நோக்கமாகும். இவ்விருதுகளை பரிந்துரைத்து தேர்வுசெய்வதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட குழுவானது சிறந்த முறையில் பகுப்பாய்வுசெய்து பிரதான தகுதிகளின் அடிப்படையில் இவ்விருதுகளை முன்மொழிந்துள்ளது.

இலங்கை வங்கியில் பசுமை வீட்டுத்தோட்ட வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்திய கிளைக்கு விருது வழங்கியமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

"அயராது அர்ப்பணிப்புடன் பணியாற்றி விருதுகளைப் பெற்றுக் கொண்ட பிரதேச மற்றும் கிளை பணியாளர்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன்.

இச்செயற்பாட்டின்போது அளப்பரிய சேவையை வழங்கிய தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கும், இந்நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என பிரியால் சில்வா இதன்போது தெரிவித்தார். சேவைத் தரம், செயற்திறன் மற்றும் ஆற்றல் என்பவற்றை இவ்வாறான போட்டித்தன்மை மூலமாக உயரிய மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு முழு கிளை வலையமைப்பும் நடவடிக்கை மேற்கொள்ளும் என இலங்கை வங்கி நம்புகின்றது.


# சேல் சேல் சேல்
## கையிருப்பை விற்றுத் தீர்த்தல்

| | | | |
|---|---|---|---|
| 60' பொலியெஸ்டர் துணி | | | |
| Printed & Plain | 05 மீற்றர் | ரூபா | 2,000.00 |
| 60' லேஸ் | 05 மீற்றர் | ரூபா | 2,000.00 |
| வெள்ளை சேர்ட் பட்டன் | 01 கி.கி. | ரூபா | 250.00 |
| புளொட்டர் பேப்பர் | 01 கி.கி. | ரூபா | 1,000.00 |
| பேப்பர் இன்டர்லைனிங் | | | |
| கறுப்பு வெள்ளை | 01 யார் | ரூபா | 100.00 |
| Boys Shirt | 01 துண்டு | ரூபா | 250.00 |

சில்லறை மற்றும் மொத்த விற்பனை அனைத்து வாடிக்கையாளர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

**"விலைக்குறைப்பு சேல்" இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு**

**2023 டிசம்பர் 11ஆம் திகதி முதல்**
**2023 டிசம்பர் 21ஆம் திகதி வரை**

**எமது தொழிற்சாலை:**
**ஜனதா கார்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிடெட்,**
**இல. 17,**
**விவேகானந்த மேடு, கொழும்பு-13.**



தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2023.12.19
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5333
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,715,456.00
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 9 2 6 7 7 5

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3575
சீட்டிழுப்பு திகதி 2023.12.19
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,263,399.40
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 38 59 62 71
விசேட எழுத்து Q
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 67322

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1681
2023.12.19
55708
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 418,387,664.00
ஆங்கில எழுத்து A
சுப்பர் இலக்கம் 21
வெற்றி இலக்கங்கள் 43 55 69 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP**
திகதி 2023.12.19
சீட்டிழுப்பு இலக்கம் 0159
ஆங்கில எழுத்து A
L7 எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 7 2 8 5 0 5
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.21,708,081.52

**ராசி சுப பலன்**
திகதி 2023.12.19
சீட்டிழுப்பு இலக்கம் 642
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 37 45 51 62
தனயோக இலக்கம் 28673
நாளுக்கான விதி எண் 20

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1363
2023.12.19
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 126,044,278.00
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 03 20 34 77
விசேட எழுத்து Q
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 07942

# கிழக்கின் குரல்



இருபதாவது தேசிய பாதுகாப்பு வாரம்

## அம்பாறை மாவட்ட பிரதான நிகழ்வு அக்கரைப்பற்றில்

ஒலுவில் விசேட நிருபர்



இருபதாவது தேசிய பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்ட பிரதான நிகழ்வு, அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (26) நடைபெறவுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தெரிவித்தார்.

இதன்போது, அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசத்தில் பல்வேறு சமய நிகழ்வுகளும் நினைவுதின நிகழ்வுகளும் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை ஆகிய பிரதேசங்களிலுள்ள கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், விகாரைகள் ஆகியவற்றில் விசேட சமய வழிபாடுகள் மற்றும் துஆ பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

இதேவேளை பாண்டிருப்பு, காரைதீவு, கல்முனை, திருக்கோவில் ஆகிய பிரதேசங்களில் கடல்கோள் அனர்த்தத்தில் இறந்தவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிகளில் கடல்கோள் அனர்த்தத்தில் இறந்தவர்களை நினைவுகூர்ந்து நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பொத்துவில், திருக்கோவில், கோமாரி, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, மருதனை ஆகிய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனர்த்த முன்னெச்சரிக்கை கோபுரங்களில் அனர்த்த பாதுகாப்பு ஒத்திகை நடத்தப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அனர்த்த முன்னெச்சரிக்கை கோபுரங்களை ஒரே நேரத்தில் இயங்கச் செய்து, அதன் மூலம் அனர்த்த முன்னெச்சரிக்கை ஒத்திகையை நடத்தி, பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டத்தை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு முன்னெடுத்துள்ளது. கரையோரப் பிரதேசங்களிலுள்ள மத ஸ்தலங்கள், பாடசாலைகளில் அனர்த்த முகாமைத்துவ விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் 75ஆவது ஆண்டில்

## சுயாட்சிக்காக தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும்

காரைதீவு குறூப் நிருபர்



"இலங்கை தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 75ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதுடன், இந்தத் தருணத்தில் எமது உயரிய நோக்கான சுயாட்சியை நோக்கி நாம் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும்" என, அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சுயாட்சி எனும் இலக்கை அடைவதற்காக 75ஆவது ஆண்டில் நாம் காலடி எடுத்து வைக்க வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளைத் தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தலைமையில் கட்சிப் பணிமனையில் தமிழரசுக் கட்சியின் பிறந்தநாள் கொண்டாட்டம் கடந்த திங்கட்கிழமை (18) நடைபெற்றதுடன், பிறந்தநாள் கேக்கை வெட்டி வைத்து உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய சுமந்திரன் எம்.பி.,

"இலங்கையிலுள்ள தமிழர்களுக்காக வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்காக 75 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டதே இலங்கை தமிழரசுக் கட்சியாகும். எமது மக்கள் சுயாட்சியாக தமது கருமங்களை தாமே ஆற்றக்கூடிய வகையில் நாட்டில் ஏனைய இன மக்களுடன் சமமாக வாழ வேண்டுமென்ற இலக்கை நோக்கி இந்தக் கட்சி பயணிக்கிறது. ஆகையால், இதில் இணைந்து செயற்படுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இப்பிறந்தநாள் கொண்டாட்டம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததென்பதுடன், காரைதீவு மண்ணில் இடம்பெறுவது பெருமைப்பட வேண்டிய விடயமாகும்" என்றார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான தவராசா கலையரசன், இரா.சாணக்கியன், இளைஞர் அணியின் துணைத் தலைவர் அருள் நிதாஞ்சன், கட்சிப் பிரமுகர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## காரைதீவில் தவத்திரு சிவாக்கிர தேசிக சுவாமியின் அருளுரை



காரைதீவு குறூப் நிருபர்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள அருட்குருநாதர் தவத்திரு சிவாக்கிர தேசிக சுவாமி, காரைதீவு மாவடி கந்தசுவாமி கோயிலுக்கு சென்று அருளுரை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து கோயிலுக்கு வருகை தந்துள்ள பக்தர்களுக்கு திருவாசகம் நூல்களையும் வழங்கி வைத்தார்.

அருட்குருநாதர் தவத்திரு சிவாக்கிர தேசிக சுவாமியை கோயில் நிர்வாகத்தினரும் காரைதீவு மக்களும் மிகவும் இன்முகத்துடன் வரவேற்றனர்.



மட்டக்களப்பு மாவட்டத்துக்கு புதிய அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட ஜஸ்ரினா யுலேக்கா முரளீதரன் தனது கடமையை மாவட்ட செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை (18) பொறுப்பேற்றுக்கொண்டார். இவருக்கான நியமனக் கடிதத்தை கடந்த 13ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்தன வழங்கி வைத்தார்.

(படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மகாவலி கங்கை பெருக்கெடுப்பு

## கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் 3 பிரதேசங்களுக்கான போக்குவரத்து பாதிப்பு



கிண்ணியா மத்திய நிருபர்

தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து மகாவலி கங்கை பெருக்கெடுத்துள்ளதால் திருகோணமலையின் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மூன்று பிரதேசங்களுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

உப்பாறு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சோலைவெட்டுவான், காரைவெட்டுவான், மயிலப்பன் சேனை ஆகிய பிரதேசங்களுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன், இப்பிரதேசங்களிலுள்ள மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளுக்காக வெளியில் செல்ல முடியாது சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த மூன்று பிரதேசங்களுக்கான பிரதான போக்குவரத்து வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், கடந்த நான்கு நாட்களாக இந்த வீதிகள் வழியாக மிக வேகமாக வெள்ளநீர் பாய்ந்து ஓடுகின்றது. இதனால் இந்த மூன்று பிரதேசங்களுக்கான போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக, எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இந்த மூன்று பிரதேசங்களிலும் சுமார் 90 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

மட்டக்களப்பில்

## சுமார் 3,000 கடற்றொழிலாளர் காப்புறுதித் திட்டத்தில் இணைவு

மட்டக்களப்பு குறூப் நிருபர்

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினுடைய வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்றொழிலாளர் காப்புறுதி திட்டத்தில் சுமார் 3,000 கடற்றொழிலாளர்கள் இணைந்துள்ளதாக, அம்மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ருக்சான் குரூஸ் தெரிவித்தார்

இந்தக் காப்புறுதி திட்டத்தின் கீழ் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த போது மரணமடைந்த கடற்றொழிலாளர் ஒருவருக்கும் இயற்கை மரணமடைந்த மற்றுமொரு கடற்றொழிலாளருக்கும் சுமார் 13 இலட்சம் ரூபா உதவித்தொகை வழங்கி வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

நெய்னாகாடு அல்அக்ஸா பாடசாலையில்

## க.பொ.த. உ/தரத்துக்கு தகுதி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

பாலமுனை தினகரன் நிருபர்



நெய்னாகாடு அல்அக்ஸா வித்தியாலயத்தில் முதல் தடவையாக க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றி க.பொ.த. உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்ற மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் அப்பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.பி. ஹிபத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹீர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இப்பாடசாலையில் தரம் ஒன்பது வரை கல்வி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மாணவர்களின் நலன் கருதி க.பொ.த. சாதாரணதரம் வரை தரம் உயர்த்தப்பட்டது. இந்நிலையில், முதல் தடவையாக க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றிய மூன்று மாணவர்களில் இரண்டு மாணவர்கள் உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

க.பொ.த. சா/த பரீட்சையில் சித்தி பெற்ற இரு மாணவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதுடன், உயர்தரம் கற்பதற்கான புலமைப் பரிசில்களும் அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. 25 மாணவர்களுக்கு இதன் போது புலமைப்பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## குடும்ப பாதுகாப்பு, சமூகப் பங்களிப்பு; அட்டாளைச்சேனையில் மாநாடு

பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்

'குடும்ப வாழ்வின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுக்கான சமூகப் பங்களிப்பு திட்டமிடல்' எனும் தலைப்பின் கீழ் மாவட்ட மட்டத்தில் தெளிவூட்டும் மாநாடு, மனித எழுச்சி நிறுவனம் மற்றும் அம்பாறை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை யாடோ விருந்தினர் விடுதியில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது வன்முறைகளால் பாதிப்படையும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் மனோநிலையை ஆற்றுப்படுத்தல், சிறுவர்களின் கல்வி மற்றும் பாதுகாப்பு, பெண் தலைமைத்துவ மற்றும் ஏழைக் குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பு, குடும்பப் பிணக்குகளை தீர்ப்பதற்காக நீதிமன்றம் செல்வோருக்கு ஆலோசனை வழங்கல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

மனித எழுச்சி நிறுவனத்தின் மாவட்டப் பணிப்பாளர் கே.நிஹால் அஹமட் தலைமையில் இம்மாநாடு நடைபெற்றதுடன், இதில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கிரான்குளத்தில் அகத்தியர் மருத்துவ விழா டிசம்பர் 24இல்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

அகத்தியர் மருத்துவ கூடலின் நான்காம் ஆண்டு நிறைவு மற்றும் அகத்தியரின் ஜனன தினத்தை முன்னிட்டு அகத்தியர் மருத்துவ விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (24) காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அகத்தியர் மருத்துவ கூடல் தலைவர் வர்ணகுலசிங்கம் பிரவீன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழா, கிரான்குளம் அனைத்து பொது அமைப்புகளுடன் இணைந்து நடத்தப்படவுள்ளது.

இதன்போது இரத்ததானம் செய்தல், மருத்துவ முகாம் நடத்துதல், புற்றுநோய், நீரிழிவு, குழந்தையின்மை தொடர்பாக மருத்துவ ஆலோசனை வழங்கல், விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தல் ஆகியவை நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்துகொண்டு பயனடையுமாறும் 18 - 60 வயதுக்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலரும் இரத்ததானம் செய்து உதவுமாறும் அகத்தியர் மருத்துவ கூடல் தலைவர் வர்ணகுலசிங்கம் பிரவீன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்விழாவில் ஆன்மிக அதிதியாக சிவசிறி செ.சுப்பிரமணியக் குருக்களும் கௌரவ அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியக் கலாநிதி க.அருளானந்தம், ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தே.திலக்ஷன், சித்தமருத்துவர் வைத்தியர் தி.கீர்த்திகா உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## 'செல்லச் சிட்டுக்கள்' நூல் கிண்ணியாவில் வெளியீடு

கிண்ணியா தினகரன் நிருபர்



கிண்ணியா சபீனா எழுதிய 'செல்லச் சிட்டுக்கள்' சிறுவர் பாடல் நூல் வெளியீட்டு நிகழ்வு, கிண்ணியா நூலகத்தில் கடந்த சனிக்கிழமை (16) நடைபெற்றது.

கிண்ணியா வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.என்.சமீம் தலைமை தாங்கிய இந்நிகழ்வில் நூல் நயவுரையை ஆசிரிய வளவாளரும் இலக்கிய ஆய்வாளருமான ஜெஸ்மி மூஸாவும் வெளியீட்டுரையை லக்ஸ்டோ மீடியா தலைவர் கலாநிதி ஏ.எல்.அன்சாரும் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கலந்து சிறப்பித்தார்.



மட் /ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் ஒளி விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. இவ்விழாவில் அருட்தந்தை அனிஷ்டன் மோரியஸ், மண்முனைப்பற்று கோட்டக் கல்வி அதிகாரி தில்லைநாதன் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர். (படம்: ஆரையம்பதி தினகரன் நிருபர்)

## மட்டக்களப்பில் வெள்ளத்தால் 1,432 குடும்பங்கள் பாதிப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவி வரும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து மழை வெள்ளம் காரணமாக 1,432 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, அம்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்தது.

கோரளைப்பற்று தெற்கு கிரானில் 941 குடும்பங்களும் போரதீவுப் பற்று வெல்லவெளியில் 92 குடும்பங்களும் கோரளைப்பற்று வடக்கு வாகரையில் 319 குடும்பங்களும் ஏறாவூர்ப்பற்று செங்கலடியில் 32 குடும்பங்களும் மண்முனை தென்மேற்கு பட்டிப்பளையில் 47 குடும்பங்களும் மண்முனைப்பற்று ஆரையம்பதியில் ஒரு குடும்பமும் காத்தான்குடியில் ஒரு குடும்பமும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மேலும் தெரிவித்தது.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2023 டிசம்பர் 21
வியாழக்கிழமை

# யாழில் ஒரே நாளில் 111 டெங்கு நோயாளர்கள்

## முழுநேர டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இன்று முதல் ஆரம்பம்

*யாழ் விசேட நிருபர்*

யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல பாடசாலை வளாகங்கள், வைத்தியசாலை வளாகங்கள், அரச நிறுவனங்கள் அமைந்துள்ள வளவுகள், பல்கலைக்கழக வளாகங்கள், பல்கலைக்கழக விடுதிகள், அனைத்திலும் இன்று முழுநேர டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் மிக உச்சநிலையை அடைந்துள்ளது. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டும் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட 111 டெங்கு நோயாளர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை மற்றும் தனியார் வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டிருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.மாவட்டத்தில் இம்மாதம் 18ஆம் திகதி வரை 886 டெங்கு நோயாளர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பூச்சியியல் ஆய்வுக்குழுவினர் யாழ்.மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் மிக அதிகமான டெங்கு பரவல் இருப்பதாகவும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் பெருகிக் காணப்படுவதாகவும் அடையாளம் கண்டுள்ளனர்.

குறிப்பாக வைத்தியசாலை வளாகங்கள், பாடசாலை வளாகங்கள், பல்கலைக்கழக வளாகங்கள், பல்கலைக்கழக விடுதிகள், அரசாங்க அலுவலகங்கள், அரசாங்க விடுதிகள், தனியார் கல்வி நிறுவன வளாகங்கள் போன்றவற்றில் டெங்கு தாக்கத்தை ஏற்படுத்தும் நுளம்புக்குடம்பிகள் பெருமளவில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் இந்நிலைமை ஏனைய பிரதேசங்களுக்கும் வியாபித்து யாழ்.மாவட்டம் முழுவதும் டெங்கு தாக்கம் ஏறத்தாள அபாயகரமான நிலைமையை எட்டியுள்ளது.

எனவே யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை வளாகங்கள், வைத்தியசாலை வளாகங்கள், அரச நிறுவனங்கள் அமைந்துள்ள வளவுகள், பல்கலைக்கழக வளாகங்கள், பல்கலைக்கழக விடுதிகள், அனைத்திலும் இன்று 21ஆம் திகதி முழுநேர டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்குறித்த அனைத்து வளாகங்களிலும் அங்கு கடமையாற்றுவோர் மற்றும் தங்கியிருப்போர் சிரமதானம் மூலம் நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்கள் மற்றும் கொள்கலன்களை அகற்றி அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். வளாகங்களின் அளவை பொறுத்து சிரமதான நடவடிக்கைகள் தொடர்ந்து நாளையும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் தங்கள் வீட்டு வளவுகளில் நீர் தேங்கி நிற்கக்கூடிய சகல கொள்கலன்களையும் அகற்றி டெங்கு நுளம்பிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். மேற்படி விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு அனைத்து அரசாங்க நிறுவனங்களும் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகங்களும் ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### மன்னார் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில்

# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு பொதிகள்

*மன்னார் குறுப் நிருபர்*

மன்னார் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மன்னார் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் அத்தியாவசிய உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

மாந்தை மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பெரியமடு மற்றும் ஈச்சளவக்கை ஆகிய கிராம மக்களுக்கு உதவிகள் தேவை என விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக மன்னார் நலன்புரி சங்கம் முன்வந்து உதவிகளை செய்துள்ளது.

அதற்கமைவாக மன்னார் நலன்புரி சங்கம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் அரவிந்தன் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விபரங்களை சேகரித்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகளை முன்னெடுத்தனர்.



இதன்போது இப்பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# முல்லைத்தீவில் கேரள கஞ்சாவுடன் சிக்கிய மூவர்

*ஓமந்தை விஷேட நிருபர்*



முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இப்பகுதியில் கஞ்சா போதைப்பொருள் விற்பனை செய்வதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்றுமுன்தினம் (19) சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட விசேட பொலிஸ் அணி மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேகநபரொருவர் முதலில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணை நடவடிக்கையின் போது அவர் வேறு ஒரு இடத்திலிருந்து கஞ்சா போதைப்பொருளை பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் அணியினரும் விசேட அதிரடி படையினரும் இணைந்து இருவரை கைதுசெய்துள்ளனர். இவர்கள் முள்ளியவளை புதரிகுடா பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 26 வயதுடைய கணவன், மனைவி என தெரியவருகின்றது.

இவர்களிடமிருந்து 214 கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் இவர்களுடைய பிரதான விநியோகஸ்தர்களையும் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகளுக்கு ஓரிரு வருடங்களுக்குள் நிரந்தர தீர்வு

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி





கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு ஓரிரு வருடங்களுக்குள் தீர்வை பெற்றுத்தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சர்வதேச கடற்றொழிலாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற 'பேரலையின் சக்தி' தொடர் நிகழ்வுகளில் ஒன்றான புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உபகரணங்கள், ஊக்குவிப்புத் தொகை மற்றும் உலருணவுப் பொதிகள் என்பன வழங்கப்பட்டன. அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில், 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் வடக்கு மாகாண கடற்றொழில் அபிவிருத்திக்கென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருக்கிறார். மேலும் கடற்றொழிலை பாதுகாப்பதுடன் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஓரிரு வருடங்களுக்குள் தீர்வை பெற்றுத்தருவேன் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா, அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரட்நாயக்க, மேலதிக செயலாளர் அனுஷா கோகுல, பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, தம்மிக்க ரணதுங்க, கபில குணரட்ன, கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உயரதிகாரிகள், நார நிறுவனத் தலைவர் பேராசிரியர் விஜேரட்ன, பணிப்பாளர் நாயகம் கலாநிதி கமல் குணரட்ன, நெக்டா நிறுவனத் தலைவர், பணிப்பாளர் நாயகம் திருமதி அசோகா மற்றும் துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்திய யாழ். மாவட்டம்

### யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பாராட்டு

*கோப்பாய் குறூப் நிருபர்*



அஸ்வெசும மக்கள் நலன்புரித் திட்டத்தை உரிய காலப் பகுதியில் நடைமுறைப்படுத்திய மாவட்டமாக இலங்கையில் யாழ். மாவட்ட செயலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார். கடந்த (18) திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் புள்ளி விவரத் திணைக்களம் ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் இலங்கை புள்ளி விவரத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட கட்டடக்கூறுகளுக்கான தொகை மதிப்பு நிறைவடைந்துள்ளது. பல்வேறுபட்ட தடைகள் வந்த நிலையிலும் உத்தியோகத்தர்களின் செயற்பாடு காரணமாக விரைவாகவும் நேர்த்தியாகவும் இத்திட்டத்தை நிறைவு செய்துள்ளோம்.

அதேபோன்று அஸ்வெசும நலம்புரித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது நாட்டில் கிராம சேவையாளர்கள் அதிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்கள். இந்நிலையில் யாழ். மாவட்ட செயலகம் இலங்கையில் இத்திட்டத்தை உரிய காலப்பகுதியில் 80 வீதத்திற்கு அதிகமான வேலைகளை நிறைவு செய்த இலங்கையின் முதன்மை மாவட்டமாகத் திகழ்கிறது. எந்தத் தடை வந்தாலும் மக்களுக்கான பணியை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும் என்ற மனோநிலை அனைவருக்கும் ஏற்பட வேண்டும். அவ்வாறான ஒரு செயற்பாட்டின் மூலம் யாழ்.மாவட்டத்தில் இத்திட்டத்தை செயற்படுத்த உதவிய சகல மட்டங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஓய்வு பெறுவதற்கு இன்னும் மூன்று மாதங்கள் உள்ளன. இலங்கை புள்ளி விவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இவ்வருடத்துடன் ஓய்வு பெறவுள்ளார். அவருக்கு இந்த இடத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அரச பணியை பொறுப்பேற்ற அனைவரும் தங்களால் இயன்றவரை மக்களுக்கான பணியை மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நெல்லியடியில் பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் விற்பனை; இளைஞன் கைது

*யாழ்.விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியிலுள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இளைஞனொருவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது இரண்டு நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதற்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, பாடசாலைக்கு அருகிலுள்ள கடையொன்றில் ஹற்றன் பகுதியைச் சேர்ந்த இளைஞனொருவன் வேலை செய்து வந்துள்ளார்.

இளைஞன் கடையில் வைத்து போதைப்பொருள் வியாபாரத்திலும் ஈடுபட்டு வருவதாக நெல்லியடி பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

அதனடிப்படையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இளைஞனை கைது செய்த பொலிஸார் அவரது உடைமையிலிருந்து 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டிருந்தனர்.

விசாரணைகளின் பின்னர், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் இளைஞனை ஆஜர்படுத்திய பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேகநபரை இரண்டு நாள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதிக்குமாறு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர். அதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் சந்தேகநபரை பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதித்துள்ளது.

# வவுனிக்குளத்தில் 400 ஏக்கர் பயிர்கள் அழிவு

*முல்லைத்தீவு குறூப் நிருபர்*

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் பாலி ஆறு பெருக்கெடுத்ததன் காரணமாக வவுனிக்குளத்தின் கீழான 1000 ஏக்கருக்கு மேலான நெற்பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். பாலி ஆற்றுக்கரையோரங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த நெற்பயிர்ச்செய்கை பெரும் அழிவுகளை சந்தித்துள்ளது. இதேவேளை வவுனிக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த 3000 ஏக்கருக்கு மேற்பட்ட மேட்டுப் பயிர்ச்செய்கை மழை வெள்ளத்தினால் அழிவடைந்துள்ளது. இதுவரை 25 கால்நடைகள் மழை வெள்ளத்தினால் உயிரிழந்துள்ளன. இதுதொடர்பான விபரங்களை கமநல சேவை நிலையங்களில் கமக்கார அமைப்புகளின் ஊடாக விவசாயிகள் பதிவு செய்து வருகின்றனர். பயிர்ச்செய்கைக்கும் கால்நடை உயிரிழப்புகளுக்கும் இழப்பீடுகளை பெற்றுத் தருவதற்கு விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விவசாயிகள் கோரியுள்ளனர்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கனமழையால் 2105 குடும்பங்களைச் சேர்ந்த 6260 பேர் பாதிப்பு!

*மாங்குளம் குரூப் நிருபர்*



முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற கனமழை காரணமாக மாவட்டத்தில் 2105 குடும்பங்களைச் சேர்ந்த 6260 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 412 குடும்பங்களைச் சேர்ந்த 1215 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் வெளியிடப்பட்ட தகவல்களுக்கமைய நேற்றுமுன்தினம் (19) மாலை 4 மணி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலேயே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு, பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 333 குடும்பங்களைச் சேர்ந்த 1076 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, கருவேலன்கண்டல், இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், தச்சடம்பன், கூழாமுறிப்பு, கனகரத்தினபுரம், காதலியார்சமணங்குளம், பழம்பாசி, தண்டுவான், ஒட்டுசுட்டான், பேராறு, மணவாளன்பட்டமுறிப்பு, கணேசபுரம், முத்துவிநாயகபுரம், வித்தியாபுரம், அம்பகாமம், முத்துஐயன்கட்டுக்குளம் கற்சிலைமடு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 592 குடும்பங்களைச் சேர்ந்த 1748 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று கரைதுறைப்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை , தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு கொக்குத்தொடுவாய் வடக்கு, செம்மலை, தண்ணீறூற்று கிழக்கு, கணுக்கேணி மேற்கு, அளம்பில் வடக்கு, மாமூலை, அம்பலவன்பொக்கணை, வண்ணாங்குளம், குமாரபுரம், முள்ளியவளை தெற்கு, முள்ளியவளை மேற்கு, அளம்பில் தெற்கு, உப்புமாவெளி,கேப்பாபுலவு மதவளசிங்கன்குளம், முள்ளியவளை மத்தி கொக்கிளாய் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 442 குடும்பங்களைச் சேர்ந்த 1338 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேபோன்று துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், ஆலங்குளம், தேராங்கண்டல், கல்விளான், மல்லாவி, யோகபுரம் கிழக்கு, புகழேந்திநகர், பாரதிநகர், யோகபுரம் மேற்கு, அம்பலப்பெருமாள்குளம், அமைதிபுரம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், துணுக்காய், யோகபுரம் மத்தி, திருநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 251 குடும்பங்களைச் சேர்ந்த 765 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.




# கல்வி கட்டமைப்பில் புதிய சீர்திருத்தம் 3000 பாடசாலைகள் டிஜிட்டல் மயமாக்கப்படும்

(மாத்தளை சுழற்சி நிருபர்)

கல்வி கட்டமைப்பில் புதிய சீர் திருத்தங்களை அறிமுகப்படுத்தும் கல்வி அமைச்சின் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தின் அடுத்த ஆண்டில் 3000 பாடசாலைகள் டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த குமார் தெரிவித்தார்.

மாத்தளை ஆமினா தேசிய பாடசாலையில் மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் ஜே.எஸ்.எம். பவாஹிதா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறுகையில் கல்வி மேம்பாட்டுக்காக கல்வி சீர் திருத்த கொள்கையில் பல மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளன.



இதன்முதற்கட்டமாக இந்நாட்டில் காணப்படும் 10140 பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 3000 பாடசாலைகள் 2024 இல் டிஜிட்டல் மயமாக்கப்படவுள்ளன.

இவற்றுள் மாத்தளை ஆமினா மகளிர் தேசிய பாடசாலையும் உள்வாங்கப்படவுள்ளது.

அடுத்த வருடம் முதல் பாடசாலைகளில் புதிய கல்வி மறுசீரமைப்பின் செயற்றிட்டத்தின் கீழ் S T E A M.கல்வி முறைமை மூலம் பாடசாலைகளில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல்,கலை, கணிதம் ஆகிய துறைகளில் மாணவர்களுக்கு முறையான கல்வி வழங்கப்பட்டு உயர் படிப்பை முடித்து விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு இலகுவில் சிறந்தொரு தொழில்வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள வழி வகுக்கும்.

விஞ்ஞான தொழில் நுட்ப துறைகளில் உள்நாட்டில் தொழில் வாய்ப்பு இல்லாவிட்டாலும் கூட வெளிநாடுகளில் சிறந்த தொழில் வாய்ப்புகளையும் கூடுதலான வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். இதனால் நாட்டிற்கும் மக்களுக்கும் பெரும் நன்மை கிடைக்கும். இந்நாட்டில் தற்போது வருடந்தோறும் தொழில் வாய்ப்புகள் குறைந்து கொண்டே செல்வதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாத்தளை வலய கல்வி காரியாலய அதிகாரிகள் இராஜாங்க அமைச்சரின் ஊடக செயலாளர் எம்.ஆர்.ஹசீம்தீன் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# மாத்தளை நந்திமித்ர ஏக்கநாயக்கா ஹொக்கி மைதானம் விரைவில் புனரமைப்பு

அக்குறணை குறூப் நிருபர்

மாத்தளை நந்திமித்ர ஏக்கநாயக்கா ஹொக்கி மைதானத்தை விரைவில் புனரமைப்பதற்கான ஒப்பந்தம் ஆசிய ஹொக்கி சம்மேளனத்துடன் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் இவ்வைபவத்தில் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்கா, அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சமன் பெர்னான்டோ, மாத்தளை ஹொக்கி சங்கத்தின் செயலாளர் தயான் திசாநாயக்கா, மாத்தளை ஹொக்கி சங்கத்தின் உபதலைவர் முராத் ஒமர்தீன் ஆகியோர்களுடன் ஆசிய ஹொக்கி சம்மேளன தலைவர் உட்பட மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதுதொடர்பில் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்கா தெரிவிக்கையில்,



மாத்தளை நந்திமித்ர ஏக்கநாயக்கா ஹொக்கி மைதானம் புனரமைக்கப்படவுள்ளது.

இலங்கையில் செயற்கை சூழலில் அமைந்த ஹொக்கி மைதானங்கள் இரண்டு மட்டுமே உள்ளன. அதில் ஒன்று கொழும்பு ரீட் மாவத்தையிலுள்ள ஹொக்கி மைதானம். மற்றையது மாத்தளையிலுள்ள நந்திமித்ர ஏக்கநாயக்க மைதானம்.

ஆனால் நந்திமித்ர ஏக்கநாயக்க மைதானம் 2009ஆம் ஆண்டின் பின்னர் இதுவரை புனரமைக்கப்படவில்லை. ஹொக்கி விளையாட்டில் பிரபல்யம் பெற்ற மாத்தளை மாவட்டத்துக்கு இது ஒரு பாரிய பிரச்சினையாகவுள்ளது.

எனவே இதுவிடயமாக ஆசிய ஹொக்கி சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

# அம்பியூலன்ஸ் வண்டி விபத்து; ஐவர் படுகாயம்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பதுளைகொழும்பு பிரதான வீதியில் பலாங்கொடைப் பிரதேசத்தில் நோயாளர்களை ஏற்றிச் சென்ற அம்பியூலன்ஸ் வண்டி விபத்துக்குள்ளானதில் ஐவர் படுகாயமடைந்து பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பதுளை பிரதான வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நோயாளர்களை ஏற்றிச் சென்ற அம்பியூலன்ஸ் வண்டி பலாங்கொடைப் பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி அருகிலுள்ள வாய்க்கால் ஒன்றில் விழுந்தமையால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து காரணமாக அம்பியூலன்ஸ் வண்டி சாரதி, அதில் கடமை புரியும் இருவர் உட்பட ஐவர் படுகாயமடைந்த நிலையில் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



கண்டி கசாவத்தை முஸ்லிம் வித்தியாலயத்தின் 1973-2023 வரையான 50 வருட பூர்த்தி பொன்விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி அண்மையில் (14) பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

# மகியாவ கலைமகள் வித்தியாலயத்தில் கண்டி ஆடற்கலைப் போட்டி

"மலையகம் 200"யை ஒட்டியதாக அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம், இந்து கலாசார திணைக்களத்துடன் இணைந்து நடத்திவரும் ஆடற்கலைப் போட்டியின் கண்டி மாவட்டத்திற்கான போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9 மணிக்கு கண்டி, மகியாவ கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் நடத்தப்படும் இதில் கண்டி மாவட்டத்தில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட அறநெறிப் பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன. இந்து கலாசார திணைக்களத்தின் அழகியல் போதாசிரியர் யசோ பிரசாத், ஸ்ரீ கைலேஸ்வரன் நாட்டிலாயாவின் ஸ்தாபக இயக்குனர் ஜெகநாதன் சஞ்ஜீவன் ஆகியோர் நடுவராக கடமையாற்றுவார்கள் என அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.விஜே தெரிவித்தார்.

இப்போட்டியில் இதுவரை கம்பஹா மாவட்டப் போட்டியும் கொழும்பு மாவட்டத்திற்கான போட்டியும் நடைபெற்றது. கம்பஹா மாவட்டப் போட்டியில் வத்தளை சபரிகிரீசா ஐயப்பன் அறநெறிப் பாடசாலையும் கொழும்பு மாவட்டப் போட்டியில் கொழும்பு கதிரேசன் வீதியிலுள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய அறநெறிப் பாடசாலையும் கொழும்பு, ஜிந்துப்பிட்டி, ஜெயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய அறநெறிப் பாடசாலையும் வெற்றிப் பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

இந்தப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றி பெறும் அறநெறிப் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

# இந்திரா புற்றுநோய் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நத்தார் நிகழ்வு!

(காவத்தை தினகரன் விசேட நிருபர்)

இந்திரா புற்றுநோய் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நத்தார் நிகழ்வுகள் அண்மையில் மஹரகம தேசிய இளைஞர் சேவை வளாகத்தில் இடம்பெற்றது. புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்காக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



# நுவரெலியா நகரில் விசேட சுற்றிவளைப்பு



நுவரெலியா நகரில் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் மற்றும் நுவரெலியா பொலிஸார் , இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் நேற்று ஈடுபட்டனர்.

நுவரெலியா மாவட்ட உதவி பொலிஸ் மா அதிபர் லயனல் குணத்திலக்க மற்றும் நுவரெலியா பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த ஹக்மன ஆகியோரின் ஆலோசனையின் கீழ் நேற்றுமுன்தினம் மாலை 2 மணியளவில் அதிரடி சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் 100க்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் பொலிஸ் மோப்ப நாய் பிரிவினர் உட்பட இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் இச்சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா நகரில் போதைப் பொருள் பாவனை இடமாக சந்தேகிக்கப்பட்ட பஸ் தரிப்பிடம் மற்றும் வியாபார கட்டடத் தொகுதிகள் சோதனையிடப்பட்டன. அத்தோடு நுவரெலியா நகருக்கு வருகை தரும் பொதுமக்கள் மற்றும் பயணிகளின் பயணப் பொதிகளை சோதனைக்குட்படுத்தினர். (ஆ.ரமேஷ்)

# மாணவர்கள் கௌரவிப்பு விழா



அரநாயக்க திப்பிட்டிய அல் அரபா கனிஷ்ட வித்தியாலயத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், கற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கல்லூரி அதிபர் கௌரவ.எம்.கே.எம். அனஸின் தலைமையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. சப்ரகமுவ மாகாணத்தில் முதலிடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து பரிசு வழங்கி கௌரவித்தனர்.

பிரதம அதிதியாக அரநாயக்க கோட்டக் கல்வி பணிப்பாளர் ,விசேட அதிதியாக சமூக சேவையாளரும்,வில்பொல ஜும்ஆ பள்ளிவாசல் தலைவருமான எம். யூ.எம். பர்ஹான்,ஆசிரிய ஆலோசகர்களான யூ.எல்.ஐதுன்நிஸா,ஏ.சீ.எம். முனவ்வர் மற்றும் அதிபர்களும்,ஆசிரியர்களும்,நலன் விரும்பிகளும், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும்,பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும்,பழைய மாணவியர் சங்க உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# ரயில் சேவைகள் பாதிப்பு

ஹப்புத்தளை மற்றும் தியத்தலாவை ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட 155 எனும் மைல்கல் பகுதியில் ஏற்பட்ட பாரிய மண்சரிவு காரணமாக மலையக ரயில் சேவைகள் பாதிப்படைந்துள்ளன.



ரயில் பாதையை சீர்செய்யும் பணிகளில் ரயில் நிலைய ஊழியர்களும், தியத்தலாவ இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர். மண்சரிவு காரணமாக மலையக ரயில் பாதை ஊடான சேவைகள் தாமதமாகலாம் என ரயில் நிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன்காரணமாக கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த இரவுநேர தபால் ரயில் ஹப்புத்தளையில் நிறுத்தப்பட்டது.



ஹல்துமுல்ல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட,கலுபான பிரதேசத்தில் பெய்த கடும் மழை காரணமாக மண் சரிவுக்குள்ளாகி பல வீடுகள் சேதமுற்றுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. கலுபான பிரதான வீதியின் அருகே உள்ள வீடுகள் மண் சரிவுக்குள்ளாகி சேதமுற்றிருப்பதைப் படங்களில் காணலாம்.(படம்.ஊவா சுழற்சி நிருபர்.)

# மாணவர்களுக்கு இலவச பருவகாலச் சீட்டுக்கள்

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை செல்வதற்கு இலவச பருவகாலச் சீட்டுக்களை வழங்க மத்திய மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மையில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கண்டியிலுள்ள அலுவலகத்தில் வைத்து அதனைக் கையளித்தார்.

இதுபற்றி மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பராக்கிரம திசாநாயக்கா தெரிவிக்கையில்,

மத்திய மாகாணத்திலுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களிலிருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இச்சலுகையை வழங்க மத்திய மாகாண போக்குவரத்து மின்சக்கதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மாகாண கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலை அதிபர்களது சிபாரிசு இதற்காகப் பெறப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பாடசாலைக் கல்வி முடிவடையும் வரை இச்சலுகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .

இதன் முதற்கட்டமாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே 20 மாணவர்களுக்கு பருவகால இலவச டிக்கட்டுக்களை கையளித்தார். கண்டி மாவட்டத்தில் 10 பேருக்கும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் தலா 5 பேர் வீதமும் பெற்றுக்கொண்டனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில்

# இம்முறை 40,000 ஏக்கரில் பெரும்போக சோளச் செய்கை முன்னெடுப்பு

## பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க கள விஜயம்




**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் கல்போத்தேகம பகுதியில் இம்முறை சோளச் செய்கை மிகவும் வெற்றிகரமாகவுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாய அமைச்சின் மூலம் விவசாயிகளுக்கு (SAPP) திட்டத்தின் கீழ் 05 மாவட்டங்களில் 40,000 ஏக்கரில் இம்முறை பெரும்போக சோளச்செய்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

குறித்த செயற்திட்டம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் சோளச் செய்கைக்கு தேவையான வளங்களை இலவசமாக வழங்க நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதனடிப்படையில் குறித்த பிரதேசத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க நேற்று முன்தினம் (19) களவிஜயம் ஒன்றை மேற்கொண்டு சோளச் செய்கையினை பார்வையிட்டதுடன் விவசாயிகளுடனும் சிநேக பூர்வமாக கலந்துரையாடியுள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 20,000 விவசாயிகளுக்கு 1 ஏக்கர் வீதம் 20,000 ஏக்கரில் சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அநுராதபுரம், மொனராகலை, பதுளை, ஹம்ந்தோட்டை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 40,000 ஏக்கர் சோளச் செய்கைக்கு ஒரு ஏக்கர் நிலம் பதப்படுத்துதல் உட்பட முதற்கட்ட செலவாக விதை, யூரியா உரம் என்பன இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக (TSP மண் உரம்) மற்றும் ( MOP பூந்தி உரம்) என்பன இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

# பெருந்தோட்டப் பாடசாலைகளில் உ/தரத்திற்கு 60 திறன் வகுப்பறைகள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மலையக பெருந்தோட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளுக்காக 60 திறன் அபிவிருத்தி வகுப்பறைகளை உருவாக்கும் வேலைத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கிணங்க நுவரெலியா, கண்டி, மற்றும் பதுளை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கே இந்த திறன் அபிவிருத்தி வகுப்பறைகள் உருவாக்கப்படவுள்ளன.

இரண்டு வருடங்களில் இந்த திறன் அபிவிருத்தி வகுப்பறைகளை உருவாக்குவதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் அதற்கு இந்திய அரசாங்கம் நிதியுதவி வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

அதற்கான செலவு 526.20மில்லியன் ரூபாவாகும் என்றும் அந்த வகையில் 2024 ஆம் ஆண்டுக்காக 310 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நீர் வழங்கள் அமைச்சு, இந்திய தூதரகம் ஆகியன இணைந்து இந்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதுடன் அமைச்சர் ஜீவன் தொண்டமான் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.


**இலங்கை புகையிரத சேவைகள்**

**கொள்முதல் அறிவித்தலின் திகதி திருத்தம்**

இலங்கை புகையிரத சேவையில் வடக்கு மாவட்டத்தில் IPW/ அநுராதபுரம் பிரிவுக்கு 2,000 டிராக் க்யூப்ஸ் பேலாஸ்ட் (CUBES OF TRACK BALLAST) வழங்குவதற்கான கொள்முதல்

கொள்முதல் இலக்கம் : SRS/F.7955

2023.12.15 ஆம் திகதி **தினகரன் பத்திரிகையில்** வெளியான கொள்முதல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மனு ஆவணம் வழங்கப்படும் கடைசி திகதி 2024.01.29 ஆம் திகதியானது 2024.01.09 ஆம் திகதி எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**
**கொள்முதல் இல.: SRS/F.7955**


**காணி சுவீகரித்தல் சட்டம் (460 ஆம் அத்தியாயம்) 39 அ (i) பிரிவின் கீழான தீர்மானம்**

2012 பெப்ரவரி 13ம் திகதி இல. 1745/2 இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் (460ஆம் அதிகாரமான) காணி சுவீகரித்தல் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (அ) இடைக்கால விதிமுறையின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2012 இல. 11 என்ற சட்டவாக்கத்தின் குறிப்பிடப்படும் காணிப்பகுதிகள் அரசிற்கு முழுமையாக உரித்தாயிருப்பதுடன் அரசிற்காக மற்றும் அதற்காக மேற்படி சட்டத்தின் 40ம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் அக்காணி பகுதிகளின் உரிமை பெறப்பட்டுள்ளது, எனினும் அச்சட்டத்தின் (1979 இல. 8 எனும் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட) 39 அ (i) பிரிவின் மூலம் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னான்டோ ஆகிய நான் மேற்படி காணிப் பகுதிகளில் இங்கு 1ம் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணிப்பகுதிகள் மட்டும் இத்தீர்மானத்தின் மூலம் விடுவிக்கிறேன்.

ஹரின் பெர்னான்டோ,
சுற்றுலா மற்றும் காணி அமைச்சர்

எனது இலக்கம் : 4-3/9/2011/1R/456
பிரதேச செயலாளரின் இலக்கம் : BD/UP/LND.1/UMAYA/01
2023 ஆகஸ்ட் 31ம் திகதி
சுற்றுலா மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர"
1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல

**அட்டவணை**

ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தின் ஊவா பரணகம, பிரதேச செயலகப் பிரிவில், தெஹிவினி பலாத்த கோரளை சிறிய பிரிவில், டவுன்சைட் (53ஜீ) கிராம அதிகாரி பிரிவில் கொட்டவெர உடகம கிராமத்தில் அமைந்துள்ள சேர்வையர் ஜெனரலினால் தயாரிக்கப்பட்ட அ.க.பி. 48, மேலதிக இல. 07 பத்திர இலக்கம் ii மற்றும் 2014.05.30ம் திகதிய இறுதி கிராமிய வரைபடத்தில் விவரமாகக் காட்டப்பட்டுள்ள கீழ்க்காணும் பெயர்களில் மற்றும் அளவுகளைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள்,

01. துண்டு இல. 401 - மொரகல்ல ஹின்னேபதன - அளவு கிட்டத்தட்ட 01361 ஹெக்டயார்

வடக்காக : துண்டு இல. 5ʝ (ஹி.பி. 298182)
கிழக்காக : துண்டு இல. 402, 404 மற்றும் 405
தெற்காக : துண்டு இல. 402, 404 மற்றும் 406 மற்றும் 400
மேற்காக : துண்டு இல. 400, வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் துண்டு இல. 5ʝ (ஹி.பி. 298182)

கட்டுநாயக்க விமான நிலைய

# சுங்கத்திணைக்கள அலுவலகத்திற்கு 'இரும்பு பெட்டகம்' அன்பளிப்பு

## மாணிக்கக்கல் வர்த்தக சங்கத்திற்கு பாராட்டு



**(அஷ்ரப் ஏ சமத்)**



இலங்கை சுங்கத் திணைக்களத்தின் கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள அலுவலகத்திற்கு இலங்கை மாணிக்கக் கல் வர்த்தக சங்கம் சுமார் 15 இலட்சம் பெறுமதி வாய்ந்த 'இரும்பு பெட்டகம்' பாதுகாப்பு அலுமாறி ஒன்றை அன்பளிப்பு செய்துள்ளது.

கடந்த காலங்களில் சர்வதேச நாடுகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தக சம்பந்தமான மாணிக்கக்கல், நகைகள், கண்காட்சிக்குரிய மாணிக்க கற்களை பாதுகாப்பாக விமான நிலையத்தில் வைப்பதற்காக பாதுகாப்பு இரும்பு அலுமாறி பற்றாக்குறையாக காணப்பட்டது. இதனை நிவர்த்தி செய்யுமுகமாக இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், பி.பி.எஸ். சி நோனிஸ், விசேட திட்டப் பணிப்பாளர் கே.டி.சி சுமாநந்ததாச ஆகியோர் மாணிக்கக் கல் வர்த்தக சங்கதினருடன் நடாத்திய கலந்துரையாடலை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கலாநிதி முஸ்லிம் சலாஹுத்தீன் தெரிவித்தார்.

இதனை கையளிக்கும் நிகழ்வில் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜானக்க லியனகேயிடம் இலங்கை மாணிக்கக்கல் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி முஸ்லிம் சலாஹுத்தீன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் உட்பட சுங்க அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

# கராத்தே சுற்றுப்போட்டியில் புத்தளம் வெற்றி

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



வயம்ப பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற (17) கராத்தே சுற்றுப் போட்டியில் புத்தளத்தை சேர்ந்த மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

21 வயதிற்கு உட்பட்ட காத்தா மற்றும் குமித்தே ஆகிய இரு போட்டிகளிலும் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி பழைய மாணவர் ஏ.எம். அஸாம் தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களை பெற்றுள்ளார்.

14 வயதிற்குறப்பட்ட குமித்தே போட்டியில் மதுரங்குளி எக்ஸெலன்ஸ் ஆங்கில பாடசாலையில் கல்வி பயிலும் மாணவன் யூ. தாமீர் தங்கப் பதக்கத்தையும், புத்தளம் காஸிம் சிட்டி பாடசாலை மாணவன் மாஷின் அஹ்மத், 15 வயதிற்குட்பட்ட குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

இந்த மாணவர்களை "டபில்யூ.எஸ். கே.ஏ." கழகத்தின் கராத்தே பிரதான போதனாசிரியரான சிஹான் எம். பைரோஸ் பயிற்றுவித்திருந்தார்.

# சிங்கள மொழி பேச்சுப் போட்டிக்கு தெரிவு

**இறக்காமம் தினகரன் நிருபர்**



சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட அல் முனீர் வித்தியாலய மாணவியான எம். ஏ பாத்திமா இப்திஹாஜ் இரண்டாம் மொழியான சிங்கள மொழி பேச்சுப்போட்டிக்கு அகில இலங்கை ரீதியாக பங்கு பற்றி கல்வி அமைச்சினால் சான்றிதழ் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இவர், சம்மாந்துறை மட்டக்களப்பு தரவை இரண்டாம் பிரிவை சேர்ந்த ஹம்சா, ஜஸ்மின் தம்பதிகளின் புதல்வியாவார்.


**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் மற்றும் ஏனையவற்றிற்காக காப்புறுதி திட்டத்திற்கான விலைமனுக்கள்**

**B/55/2023**

2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், ஒறுகொடவத்தையிலுள்ள சுத்திகரிக்கப்படாத எண்ணெய் தாங்கி பண்ணை, சப்புகஸ்கந்த விநியோக முனையம், கட்டுநாயக்க, மத்தள மற்றும் ரத்மலான சர்வதேச விமானநிலையங்களின் விமானங்களுக்கான எரிபொருள் வசதிகள், Bonded Stock at Power Plants, Terrorism Cover , முத்துராஜவெலவிலுள்ள உராய்வுநீக்கி கையிருப்பு மற்றும் சொத்துக்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய வசதிகளுக்காக ஆதன காப்புறுதி திட்ட ஏற்பாடுகளுக்காக இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவின் கீழ் பதிவு பெற்ற தகுதியும் புகழ்பெற்ற காப்புறுதி சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் அல்லது காப்புறுதி தரகர்களிடமிருந்து கொழும்பு-09, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.

விலைமனுக்கோரல் ஆவணமானது **http://ceypetco.gov.lk/public-tenders/** என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் அல்லது 2024.01.01 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விலைமனுவிற்கும் வரிகள் அடங்கலாக 35,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக இபெகூ தலைமையக காசாளரிடம் செலுத்தப்படல் வேண்டும் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள இறுதி தினத்தன்று அல்லது அதற்கு முன்னராக விலைமனுவானது பதிவிறக்கம் செய்யப்பட்டால் மக்கள் வங்கி தலைமையகத்தின் 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பெயரில் வரவு வைக்கப்பட்டு விலைமனுவுடன் பற்றுச்சீட்டானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுவானது 2024.01.11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு, மூடப்பட்ட நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுவை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் ஒவ்வொரு பொது ஒப்பந்தத்திற்கும் வளமுள்ள விலைமனுதாரர் http://eroc.drc.gov.lk / என்ற இணையதளத்தினூடாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் பொது ஒப்பந்த சட்ட (பிசிஏ) 3 சான்றிதழானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

**தலைவர்,அமைச்சு பெறுகைக் குழு,**
**முகாமையாளர்**
**(பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**01 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**



**NLB**

**தேசிய லொத்தர் சபை**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

| | |
|---|---|
| 1 | **தேசிய லொத்தர் சபைக்காக off-premise email server ஒன்றை பெறுவதற்கான பெறுகை** |
| 2 | **தேசிய லொத்தர் சபைக்காக Board Management Software Application இன் வழங்கல் மற்றும் பராமரித்தலுடன் கொள்வனவு ஈடுபடுத்தலுக்கான பெறுகை** |

01. தேசிய லொத்தர் சபைக்காக கீழ் குறிப்பிடப்பட்ட உருப்படிகளின் வழங்கலுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய லொத்தர் சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகின்றார்.

02.

| பெறுகையின் பெயர் | தேசிய லொத்தர் சபைக்காக off-premise email server ஒன்றை பெறுவதற்கான பெறுகை | தேசிய லொத்தர் சபைக்காக Board Management Software Application இன் வழங்கல் மற்றும் பராமரித்தலுடன் கொள்வனவு ஈடுபடுத்தல் |
|---|---|---|
| விலைமனு இலக்கம் | NLB/PRC/04/Email server/20230108 | NLB/PRC/06/BMSA/124/2023 |
| விலைமனுப் பிணை பெறுமதி (ரூபா) | 60,000.00 | 50,000.00 |
| ஆவணக் கட்டணங்கள் (ரூபா) (மீளளிக்கப்படாதது) (வெட் உடன்) | 1,000.00 | 1,000.00 |
| தகைமை அளவுகோல் | • விலைமனுதாரர் கம்பனிச் சட்டம் அல்லது மற்ற தொடர்புடைய நிர்வாகத்தின் கீழ் உள்ளூரில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதோடு நிறுவனம் கடந்த பத்து ஆண்டுகள் செயற்பட்டிருத்தல் வேண்டும். (வர்த்தகப் பதிவை இணைத்திருத்தல் வேண்டும்)<br>• வெட் பதிவுச் சான்றிதழ் பிரதி ஒன்று (வெட் பொருந்துவதாயின்)<br>• தற்போதும் செயற்பாட்டை முன்னெடுக்கின்ற கடந்த 3 வெற்றிகரமான இதனையொத்த திட்டங்கள் மற்றும் தொடர்பு விபரங்களுடன் வாடிக்கையாளர் குறிப்பு.<br>• நெருங்கிய கடந்த மூன்று ஆண்டுகளின் கணக்காய்வுக்கு உட்பட்ட உறுதிசெய்யப்பட்ட நிதி அறிக்கைகளுடன் மேலே குறிப்பிடப்பட்ட நிதி ஆண்டுகளுக்குரிய வருடாந்த சராசரி மொத்த புரள்வு 05 மில்லியன் ரூபாவுக்கு குறையாத அறிக்கைகள். | • விலைமனுதாரர் கம்பனிச் சட்டம் அல்லது மற்ற தொடர்புடைய நிர்வாகத்தின் கீழ் உள்ளூரில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதோடு நிறுவனம் கடந்த பத்து ஆண்டுகள் செயற்பட்டிருத்தல் வேண்டும். (வர்த்தகப் பதிவை இணைத்திருத்தல் வேண்டும்)<br>• வெட் பதிவுச் சான்றிதழ் (வெட் பொருந்துவதாயின்)<br>• எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர் அரச மற்றும் தனியார் நிறுவனம் இரண்டிலும் (2:3) பத்து (10) மில்லியனுக்குக் குறையாத பெறுமதியுடைய வெற்றிகரமான திட்டத்தை செயற்படுத்தி இருத்தல் வேண்டும் என்பதோடு அவ்வாறான திட்டத்தின் வாடிக்கையாளர்கள் விபரத்தை வழங்குதல் வேண்டும்.<br>• நெருங்கிய கடந்த மூன்று (03) ஆண்டுகளின் கணக்காய்வுக்கு உட்பட்ட உறுதி செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் மேலுள்ள நிதி ஆண்டுகளுக்கான சராசரி ஆண்டு புரள்வு பத்து (10) மில்லியனுக்கு குறையாதிருத்தல் வேண்டும். |

03. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.

04. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, 01ஆவது மாடி, பெறுகைப் பிரிவு, உதவி பொது முகாமையாளர் (பெறுகை) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. 0114607020/ 0114607021/ 0114607023) என்பதோடு கீழ் குறிப்பிடப்பட்ட காலத்தில் எந்த ஒரு வேலை நாட்களிலும் **9.00** மணி தொடக்கம் **15.00** மணி வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

05. மேற்குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி எந்த ஒரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் **15.00** மணி வரை **2023.12.21** ஆம் திகதி தொடக்கம் **2024.01.10** ஆம் திகதி வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாள் ஒன்றில் எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்ய முடியும். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.

06. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை **2024.01.11** ஆம் திகதி **14.30** மணி அல்லது அதற்கு முன்னர் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது, நிராகரிக்கப்படும். நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, "கூட்ட அறை", 06ஆவது மாடியில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் நிறைவடைந்த பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் தரப்பட்டுள்ள வடிவத்திற்கு அமைய **கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, தலைவரை பயனாளியாகக்** குறிப்பிட்டு மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் மாத்திரம் வழங்கப்பட்ட மேலுள்ள 02 இன் கீழான அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு **விலைமனுப் பிணை** ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

07. வெற்றிகரமான விலைமனுதாரர் ஒப்பந்தப் பெறுமதியின் 10% செயற்திறன் பிணையை 12 மாத காலத்திற்கு வழங்குதல் வேண்டும்.

08. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "...................... (உருப்படி பெயர்) இன் வழங்கலுக்கான விலைமனு மற்றும் விலைமனு இலக்கத்தை" குறிப்பிட்டு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் ஆவணங்களை அனுப்புதல் வேண்டும்.

09. **தேசிய லொத்தர் சபைக்காக off- premise email server ஒன்றை பெறுவதற்கான பெறுகைக்கு** தொடர்புடைய விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபையில் **2024.01.02** ஆம் திகதி **14.00** மணிக்கு இடம்பெறும்.

10. விலைமனுக்களை தயாரித்தல் அல்லது சமர்ப்பிப்பதுடன் தொடர்புபட்டு விலைமனுதாரர்களினால் ஏற்படும் எந்த ஒரு செலவு அல்லது இழப்புக்காகவும் தேசிய லொத்தர் சபை பொறுப்பேற்காது.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய லொத்தர் சபை,**
**இல. 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை,**
**கொழும்பு 01.**


# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்



**117 வேன்கள் விற்பனைக்கு**

59-8228 NISSAN, 1992, VAN அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 1454295 8. 083919



**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

YV-9422 BAJAJ, 2011, THREE WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0. 083918

## வேலைவாய்ப்பு



**308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்**

புறக்கோட்டை, பிரதான வீதியில் அழகு சாதனங்கள் கடைக்கு விற்பனை ஊழியர் தேவை. வயது 30 இற்கு குறைவாகவிருத்தல் வேண்டும். தொடர்பிலக்கம் 0777433455. 083926



**325 தொழில்துறை பொது**

சாசரண பராமரிப்பு நிலையத்திற்கு நோயாளர்களைப் பராமரிப்பதற்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஆண்/ பெண் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தினமும் சம்பளம் ஒரு நாள் சம்பளம் ரூ. 2000/= தேவைப்படும் ஆவணங்கள் கிராம அதிகாரி சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையும். உடனடியாக அழையுங்கள் 011-7604526, 0776315983, 075 2306797, 0766542999. 083757

---

## புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்

### சுற்றாடல் அமைச்சு

**ஹம்பாந்தோட்டை பிரதேசத்தின் விடுதி ஒன்றிற்கு வீடொன்றை வாடகை அல்லது குத்தகைக்கு பெறல்**

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் ஹம்பாந்தோட்டை அலுவலகத்தின் அதிகாரிகளுக்கு விடுதியொன்றிற்காக வீடொன்றை வாடகை அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளத் தேவையாக உள்ளது. அதனோடு சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை www.gsmb.gov.lk இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## இலங்கை புகையிரத சேவைகள்

### விலைமனுக்கோரல்

**களனி வெளி (KV) புகையிரத பாதையில் EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான 5,000 எண்ணிக்கையிலான உயரம் குறைந்த CONCRETE SLEEPERS வழங்கல்**

**IFB இலக்கம் - SRS F.7951**

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் தலைவரினால் **களனி வெளி (KV) புகையிரத பாதையில் EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான 5,000 எண்ணிக்கையிலான உயரம் குறைந்த CONCRETE SLEEPERS** வழங்குவதற்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விகோரல் தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)
3. மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை **2023.12.21** ஆம் திகதி **2024.01.11** ஆம் திகதி **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் செய்ய முடியும்.

   **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
   **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
   **ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
   **தொலைபேசி இல : 94(11) 2438078, அல்லது 94(11) 2436818**
   **தொலைநகல் இல : 94 (11) 2432044**
   **மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
   **இணையத்தளம் : www.railway.gov.lk**

4. மனுதாரர், இலங்கை **புகையிரத சேவைக்கு 5,000 இற்கும் அதிகமான உயரம் குறைந்த CONCRETE SLEEPERS** வழங்கியிருக்க வேண்டும் அல்லது **ரூ.50 மில்லியன் ரூபாய்க்கு** மேல் மதிப்புள்ள முன் அழுத்தப்பட்ட கொன்கிரீட் கம்பங்களை (pre-stressed Concrete Beams) வழங்கியிருக்க வேண்டும். இல்லையெனில் கடந்த (05) ஐந்து ஆண்டுகளில் **ரூ.500 மில்லியன் ரூபாய்க்கு** குறையாத கொன்கிரீட் கம்பங்களை வழங்கியமைக்கான விலைப்பட்டியலிடப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கையின் ரயில்வே கொள்முதல் புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.31,250/-** கொள்முதல் கட்டணத்தை செலுத்தி **2023.12.21** ஆம் திகதி முதல் **2024.01.11** ஆம் திகதி **பி.ப.3.00** மணிக்கு அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக **ரூ.1,750,000.00** இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் **2024.01.12** ஆம் திகதி **பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஓல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10.**

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
இலங்கை புகையிரத சேவைகள்.
கொள்முதல் இல.: **SRS/F.7951**

SEL ACINE

---

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

### இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தொலைக்காட்சி நாடக வான் காலத்திற்கான ஆர்வத்தை (Expression of Interests) வெளிப்படுத்துதல்

**EOI இல. 02/ 2024.01.10**

''ரூபவாஹினி'' மற்றும் ''நேத்ரா'' தொலைக்காட்சி அலைவரிசையின் பின்வரும் தொலைக்காட்சி நாடக வான் காலத்திற்கு இலங்கை, கொழும்பு 07, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட ஆர்வ வெளிப்பாடுகள் அழைக்கப்படுகின்றன.

| # | திகதி | ரூபவாஹினி | நேத்ரா |
|---|---|---|---|
| 01 | வார நாட்கள் (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை) | பி.ப. 6.00 - 6.30 | பி.ப. 6.00 - 6.30 |
| | | பி.ப. 6.30 - 7.00 | பி.ப. 6.30 - 7.00 |
| | | பி.ப. 7.00 - 7.30 | பி.ப. 7.00 - 7.30 |
| | | பி.ப. 8.30 - 9.00 | பி.ப. 8.00 - 8.30 |
| | | | பி.ப. 8.30 - 9.00 |
| 02 | வார இறுதி நாட்கள் (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) | பி.ப. 7.00 - 7.30 | பி.ப. 6.00 - 6.30 |
| | | பி.ப. 8.30 - 9.00 | பி.ப. 6.30 - 7.00 |
| | | | பி.ப. 7.00 - 7.30 |
| | | | பி.ப. 8.00 - 8.30 |
| | | | பி.ப. 8.30 - 9.00 |

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர் குறித்த வான் காலத்தில் உங்களது தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்பு செய்வதற்கு செலுத்த முடியுமான விலைகளைக் குறிப்பிட்டு தமது ஆர்வத்தை வெளிப்படுத்துதல் வேண்டும். உங்களது தொலைக்காட்சி நாடகம் HD வடிவத்தில் (HD Format) இருத்தல் வேண்டும் என்பதுடன் வார நாட்களில் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நாடகம் ஆரம்பம் முதல் 20 அங்கங்களைக் (Episodes) கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் வார இறுதி நாட்களில் ஒளிபரப்பப்படும் நாடகம் குறைந்தபட்சம் 15 அங்கங்களைக் (Episodes) கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள தரப்பினர் 2024-01-09ஆம் திகதி அல்லது அதற்கு முன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் பின் இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாட்டு (EOI) ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு தொகுதி ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்திற்காக மீளளிக்கப்படாத கட்டணமாக 2000.00 ரூபாவை (இரண்டாயிரம் ரூபா) இக்கூட்டுத்தாபன பிரதான கணக்காளரிடம் செலுத்துதல் வேண்டும். 2024-01-09ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக அலுவலக நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையில் (வர்த்தக விடுமுறைகள் நீங்கலாக திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும்) ஆர்வ வெளிப்பாட்டு ஆவணங்களின் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். ஆர்வ வெளிப்பாட்டு ஆவணங்களை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரின் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

2024-01-10ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரின் அலுவலகத்தில் ஆர்வ வெளிப்பாடுகள் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடனடியாகவே திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை (தேவைப்படின்) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பிரதி பணிப்பாளர் நாயகம் (நிகழ்ச்சிகள்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி : +94 112 501056/ தொலைநகல் +94 112 352730)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07**
**இலங்கை.** (SLRC Website : http://www.rupavahini.lk)

---


## Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361


---

## விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம் ICB/NCB |
| சேவைகள் | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/147 வாடகைக்கு குறுகப் உகனமின் பாவனையாளர் சேவை நிலையம் - அம்பாறை (இரண்டுவருடகாலம்) | 03.01.2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை 063-2222387 / 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 / 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத்திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்தி வரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை, பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

## இலங்கை வங்கி

# திருத்தம் பற்றிய அறிவித்தல்

## ஏலவிற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

2023.12.15ஆம் திகதி தினகரன் பத்திரிகையின் IIIஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் 456 என தவறாகக் குறிப்பிட்டிருந்த சுபாஷ் அன்ட் சேச்சில் கார் சென்ரர் நிறுவனத்தின் ஆதன இலக்கம் பின்வருமாறு திருத்தப்பட வேண்டும்.

1. கடன் தொடர்பு இலக்கம் - 88155374, 88156274

இல. 465, கனஹேன, பத்தரமுல்ல என்ற முகவரியிலுள்ள சுபாஷ் அன்ட் சேச்சில் கார் சென்ரர் நிறுவனத்தின் கடன் பொறுப்புகளுக்காக இல. 465, கனஹேன, பத்தரமுல்ல என்ற முகவரியில் அமைந்துள்ள ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

**W.M.H.A.S.S.B. ஏக்கநாயக்க**
**சிரேஷ்ட முகாமையாளர்**
**அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை**

**இலங்கை வங்கி**
**தலைநகரக் கிளை**
**திகதி:**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## வடமேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் நடமாடும் பரிசோதகர் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் நடமாடும் பரிசோதகர்களை சேர்த்துக் கொள்ளல்

(1) வெற்றிட எண்ணிக்கை 07 ஆகும்
(2) நடமாடும் பரிசோதகர் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் அதிகாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன், வடமேல் மாகாணத்தில் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும்.
(3) மாதாந்த கொடுப்பனவு ரூ. 27910.00 ஆகும்
  i. வேறு மேலதிக கொடுப்பனவுகள் உண்டு
  ii. அரச மற்றும் வார இறுதி விடுமுறை தினங்களில் சேவையில் ஈடுபடல் சார்பாக மேலதிக மற்றும் வேறு கொடுப்பனவுகளுக்காக உரித்துரிமை உண்டு.
(4) கல்வித் தகைமைகள்:
  i. கல்விப் பொதுத் தராதர (சா/தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் கணிதம், ஆங்கிலம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
  ii. கல்விப் பொதுத் தராதர (உ/தரம்) பரீட்சையில் குறைந்த பட்சம் 03 பாடங்களில் (பொதுப் பரீட்சை தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்
(5) வயதெல்லை
  i. 18 வயதிற்குக் குறையாமலும் 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
  ii. உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது

உங்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமொன்றை 2024.01.15ம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, ஹால்பர சந்தி, போயகனே என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்கம் ஒப்பந்த அடிப்படையில் நடமாடும் பரிசோதகர் பதவிக்காக சேர்த்துக் கொள்ளல்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
**வீதிப் பயணிகள், போக்குவரத்து அதிகார சபை,**
**வடமேல் மாகாணம்.**

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

08.11.2023ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு எஸ்.டி. பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2015.08.31ஆம் திகதியிடப்பட்ட 1578ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் இலக்கம் 36/8, களனிசிறி மாவத்தை, சின்ஹரமுல்ல, களனி எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ரணதுங்க ஆரச்சிகே நலின் அர்ஜுன என்பவர் பெற்றுக்கொண்ட வீட்டுக் கடன் வசதி மீது 2023.10.02ஆம் திகதி வரையிலான வட்டி மற்றும் முதல் நிலுவையாக 14,073,732.50 ரூபாயும் (பதினான்கு மில்லியன் எழுபத்து மூவாயிரத்து எழுநூற்று முப்பத்திரண்டு ரூபாய் ஐம்பது சதம்) அத்துடன் 2023.10.03ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரையில் 9,183,448.54 ரூபாய் (ஒன்பது மில்லியன் நூற்று எண்பத்து மூவாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு ரூபாய் ஐம்பத்து நான்கு சதம்) மீது ஆண்டுக்கு (13.5மூ) பதின்மூன்று தசம் ஐந்து என்ற வீதத்தில் திரட்டப்பட வேண்டிய மேலதிக வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளது.

2. பிரசித்த நொத்தாரிசு எஸ்.டி.பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2015.08.31ஆம் திகதியிடப்பட்ட 1578ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் நிலுவையாகவுள்ள 14,073,732.50 ரூபாயையும் (பதினான்கு மில்லியன் எழுபத்து மூவாயிரத்து எழுநூற்று முப்பத்திரண்டு ரூபாய் ஐம்பது சதம்) அத்துடன் 2023.10.03ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட மேலதிக வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம், மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கீழுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 6A, ∴பெயா பீல்ட் காடன், கொழும்பு-08 எனும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் ஸ்கோக்மன் அன்ட் சமரவிக்கிரமவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி புறக்கோட்டை கிளையின் மூப்புநிலை முகாமையாளருக்கும் (அறவீடு) இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை

"மீகாஹவத்த" என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ரட்ண ஹெட்டியாராச்சி தயாரித்த 1993.12.30ஆம் திகதியிடப்பட்ட 228/1993ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு 1 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மேல்மாகாணம், கம்பஹா மாவட்டம் சியானே கோரளை அதிகாரி பற்றுவில், பியகம பிரதேச செயலகம் மற்றும் பியகம பிரதேச சபை எல்லைகளுள் (கடவத்தை துணை அலுவலகம்) இல. 268அ, மேற்கு பஹல பியன்வில கிராம உத்தியோகத்தர் பிரிவில், 117 எக்ஸத் மாவத்தை எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தில் பஹல பியன்விலவில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது வடக்கில் வீதியையும் கிழக்கில் துண்டு 2 ஐயும் தெற்கில் எக்ஸத் மாவத்தவினையும் மேற்கில் கே.எல்.எஸ். சந்தியா பெரேரா என்பவரின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது இருபது தசம் பூச்சியம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ0.ஆர்0.பே20.05) பரப்பளவுடன் மேற்குறிப்பிடப்பட்ட 228/1993 ஆம் இலக்க வரைபடத்தின்படி அங்குள்ள வீடு, மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் N264/41 எனும் இலக்கத்தின் கீழ் மஹர காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**குறித்த காணித்துண்டு 1 ஆனது உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு. ஜீ. சுனில் சோமசிறி தயாரித்த 2015.01.10ஆம் திகதியிடப்பட்ட 2004ஆம் இலக்க அண்மைய வரைபடத்தின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.**

"மீகாஹவத்த" என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு. ஜீ. சுனில் சோமசிறி தயாரித்த 2015.01.10ஆம் திகதியிடப்பட்ட 2004ஆம் இலக்க வரைப்படத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு 1 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மேற்குறிப்பிட்டதன்படி பஹல பியன்விலவில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது வடக்கில் வீதியையும் கிழக்கில் 228/1993ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 ஐயும் தெற்கில் எக்ஸத் மாவத்தவினையும் மேற்கில் கே.எல்.எஸ். சந்தியா பெரேரா என்பவரின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது பத்தொன்பது தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.ஆர்0.பே19.90) பரப்பளவுடன் குறித்த 2004ஆம் இலக்க வரைபடத்தின்படி அங்குள்ள வீடு, மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தையும் கொண்டுள்ளது.

எக்ஸத் மாவத்தவினையும் வடக்கு எல்லையிலுள்ள வீதியையும் பயன்படுத்துவதற்கான வழி உரிமையுடன்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

**ஆர்.எம்.டீ.ரத்னாயக்க**
**மூப்புநிலை முகாமையாளர்,**

**இலங்கை வங்கி,**
**புறக்கோட்டை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

சிற்றுண்டிச்சாலைகள், நலன்புரிக்கடைகள் மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் போட்டோப்பிரதி கடைகள் என்பவற்றினை நடாத்துவதற்கான விலைமனு கோரல் 2024/2025

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பின்வரும் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் நலன்புரிக்கடைகளை ஒரு வருடத்திற்கு நடாத்துவதற்கு அனுபவம் வாய்ந்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றது.

1. சிங்கராஜ விடுதி சிற்றுண்டிச்சாலை
2. பிரதான சிற்றுண்டிச்சாலை
3. புதிய வளவ விடுதி சிற்றுண்டிச்சாலை
4. கபேரியா சிற்றுண்டிச்சாலை
5. விவசாய விஞ்ஞான பீட சிற்றுண்டிச்சாலை
6. பணியாளர் சிற்றுண்டிச்சாலை
7. சமனல விடுதி சிற்றுண்டிச்சாலை
8. முகாமைத்துவ கற்கைகள் பீட நலன்புரிக்கடை
9. சமூக விஞ்ஞான மற்றும் மொழிகள் பீட நலன்புரிக்கடை
10. தொழில்நுட்ப பீட நலன்புரிக்கடை
11. முகாமைத்துவ கற்கைகள் பீட போட்டோப்பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடை
12. விவசாய விஞ்ஞான பீட போட்டோப்பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடை
13. பிரயோகவியல் விஞ்ஞான பீட போட்டோப்பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடை
14. மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலை- இரத்தினபுரி (பட்டுகேன வளாகம்)
15. மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலை- இரத்தினபுரி (கல்கடுவவற்ற வளாகம்)
16. மருத்துவ பீட போட்டோப்பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடை- இரத்தினபுரி

விலைமனு கோரல் ஆவணங்களை (1-14, சிங்கள மொழியில்) மீளப்பெறமுடியாத கொடுப்பனவாக ஒவ்வொன்றுக்கும் ரூபா. 500.00 இனை பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற சிட்டையினை பொது வேலை நாட்களில் 2023.12.21 திகதி முதல் 2024.01.11 திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலப்பகுதியில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் கல்விசார் மற்றும் மாணவர் சேவைகள் பிரிவிற்கு சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலை மற்றும் போட்டோப்பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடைக்கான விலைமனு கோரல் ஆவணங்களை (15-17, சிங்கள மொழியில்) மீளப்பெறமுடியாத கொடுப்பனவாக ஒவ்வொன்றுக்கும் ரூபா. 500.00 இனை இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு ஆதரவாக இலங்கை வங்கியின் கணக்கு இல. 2246976 ற்கு வைப்புச்செய்து பெற்ற சிட்டையினை இரத்தினபுரியிலுள்ள (கல்கடுவவற்ற வளாகம்) மருத்துவ பீடத்தின் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட மனுக்களை நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ சிரேஷ்ட உதவிப்பதிவாளர்- கல்விசார் மற்றும் மாணவர் சேவைகள் பிரிவு, தபால் பெட்டி இல. 3.00, பெலிகிலோயா எனும் முகவரிக்கு 2024.01.12.ஆம் திகதியில் அல்லது அத்திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

கடித உறையின் இடது மேல் மூலையில் சிற்றுண்டிச்சாலையின் அல்லது நலன்புரிக்கடையின் அல்லது போட்டோப் பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடையினது பெயர் குறிப்பிடல் வேண்டும்.

மனுதிறத்தலானது சிரேஷ்ட உதவிப்பதிவாளர்- கல்விசார் மற்றும் மாணவர் சேவைகள் பிரிவு, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகிலோயா எனும் முகவரியில் 2024.01.12 ஆம் திகதி பி.ப. 3.15 மணிக்கு இடம்பெறும். இதில் மனுதாரர்கள் அல்லது மனுதாரர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்க முடியும். இது தொடர்பில் பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுவின் முடிவே இறுதியானது மற்றும் பெறுகை நடவடிக்கையின் எந்தவொரு நிலையிலும் விமர்சிப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

**பதிவாளர்**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்**
**தபால் பெட்டி இல. 02**
**பெலிகிலோயா**
**2023.12.21**

## கேள்வி அறிவித்தல்

### பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - அநுராதபுரம்

# 2024ம் ஆண்டிற்கான சுவபோஷ உணவகத்தை நடத்திச் செல்லல்

1. அநுராதபுரப் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் அநுராதபுரம் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை சுவபோஷ உணவகத்தை 2024ம் ஆண்டிற்காக நடத்திச் செல்வதற்கு இங்கு பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. இங்கு குறைந்தபட்ச கேள்வி ரூ. 30,000.00 ஆவதுடன் ஒப்பந்தக் காலம் 12 லீப் மாதங்களாகும்.
2. கேள்விகோரல் தேசிய போட்டி முறையின் மூலம் நடைபெறும்.
3. கேள்விதாரர்கள் அநுராதபுர மாவட்டத்தில் வசிப்பவர்களாக இருப்பதுடன் உள்ளூர் உணவு உற்பத்தி, இயற்கையான பழங்கள் சார்ந்த பான வகைகள் உற்பத்தி மற்றும் உணவு மருந்து வகைகள் அடங்கிய உணவுப் பானங்களை வழங்குதல் பற்றிய அறிவு மற்றும் அனுபவம் இருத்தல் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.
4. அவ்வாறான தகைமைகள் இருப்பின் அது பற்றிய சான்றிதழ்களை கேள்விப் பத்திரத்துடன் இணைத்திருத்தல் வேண்டும்.
5. கேள்விதாரர்கள் தமது வதிவை உறுதி செய்வதற்காக குறித்த பிரதேச செயலாளரால் உறுதி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்விப் பத்திரத்துடன் இணைத்திருத்தல் கட்டாயமாவதுடன் அவ்வாறல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
6. சகல உணவுகளுக்கும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறல்லாது இருப்பது கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகும்.
7. முழுமையான கேள்வி ஆவணங்களை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர், பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, அநுராதபுரம் இடம் 2023.12.21 முதல் 2024.01.10 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 - பி.ப. 3.00 இற்கு இடையிலான காலத்தில் மீளளிக்கப்படாத ரூ. 2500.00 தொகையை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
8. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.01.11 முற்பகல் 10.00 இற்கு முன்பு "தலைவர் / பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர், பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, பண்டார நாயக்க மாவத்த, அநுராதபுரம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறத்தல் ஆரம்பமாவதால் அதற்காக கேள்விதாரருக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
9. சகல கேள்விப்பத்திரத்துடனும் ரூ.15000.00 பெறுமதியான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட 2024.01.11 முதல் 91 நாட்கள் செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றை கேள்விப் பத்திரத்துடன் இணைத்து இருத்தல் அல்லது இவ் அலுவலகத்தில் காசு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை கேள்விப்பத்திரத்துடன் இணைத்திருத்தல் கட்டாயமாகும்.

**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**பண்டார நாயக்க மாவத்தை,**
**அநுராதபுரம்**

## கேள்வி அறிவித்தல்
## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
## சுத்திகரிப்புப் பிரிவு

### சுத்திகரிப்பு வீடமைப்புத் திட்டத்திற்கான பாதுகாப்புச் சேவையை வழங்குதல் (11 ஏக்கர் மற்றும் 5 ஏக்கர் புளொக்குகள்)

**பகிரங்கக் கேள்வி குறிப்பீட்டிலக்கம்: PD/SER/11/2023**

12 மாத காலப்பகுதிக்கு சுத்திகரிப்பு வீடமைப்புத் திட்டத்திற்கான பாதுகாப்புச் சேவையை (11 ஏக்கர் மற்றும் 5 ஏக்கர் புளொக்குகள்) வழங்குவதற்காக தகுதி வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை (ரூ. 848.36 + 2.5% SSCL + 15% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுதாரர்களும் 2024-01-03ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் இடம்பெறும் தள விஜயத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளல் கட்டாயமாகும் என்பதுடன் இதற்கு சமுகமளிக்காதவர்களின் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விலைமனுக்கள் 2024-01-10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09**
**தொலைபேசி: 0094-11-5455332**
**தொலைநகல்: 0094-11-5455424**

## கேள்வி அறிவித்தல்

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

**PROCUREMENT OF HD/SD DIGITAL VIDEO PRODUCTION SWITCHER SYSTEM**

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு HD/SD DIGITAL VIDEO PRODUCTION SWITCHER SYSTEM பெறுகைக்காக இலங்கை, கொழும்பு 07, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

| பெறுகை | கேள்வி இலக்கம் |
|---|---|
| 01 No of HD/SD 2ME Digital Video Production Switcher for OB Bus | 05 /2024.01.17 |
| 02 Nos of HD/SD 2ME Digital Video Production Switcher for Studio 1 & 3 | 06 /2024.01.17 |

உயர் தரத்திலான ஒளிபரப்பு உபகரணங்களின் உற்பத்தியாளர்கள், தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் இக்கேள்வியில் பங்குபெற்றலாம். 2024-01-16ஆம் திகதி அல்லது அதற்கு முன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் பின் இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம். மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 5000.00 ரூபாவை (ஐயாயிரம் ரூபா) இக்கூட்டுத்தாபன பிரதான கணக்காளரிடம் செலுத்துதல் வேண்டும். 2024-01-16ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக அலுவலக நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையில் (வர்த்தக விடுமுறைகள் நீங்கலாக திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும்) கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரின் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

கேள்வி ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு அனைத்து கேள்விகளுடனும் விலைமனுப் பிணையொன்று (வங்கி உத்தரவாதம்) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உற்பத்தியாளர்களின் சார்பாக இக்கேள்வியில் பங்குபெறுவதற்கு அதிகாரமளிக்கப்படுவதற்காக முதன்மையாளர்களினால் வழங்கப்பட்ட தரஅங்கீகார/அற்றோணித்தத்துவ கடிதமொன்றை சமர்ப்பிக்குமாறு முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

FOB விலையில் முகவர் தரகுப்பணம் ஏதாவது உள்ளடக்கப்பட்டிருப்பின், அத்தொகையானது தனியாக காட்டப்படல் வேண்டும்.

2024-01-17ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரின் அலுவலகத்தில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடனடியாகவே திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை (தேவைப்படின்) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பிரதி பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(தொலைபேசி : +94 112 580 136/ தொலைநகல் +94 112 500373)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07**
**இலங்கை.** **(SLRC Website : http://www.rupavahini.lk)**

Marriage Proposals in the Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

The Housewives' companion
Classifieds on
Daily News

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer adz Auto Focus
Magazine Issued with Sunday Observer
THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz
- Auto Focus
Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com



## SLITA

# இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம்

## கைத்தொழில் அமைச்சு

**பதவி வெற்றிடம்**

பயிற்சி, பரிசோதித்தல், தொழில்நுட்ப சேவைகள் மற்றும் தொழில்நுட்ப செயற்றிட்டம் மற்றும் உசாத்துணை ஆகியவற்றை புடவை மற்றும் ஆடை கைத்தொழிலுக்கு வழங்கும் அரசாங்க நியதிச்சட்ட அமைப்பொன்றாக இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகமானது விளங்குவதுடன் தற்போது பின்வரும் பதவி வெற்றிடமானது காலியாகவுள்ளது.

**பெறுகை அலுவலர் - தரம் II**

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளியக விண்ணப்பதாரிகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிர்வாகம், வர்த்தக நிர்வகம், முகாமைத்துவம், வர்த்தக கணக்கிடல் அல்லது வர்த்தக முகாமைத்துவத்தில் பெற்றவொரு இளமாணிப் பட்டம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்: (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**
1. வெளியக விண்ணப்பதாரிகளுக்கு மேலேயுள்ளவாறு தேவைப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகத்தில் II ஆம் தரத்தில் பதவிக்குரித்தான பாடப்பரப்பில் தொழில்நுட்பம் சாராத முகாமைத்துவ உதவியாளராக (எம்ஏ 1-2) ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதிற்கு குறைவில்லாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூபா 43,355- 10 x 755-18x1,135-71,335 (சம்பள செய்விதி - ஜேஎம் 1-2-2016)

* அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நன்மைகளுமுண்டு.
* மேற்பட்ட தகைமைகள் சேர்க்கப்பட்ட தகைமையாகும்.

மேலேயுள்ளதில் உங்களுக்கு ஆர்வமிருந்தால், 2024 ஜனவரி 04 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உங்கள் விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் விபரமான குறிப்புடனும் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்களுடனும் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்டு உங்கள் விண்ணப்பத்தை அனுப்பவும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடவும். (தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்களென்பதுடன் சபை ஆளுநர்களின் தீர்மானமே இறுதியானதாகும்).

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம்,**
**இல. 02, கந்தவல தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானை.**
**தொலைபேசி: 011 2632406. இணையம்: www.slita.ac.lk**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனுக்கோரல் (IFB)**

### வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான சேவைகளை வழங்குதல்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்வனவுக் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிட்டம்புவ நிர்வாக பொறியியலாளர் பிரிவினால் கீழ்க்குறிப்பிடப்பட்ட சேவையினை வழங்குவதற்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

I. **RDA/GAM/CE/TEN/2023/29** - நிட்டப்புவ வேலைத்தளத்திற்கு சேவையினை பெற்றுக்கொள்வதற்காக தேர்ச்சி பெறாத தொழிலாளர்களை சேர்த்துக்கொள்ளல்.

II. **RDA/GAM/CE/TEN/2023/30** - பூகொட வேலைத்தளத்திற்கு சேவையினை பெற்றுக்கொள்வதற்காக தேர்ச்சி பெறாத தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளல்.

III. **RDA/GAM/CE/TEN/2023/31** - மீரிகம வேலைத்தளத்திற்கு சேவையினை பெற்றுக்கொள்வதற்காக தேர்ச்சி பெறாத தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளல்.

2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிரதேச கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கம்பஹா.**

SELACINE

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.
Replies sent under registered cover will not be accepted.

## வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

**டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கோப்பு முகாமை நிகழ்ச்சித் திட்ட முன்மொழிவுகளுக்கான அழைப்பு**

**இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் (NIPO) "ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கோப்பு முகாமை நிகழ்ச்சித் திட்டத்திற்கான"** சர்வதேச போட்டி விலைமனுக்கோரல் செயல்முறையொன்றின் (ICBP) கீழ் முன்மொழிவுகளுக்கு அழைப்பு விடுக்கும் கேள்விப் பத்திர ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ள இணைப்புக்களில் பதிவேற்றப்பட்டுள்ளன என்பதை பொதுமக்களுக்கு அறியத் தருகிறோம்.

**விபரங்களை கீழ்வரும் இணைப்புக்களில் பெற்றுக் கொள்ளுங்கள்:**

WIPO - https://www.ungm.org/public/notice/220550
NIPO - https://www.nipo.gov.lk/web/index.php?option=comcontent&view=article&id=193

முன்மொழிவுகளை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி : **2024 ஜனவரி 05 ஆம் திகதி**

**கீதாஞ்சலி ஆர். ரணவக்க,**
**புலமைச் சொத்து பணிப்பாளர் மா அதிபதி.**
**இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்**
**வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு**

**தொலைபேசி : +94 112 669 179**
**மின்னஞ்சல் முகவரி: nipos@sltnet.lk**

**இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்**
**சமாகம் மெதுர, இலக்கம் 400**
**டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10**

**கேள்வி அறிவித்தல் – சஞ்சிகைகளை அச்சிடுதல் மற்றும் வழங்குதல்**

# இலங்கை இராணுவம்

1. இலங்கை இராணுவத்திற்கு 2024ஆம் வருடத்திற்குத் தேவையான ரணவிருவா சிங்கள சஞ்சிகை, Bellator ஆங்கில சஞ்சிகை மற்றும் அசல்வெசியா தமிழ் சஞ்சிகை என்பவற்றை வடிவமைத்ததன் பின் அச்சிட்டு வழங்குவதற்காக தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் நடைமுறையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

| கோவை இலக்கம் | உருப்படி | கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் காலம் | கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| DOS/2023/3134 | ரணவிருவா சிங்கள சஞ்சிகை (மாதாந்தம் 1000 எண்ணிக்கை) | 2023-12-21ஆம் திகதி முதல் 2024-01-11ஆம் திகதி வரை (வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 04.00 மணி வரை) | 2024-01-12ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| | Bellator ஆங்கில சஞ்சிகை (மாதாந்தம் 225 எண்ணிக்கை) | | |
| | அசல்வெசியா தமிழ் சஞ்சிகை (மூன்று மாதத்திற்கொருமுறை 1000 எண்ணிக்கை) | | |

2. மீளளிக்கப்படாத 1,000.00 ரூபாவை கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் இராணுவ நிதி பணிப்பகத்திற்கு அலுவலக நேரத்தினுள் (தொலைபேசி இலக்கம் 0112572661 / 0114050267) செலுத்தியதன் பின் குறித்த கேள்விப் படிவங்கள் மற்றும் விபரக்குறிப்புகளை கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம் (தொலைபேசி: 0813840776) கேள்விகள் திறக்கப்படும் பிரிவு எனும் இடத்தில் 2023 டிசம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக சமர்ப்பிக்கப்படும் கேள்விப் படிவங்கள் மாதிரிகள் சகிதம் 2024 ஜனவரி மாதம் 12ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் மேற்கூறப்பட்ட முகவரியில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

3. மேலதிக விபரங்களுக்கு கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் போர்க்கருவிகள் பணிப்பகத்தை தொடர்புகொள்ளவும். (தொ. பே. இல. 0112-987532, 0112-987537)

**இராணுவத் தளபதி,**
**இலங்கை இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**கொழும்பு.**

www.adz.lk
it's what you want

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

**விலைமனு சமர்ப்பிக்கும் திகதியை நீடித்தல் தொடர்பான அறிவித்தல்**

**இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு ஐந்து (05) மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களை வழங்கல் செய்வதற்கான கொள்முதல்**
**IFB No: PS/03/PB/PR/05/28/23**

1. **மேற்குறிப்பிட்ட கொள்முதல் தொடர்பாக 2023.11.09 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விலை மனுக்குள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2024 ஜனவரி மாதம் 16 (செவ்வாய் கிழமை) ஆம் திகதி வரை (2024.01.16) நீடிக்கப்படுகின்றது.** முன்னர் வெளியிடப்பட்ட அறிவித்தலை மற்றும் **மேலதிக விபரங்களை** www.pubsec.gov.lk மற்றும் www.immigration.gov.lk ஆகிய எமது உத்தியோகபூர்வ இணையத்தளங்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

2. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இங்கு கீழே குறிப்பிடப்படும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்தில் **2024.01.12** ஆம் திகதி **மு.ப.9.00** மணி முதல் **பி.ப.3.00** மணி வரை மீளளிக்கப்படாத இலங்கை **ரூபா.500,000.00** அல்லது இலங்கையில் சுதந்திரமாக மாற்றக்கூடிய நாணயத்திற்குச் சமமான தொகையை கட்டணமாக செலுத்தி எழுத்துமூல கோரிக்கையொன்றை தனது வியாபார கடிதத் தலைப்பில் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ள முடியும். கட்டணம் காசாக செலுத்தப்படுதல் வேண்டும்.

3. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் **2024 ஜனவரி 16 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு** அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் தொழில்நுட்ப விலைமனுக்கள் **2024 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு சமூகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

4. இது தொடர்பான மேலதிக விபரங்களை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கணக்காளர் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் **011-2887328, மற்றும் மின்னஞ்சல் acc_proc@pubsec.gov.lk 2024.01.12 ஆம் திகதி மு.ப.9.00 முதல் பி.ப.3.00** மணி வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும். விலைமனு ஆவணங்கள் பரீட்சிப்புத் தேவைக்காக மாத்திரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் (www.pubsec.gov.lk) இணையத்தளத்திலும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் (www.immigration.gov.lk) இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

தலைவர்
அமைச்சரவையினால் நியமிக்கப்பட் கொள்முதல் குழு (CAPC)
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,
"சுஹுறுபாயா", 17 ஆம் மாடி,
ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
2023.12.21

SELACINE

## 14 மாத்திரைகள் எண்ணும் சாதனங்களுக்கான பெறுகை

**(Procurement of 14 tablet counting devices)**

**ஒப்பந்த இலக்கம்: DDG/NCD/X/2022/13**

1. இலங்கையின் ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார சேவை வழங்கல் மாதிரிக்குள் உயர் இரத்த அழுத்த முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு தலையீட்டு மூலோபாயத்தின் செலவிற்காக உயிரைக் காப்பாற்றுவதற்கான தீர்மானத்திலிருந்து சுகாதார அமைச்சு நிதியைப் பெற்றுள்ளது. இதன் ஒரு பகுதியை 14 மாத்திரைகள் எண்ணும் சாதனங்களுக்கான பெறுகைக்கான தகுதிவாய்ந்த ஒப்பந்தக் கொடுப்பனவிற்காக பயன்படுத்த விரும்புகின்றது.
2. 14 மாத்திரைகள் எண்ணும் சாதனங்களுக்கான பெறுகைக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அமைச்சுப் பெறுகைக்குழு "E" தலைவர் அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான பெறுகை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் பெறுகை விதிமுறைகளில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதியான விலைமனுதாரர்களும் பங்குபற்றலாம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 0112686393 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொற்றாத நோய்கள்) அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 6ஆம் இலக்கத்தில் தரப்பட்டுள்ள முகவரியில் அலுவலக நேரங்களில் உ-ம் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 மணி வரையில் விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் சமாகம் மெதுரயிலிருந்து பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழின் (P.C.A. 3) மூலப் பிரதியை சமர்ப்பித்து மற்றும் 6ஆம் இலக்கத்தில் தரப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். மீளளிக்கப்படாத 1000.00 இலங்கை ரூபாவைச் செலுத்துவதன் பேரில் 2023-12-21ஆம் திகதி முதல் 2024-01-22ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான உள்ளூர் நேரத்தில் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகளை சுகாதார அமைச்சின் சிறாப்பருக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. விலைமனுக்களை 2024-01-23ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
   **பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொற்றா நோய்கள்),**
   **DDG அலுவலகம் (NCD), சுகாதார அமைச்சு,**
   **இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,**
   **கொழும்பு-10.**
7. விலைமனுக்கள் 2024-01-23ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடன் விலைமனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் மேற்கூறப்பட்ட முகவரியில் கலந்துகொள்ள விரும்பும் எந்தவொரு விலைமனுதாரரின் முன்னிலையில் பகிரங்கமாகத் திறக்கப்படும்.
8. சகல விலைமனுக்களுடனும் 140,000.00 இலங்கை ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 3 மாதங்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கையின் கீர்த்தி வாய்ந்த வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு "E",**
**சுகாதார அமைச்சு,**
**இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,**
**கொழும்பு-10.**

## துறைமுகம், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

### இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை

கேள்வி கோரல் - IFB/SP/2023-07

## தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கு சுத்திகரிப்புச் சேவையை (Janitorial Services) வழங்குவதற்காக கேள்வி கோரல்

1. சிவில் விமான சேவைகள் அதிகார சபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் (DPC) தலைவரினால் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
3. 2023 டிசம்பர் மாதம் 20ஆம் திகதி முதல் 2023 ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின் மீளளிக்கப்படாத ஆயிரத்து ஐந்நூறு (1500.00) (வெட் இன்றி) ரூபா கட்டணத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
4. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, சிவில் விமான சேவைகள் சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டப் பிரிவின் 0112358824 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் அனைத்து கேள்விதாரர்களினாலும் ஐம்பதாயிரம் (50,000.00) ரூபாவுக்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை வைப்புச் செய்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு கேள்விப் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.
6. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் கேள்விதாரர்கள் வீரவிலயில் அமைந்துள்ள சுற்றுலா பங்களா இடத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான வேலைத் தள விஜயமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதுடன் இதில் கலந்துகொள்வது கட்டாயமாகும். இதற்கான திகதி பின்னர் அறியத்தரப்படும்.
7. கேள்வியைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறும் நிறுவனத்தினால் வருடாந்த ஒப்பந்தப் பெறுமதியின் 5% பெறுமதியான இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பெயரில் பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற செயற்திறன் பிணைமுறியொன்றை வழங்குதல் வேண்டும். எதிர்பார்க்கப்படும் செயற்திறனுக்கு அமைவாக சேவை கிடைக்கப்பெறாவிட்டால் இதனை அறவிட்டுக் கொள்ளும் உரிமையை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
8. 2024 ஜனவரி மாதம் 11ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைக் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைமை அலுவலகத்திற்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
9. 2024 ஜனவரி மாதம் 11ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான காலம் முடிவடைந்தவுடன் உடன் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,**
**இல. 152/1, மினுவங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**

## துறைமுகம், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு

### இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை

கேள்வி கோரல் - IFB/SP/2023-07

## இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின்வீரவில நகரத்தில் அமைந்துள்ள விடுமுறை பங்களாவிற்கு முகாமைத்துவ சேவையை வழங்குதல்

1. சிவில் விமான சேவைகள் அதிகார சபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் (DPC) தலைவரினால் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் வீரவில நகரத்தில் அமைந்துள்ள விடுமுறை பங்களாவிற்கு முகாமைத்துவ சேவையை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
3. 2023 டிசம்பர் மாதம் 20ஆம் திகதி முதல் 2023 ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின் மீளளிக்கப்படாத ஆயிரத்து ஐந்நூறு (1500.00) (வெட் இன்றி) ரூபா கட்டணத்தைச் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
4. இதுதொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கட்டுநாயக்க, மினுவாங்கொட வீதி, இல. 152/1, சிவில் விமான சேவைகள் சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டப் பிரிவின் 0112358824 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் அனைத்து கேள்விதாரர்களினாலும் ஐம்பதாயிரம் (50,000.00) ரூபாவுக்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட பிணைமுறியொன்றை வைப்புச் செய்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு கேள்விப் பிணைமுறி செல்லுபடியாதல் வேண்டும்.
6. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் கேள்விதாரர்கள் வீரவிலயில் அமைந்துள்ள சுற்றுலா பங்களா இடத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான வேலைத்தள விஜயமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதுடன் இதில் கலந்துகொள்வது கட்டாயமாகும். இதற்கான திகதி பின்னர் அறியத்தரப்படும். கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2023 டிசம்பர் மாதம் 29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் இடம்பெறும்.
7. கேள்வியைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறும் நிறுவனத்தினால் வருடாந்த ஒப்பந்தப் பெறுமதியின் 5% பெறுமதியான இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பெயரில் பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற செயல்திறன் பிணைமுறியொன்றை வழங்குதல் வேண்டும். எதிர்பார்க்கப்படும் செயல்திறனுக்கு அமைவாக சேவை கிடைக்கப்பெறாவிட்டால் இதனை அறவிட்டுக் கொள்ளும் உரிமையை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
8. 2024 ஜனவரி மாதம் 11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கட்டுநாயக்க, மினுவாங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைக் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வீரவில சுற்றுலா பங்களாவிற்கு முகாமைத்துவச் சேவையை வழங்குதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
9. 2024 ஜனவரி மாதம் 11ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான காலம் முடிவடைந்தவுடன் உடன் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,**
**இல. 152/1, மினுவாங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**

# பெறுகை அறிவித்தல்

## மருந்து உபரகணங்களை கொள்வனவு செய்தல்

### சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசறை

சுவாச சோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | உருப்படி | அளவு | பூர்த்தி செய்து இருக்க வேண்டிய தகைமைகள் | கேள்விப் பிணை முறி (ரூ,) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ.) | கேள்விப் பத்திர இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | Thoracoscope | 01 | CDDA/NMRA சான்றிதழ் | 900,000/- | 3,500/- | WFIC/Med EQ/05/2023 |
| 02 | Flexible Bronchoscope for Double Lumen tube Placement (3.1 mm or Less) | 01 | CDDA/NMRA சான்றிதழ் | 210,000/- | 3,500/- | WFIC/Med EQ/04/2023 |

- தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் வழங்குநர் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடைய எந்தக் கேள்விதாரருக்கு பிரதிநிதிக்கு அல்லது பெயர் குறிப்பிடும் ஒருவருக்கு மீளளிக்கப்படாத மேலே குறிப்பிடப்படும் கேள்வி ஆவணக் கட்டணத்தை 2023.12.21 முதல் 2024.01.10 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 பி.ப. 3.00 இற்கு இடையில் வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்னர் கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
- ரூபா ஐந்து மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விக்காக 1987 இல. 03 பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
- 2024.01.11 மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்குமுன் கிடைக்கமாறு பொறியிடப்பட்ட கேள்விகள் சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் விண்ணப்பதாரிகளுக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை சுவாச நோய்களுக்கான தேசிய வைத்திய சாலையின் பெறுகைக் குழுவிற்கு உண்டு என மேலும் தெரிவிக்கிறோம்.
- சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்வி உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பெறுகையின் பெயர் மற்றும் திறக்கப்படும் தினம் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
(தொ. பே. இல. 011-2958271 - நீடிப்பு - 102)

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை**
**வெலிசறை.**

SriLankan Airlines

oneworld

## சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட் (PB 67)
## மெய்நிகர் அதிவிசேட பொதுக்கூட்டத்திற்கான அறிவித்தல்

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் அதிவிசேட பொதுக்கூட்டம் 2024, ஜனவரி 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 3.00 மணிக்கு மெய்நிகர் பொதுக்கூட்டமாக நிறுவனத்தின் அமைப்பகவிதிகள் 56(ii)(b) பிரிவுக்கு அமைய நடைபெறவிருப்பதுடன், பின்வரும் சாதாரண தீர்மானத்தை நிறைவேற்றும் விதத்தில் நடத்தப்படவுள்ளமை தொடர்பில் இத்தால் இவ்வறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தினை இலங்கை ரூ.96,360,665,500 இலிருந்து இலங்கை ரூ.198,860,665,500 க்கு அதிகரித்துக் கொள்வதற்காக 2023, டிசம்பர் 12 ஆம் திகதியன்று கம்பனி பெற்றுக்கொள்ளும் இலங்கை ரூ. 102.5 பில்லியன் பெறுகையின் பொருட்டு 1,025,000,000 சாதாரண பங்குகளைப், பங்கொன்று இலங்கை ரூ. 100 இல் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்படுகிறது.

பங்குதாரருக்கு பதிலாள் ஒருவரை நியமிக்க உரிமையுண்டு. அத்தகைய பதிலாள் நிறுவனத்தின் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

மேற்குறிப்பிட்ட விடயத்திற்கு வலிதினை அளிப்பதற்கு தேவைப்படும் தீர்மானம், பதிலாள் படிவம், அதிவிசேட பொதுக்கூட்டத்தின் தளத்திற்கான வழிகாட்டல் மற்றும் பதிவு செய்தல் தொடர்பான தெளிவான விளக்கம் என்பவை www.srilankan.com/virtualEGM என்ற நிறுவன இணையதளத்தில் மற்றும் http://shareholders.srilankan.com என்ற பங்குடைமையாளர்களின் இணையவழித்தளத்தின் ஊடாக 2023, டிசம்பர் 21ஆம் திகதி முதல் அறிந்து கொள்ள முடியும்.

மேலும் உறுப்பினர்களுக்கு மேற்கூறிய ஆவணங்களை கீழ் குறிப்பிட்டுள்ள QR குறியீட்டினை மொபைல் தொலைபேசியில் ஸ்கேன் செய்வதன் மூலம் பார்வையிட முடியும்.

பொதுக்கூட்டம் தொடர்பான அறிக்கை மற்றும் பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை

மெய் நிகர் பதிவுகளுக்கான விதிமுறைகள்

சபையின் கட்டளைப் படி
**சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்**

திருமதி. டெல்ரீன் திருக்குமார்
**கம்பனிச் செயலாளர் சேவைகளின் குழுத் தலைவர்/ கம்பனிச் செயலாளர்**

21, டிசம்பர் 2023

# நுவன் துஷாரவின் விலையை உயர்த்தி மும்பையை வாங்கச் செய்த பெங்களூர்



இந்திய பிரீமியர் லீக் தொடரில் இலங்கை வேகப்பந்து வீச்சாளர் நுவன் துஷாரவின் விலையை உயர்த்தி மும்பை இந்தியன்ஸை வங்கச் செய்யும் உத்தியை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி கையாண்டது.

டுபாயில் நேற்று முன்தினம் (19) நடந்த வீரர்கள் ஏலத்தில் லசித் மாலிங்க பணியில் பந்துவீசும் நுவன் துஷாரவை மும்பை இந்தியன்ஸ் அணி இந்திய நாணயப்படி 4.8 கோடி ரூபாவுக்கு வாங்கியது. இதனால் அந்த அணியின் கையிருப்புத் தொகை வெறும் 5.25 கோடி ரூபாவாக குறைந்தது.

இதன்போது மும்பையின் கையிருப்புத் தொகையை குறைக்கும் வகையில் நுவன் துஷாரவின் விலையை உயர்த்துவதில் பெங்களூர் அணி கடும் போட்டியிட்டது.

50 இலட்சம் ரூபா அடிப்படை தொகைக்கு துஷார ஏலம் விடப்பட்ட போது அவரை வாங்க மும்பை மற்றும் பெங்களூர் அணிகளுக்கு கடும் போட்டி ஏற்பட்டது. இதன்போது பெங்களூர் அணி துஷாரவின் விலையை 4.6 கோடிக்கு உயர்த்திய பின் அவரை வாங்கும் போட்டியில் இருந்து விலகிக் கொண்டது. இதனால் மும்பை அணி அவரை வாங்க 4.8 கோடி ரூபாவுக்கு விலை கேட்க வேண்டி ஏற்பட்டது. இதனால் இலங்கையின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்கவை விடவும் துஷார அதிக விலைக்கு வாங்கப்பட்டார். வனிந்து ஹசரங்கவை சன்ரைசஸ் ஹைதராபாத் அணி அவரது அடிப்படை விலையான 1.5 கோடி ரூபாவுக்கு வாங்கியது.

இடது கை வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்கவை மும்பை இந்தியன்ஸ் அணி 4.6 கோடி ரூபாவுக்கு வாங்கியது.

எனினும் இந்த ஏலத்தில் போட்டியிட்ட இலங்கை வீரர்களான தசுன் ஷானக, குசல் மெண்டிஸ், லஹிரு குமார, துஷ்மந்த சமீர மற்றும் சரித் அசலங்க ஆகியோரை எந்த அணிகளும் வாங்க முன்வரவில்லை.

இதுவரை இலங்கை அணி சார்பில் 5 டி20 சர்வதேச பேட்டிகளில் ஆடியிருக்கும் நுவன் துஷார ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தியிருப்பதோடு அவரது சிறந்த பந்துவீச்சு 17 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளாகும்.

# கிழக்கு பாடசாலைகள் கைப்பந்தாட்டப் போட்டி



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

இலங்கை பாடசாலைகள் கைப்பந்தாட்ட சம்மேளனம் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடத்திய 12 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டிகள் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும், மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதான உள்ளக அரங்கிலும் இடம்பெற்றன.

இதில் கலந்து கொண்ட கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் இடம்பெற்ற 6 போட்டிகளில் வெற்றியையும், இரண்டு போட்டிகளில் தோல்வியையும், ஒரு போட்டியில் வெற்றி தோல்வி இன்றியும் நிறைவு செய்தனர்.

ரிதிதென்ன இக்ரா வித்தியாலயம், வவுணத்தீவு பரமேஸ்வரா வித்தியாலயம், பூனொச்சிமுனை இக்ரா வித்தியாலயம், மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி, கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி, நாவற்காடு நாமகள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் அறிமுக போட்டிகளில் பங்கேற்றன.

# தேர்தலில் போட்டியிட டிரம்ப் தகுதி இழப்பு



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனல்ட் டிரம்ப் மீண்டும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடத் தகுதியற்றவர் என கொலராடோ உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

அந்த மாநிலத்தின் 2024 முன்னோடி வாக்களிப்பில் போட்டியிட நீதிமன்றம் அவருக்குத் தடை விதித்தது. 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்க பாராளுமன்றக் கட்டடம் தாக்கப்பட்டதில், டிரம்ப்புக்கு உள்ள தொடர்புக்காக அந்தத் தடை விதிக்கப்பட்டது.

அமெரிக்க வரலாற்றில் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட ஒரு வேட்பாளர் தகுதியற்றவர் என நீதிமன்றத்தால் அறிவிக்கப்படுவது இதுவே முதல்முறை.

இப்போதைக்கு நீதிமன்றத் தீர்ப்பு கொலராடோ மாநிலத்தில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள குடியரசுக் கட்சி முன்னோடித் தேர்தலுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

இருப்பினும் அது பரவலான வேறுபல தாக்கங்களை ஏற்படுத்துமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. டிரம்ப்பின் பிரசாரக் குழு, நீதிமன்ற உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப் போவதாக அறிவித்தது.

# கொவிட் உருமாற்றம் குறித்து சுகாதார அமைப்பு அக்கறை



கொவிட்–19 நோய்க்குக் காரணமாகும் உருமாற்றம் பெற்ற JN.1 வைரஸ் அக்கறைக்குரிய தொற்றாக உலக சுகாதார அமைப்பு வகைப்படுத்தியுள்ளது. இப்போதைய ஆதாரங்களின்படி அந்த வைரஸால் பொதுச் சுகாதாரத்துக்கான ஆபத்து குறைவே என்று அந்த அமைப்பு குறிப்பிட்டது.

தற்போது மக்களிடையே தொற்றிவரும் மற்ற வைரஸ்களை காட்டிலும் JN.1 ரக வைரஸால் மனித நோய் எதிர்ப்புமுறையை ஊடுருவி எளிதில் தொற்றமுடியும் என்று நிபுணர்கள் இருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தனர்.

ஆனால் அது கடுமையான உடல்நலக் குறைவை ஏற்படுத்தும் அறிகுறிகள் இல்லையென்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அந்த வைரஸால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்றபோதும் அதனால் ஆபத்து அதிகமில்லை என்று நிபுணர்கள் கூறினர்.

வைரஸால் ஏற்படக்கூடிய கடும் உடல்நலக் குறைவு, மரணம் ஆகியவற்றிலிருந்து தற்போது நடப்பிலுள்ள தடுப்பு மருந்துகளால் பாதுகாப்பு வழங்கமுடியுமென உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.

டிசம்பர் 8ஆம் திகதி நிலவரப்படி அமெரிக்காவில் நேர்ந்த கொவிட்–19 நோய்ச் சம்பவங்களில் 15 முதல் 29 வீதம் JN.1 ரக வைரஸால் ஏற்பட்டதாக மதிப்பிடப்படுகிறது.

# தாய்வான் தேர்தல்களில் தலையிட சீனா முயற்சி



தாய்வானில் தேர்தல்கள் நடைபெறவுள்ள சூழலில் அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் தலையீடு செய்யும் முயற்சிகளை சீனா முன்னெடுத்து வருவதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனவரி மாதம் 13 ஆம் திகதி ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் தாய்வானில் நடைபெற உள்ளன. இத்தேர்தல்களில் போட்டியிடும் சீன சார்பு வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் முயற்சிகளை சீனா மேற்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ள தாய்வான் அதிகாரிகள், நூற்றுக்கணக்கான உள்ளூர் தாய்வான் அரசியல்வாதிகள் குறைந்த செலவில் சீனாவுக்கு பயணங்களை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இதேவேளை கடந்த மாதத்தில் தாய்வானின் நீரிணைப்பகுதியிலும் கடற்பரப்பிலும் சீன படையினரின் நடமாட்டங்களும் ஆராய்ச்சி கப்பல்களின் பிரசன்னமும் அதிகரித்து காணப்பட்டன. இவை உண்மையான உளவியல் போரென தாய்வான் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

தாய்வான் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் சில தினங்களுக்கு முன்னர் சீனாவின் 12 போர் விமானங்களும் வானிலை பலூனும் எம்மைக் கடந்து சென்றதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

# போர் நிறுத்தப் பேச்சுக்கு மத்தியிலும் காசாவில் ஹமாஸ்–இஸ்ரேலிய படை வீதிகளில் சண்டை

## ஹமாஸ் தலைவர் ஹனியே எகிப்து விரைவு



போர் நிறுத்தம் ஒன்றுக்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் காசாவின் இரண்டாவது மிகப் பெரிய நகரான கான் யூனிஸில் இஸ்ரேலிய படைகள் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கு இடையே நேற்று (20) வீதிகளில் கடும் சண்டை வெடித்துள்ளது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பிலான வாக்கெடுப்பை ஐ.நா பாதுகாப்புச் சபை மேலும் ஒரு தினத்திற்கு ஒத்திவைத்த நிலையில், அமெரிக்க நேரப்படி நேற்று அந்த வாக்கெடுப்பு இடம்பெறவிருந்தது. ஐக்கிய அரபு இராச்சியம் கொண்டுவந்த நகல் தீர்மானத்தின் மீது கடந்த திங்கட்கிழமை வாக்கெடுப்பு நடத்தப்படவிருந்தபோதும் பாதுகாப்புச் சபையின் 15 அங்கத்துவ நாடுகளிடையே உடன்பாடு ஒன்றை எட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்ட வாக்கெடுப்பு மீண்டும் புதன்கிழமை வரை பிற்போடப்பட்டது. குறிப்பாக போர் நிறுத்தம் பற்றிய சொற்பிரயோகத்திற்கு அமெரிக்கா உடன்பட மறுத்து வருகிறது. ஏற்கனவே போர் நிறுத்தம் மீதான பாதுகாப்புச் சபை தீர்மானத்திற்கு எதிராக அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலில் 1,200 பேர் கொல்லப்பட்டு மேலும் 240 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட கடந்த ஒக்டோபர் 7 தாக்குதலுக்குப் பின்னர் ஹமாஸ் அமைப்பை அழித்தொழிப்பதாகக் கூறி காசா மீது இஸ்ரேல் நடத்தும் இடைவிடாத தாக்குதல்கள் அந்தப் பகுதியில் பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. மக்களிடையே பட்டினி அதிகரித்திருப்பதோடு பெரும் எண்ணிக்கையானவர்கள் வீடற்றவர்களாக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கு மேல் நீடிக்கும் இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 20,000ஐ நெருங்கியுள்ளது. இந்நிலையில் தெற்கு காசா நகரான கான் யூனிஸின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் ஹமாஸ் போராளிகள் மற்றும் இஸ்ரேலிய படைகளுக்கு இடையே கடும் மோதல் இடம்பெற்று வருவதாக குடியிருப்பாளர் தெரிவித்துள்ளனர்.

நகரில் இருக்கும் வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 12 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று நேற்று அதிகாலையிலும் காசாவின் பல பகுதிகளில் இஸ்ரேலின் சரமாரி வான் தாக்குதல்கள் தொடர்ந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது. குறிப்பாக வடக்கு காசாவில் ஜபலியா அகதி முகாம் மீது இடம்பெற்ற கடும் தாக்குதல்களில் பல டஜன் பேர் கொல்லப்பட்டிருப்பதோடு சிறுவர்கள் மற்றும் பெண்களே அதிகமாக உயிரிழந்திருப்பதாக வபா கூறியது.

முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழமை காசாவில் நடத்திய சரமாரித் தாக்குதல்களில் 100க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காசா பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மேலும் மூன்று இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டனர். காசாவில் தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் அங்கு கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 133 ஆக அதிகரித்துள்ளது.

காசாவில் மனிதாபிமான நிலைமை அவநம்பிக்கையை ஏற்படுத்தி இருப்பதாக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் சர்வதேச கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான ஜெகன் சாபகைன் எக்ஸ் சமூகதளத்தில் தெரிவித்துள்ளார்.

“தற்போது இடம்பெற்று வரும் ஷெல் தாக்குதல்கள் மற்றும் போதுமான எரிபொருள் இல்லாமை காரணமாக உதவி விநியோகங்கள் மேலும் கடினமாகி வருகிறது” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

**ஹமாஸ் தலைவர் எகிப்தில்**

மேலும் பணயக்கைதிகளை விடுவிக்கும் மற்றொரு போர் நிறுத்தத்திற்கு தயார் என இஸ்ரேல் அறிவித்த நிலையில், காசாவில் போர் நிறுத்த பேச்சுவார்த்தை ஒன்றுக்காக ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே நேற்று (20) எகிப்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

காசா பகுதிக்கான உதவி விநியோகங்கள் தடைப்பட்டு பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டு வரும் நிலையில் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான சர்வதேச அழுத்தம் அகதிகரித்து வருகிறது.

இந்நிலையில் கட்டாரைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஹமாஸ் தலைவர் ஹனியே உயர் மட்ட தூதுக் குழுவொன்றுடன் எகிப்தை சென்றடைந்திருப்பதோடு அவர் அங்கு எகிப்து உளவுப் பிரிவு தலைவர் மற்றும் ஏனையவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறார்.

“கைதிகளை விடுவிப்பதற்காக உடன்படிக்கை ஒன்றை தயாரிப்பதற்கு ஆக்கிரமிப்பு மற்றும் போரை நிறுத்துவது” தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக ஹமாஸ் வட்டாரத்தை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.



காசாவில் தொடர்ந்து 129 பணயக்கைதிகள் பிடித்து வைக்கப்பட்டிருப்பது இஸ்ரேல் அரசுக்கு தனது சொந்த மக்களிடையே அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ஹமாஸுடன் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்பத் தயார் என்று இஸ்ரேல் கடந்த செவ்வாயன்று (19) சமிக்ஞையை வெளியிட்டது.

“பணயக்கைதிகளை விடுவிக்கும் முகமாக மற்றொரு மனிதாபிமான போர் நிறுத்தம் மற்றும் மேலதிக மனிதாபிமான உதவிகளுக்கு இஸ்ரேல் தயாராக உள்ளது” என்று இஸ்ரேலிய ஜனாதிபதி இசாக் ஹெர்சொக் தெரிவித்துள்ளது.

பணயக்கைதிகளை விடுவிக்கும் முயற்சியாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது உளவுப் பிரிவுத் தலைவரை ஐரோப்பாவுக்கு இரு சுற்றுப் பயணங்களை அனுப்பி இருந்தார்.

பலஸ்தீன போராட்டக் குழுவான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு தனது பிடியில் இருக்கும் இரு பணயக்கைதிகளின் படங்களை செவ்வாயன்று வெளியிட்டது. இது இஸ்ரேலுக்கும் மேலும் அழுத்தத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான புதிய உடன்படிக்கை ஒன்று பற்றி கட்டார் பிரதமர் ஷெய்க் முஹமது பின் அப்துல்ரஹ்மான் அல்தானி மற்றும் அமெரிக்க உளவுப் பிரிவாக சி.ஐ.ஏ. தலைவர் பில் பேர்ன்ஸை இஸ்ரேலின் மொசாட் உளவுப் பிரிவின் தலைவர் டேவிட் பேர்ன் ஐரோப்பாவில் சந்தித்து பேசி இருந்தார்.

ஹமாஸ் பிடியில் இருக்கும் மூன்று டஜனுக்கும் மேலான பணயக்கைதிகளுக்கு பகரமாக காசாவில் குறைந்தது ஒரு வார போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த இஸ்ரேல் முயற்சிப்பதாகத் தெரியவருகிறது.

எகிப்து மற்றும் அமெரிக்காவின் ஆதரவோடு கட்டாரின் மத்தியஸ்தத்தில் காசாவில் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற ஒரு வாரம் நீடித்த போர் நிறுத்தத்தின்போது இஸ்ரேலிய சிறைகளில் இருக்கும் 240 பலஸ்தீன கைதிகளுக்கு பதில் 80 இஸ்ரேலிய பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இதேவேளை கடந்த இரண்டரை மாதங்களில் நான்காவது முறையாக ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹொஸைன் அமிரப்துல்லாஹியான் நேற்று முன்தினம் கட்டாருக்கு விஜயம் மேற்கொண்டார்.

அங்கு அவர் ஹமாஸ் தலைவர் ஹனியேவை சந்தித்து காசா மற்றும் மேற்குக் கரை நிலைமை குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இஸ்ரேலின் முன்னெப்போதும் இல்லாத தாக்குதல்கள் மற்றும் அது காசாவில் நிகழ்த்தும் போர்க் குற்றங்களுக்கு மத்தியிலும் போர்க்களத்தில் பலஸ்தீனர்கள் உறுதியாக உள்ளனர் என்று இதன்போது ஹனியே தெரிவித்துள்ளார்.

“இந்த வழியில் எதிர்ப்பை ஒழித்து வெள்ளைக் கொடியை உயர்த்தச் செய்ய முடியும் என்று சியொனிஸவாதிகளும் அதன் கூட்டாளிகளும் நம்புகின்றனர்” என்று தெரிவித்த ஹனியே, “எப்படி இருந்தபோதும் இந்த எதிர்ப்பு போர்க்களத்தில் இன்னும் உறுதியாகவும் துரிதமாகவும் உள்ளதோடு 75 நாட்கள் நீடிக்கும் இஸ்ரேலிய குற்றங்கள் மற்றும் கூட்டுப் படுகொலைகளுக்கு மத்தியிலும் சியொனிஸ அரசுக்கு கடும் சேதத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது” என்றார்.

முன்னதாக கடந்த மாதம் ஈரான் உயர்மட்டத் தலைவர் ஆயதொல்லா அலி கமனெய் டெஹ்ரானில் வைத்து ஹனியேவை சந்தித்திருந்தார்.

**இஸ்ரேல் கப்பலுக்குத் தடை**

காசா போர் பிராந்தியத்தில் பரவும் அச்சுறுத்தல் நீடித்து வருவதோடு, குறிப்பாக தெற்கு லெபனானில் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா போராளிகள் எல்லையில் இஸ்ரேலிய படைகளுடன் தொடர்ந்து சண்டையிட்டு வருகின்றனர்.

எல்லைப் பகுதியில் இரு மேலதிக படையினருக்கு காயத்தை ஏற்படுத்திய இரு தாக்குதல்கள் இடைமறிக்கப்பட்ட நிலையில் ஹிஸ்புல்லா நிலைகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் செவ்வாயன்று (19) கூறியது.

மறுபுறம் யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள், பலஸ்தீனத்திற்கு ஆதரவாக செங்கடலில் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது தொடர்ந்து ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதனால் பிரதான கப்பல் நிறுவனங்கள் பல தமது கப்பல் பாதையை திசை மாற்றி இருப்பதோடு இந்தத் தாக்குதல்களை கையாள்வதற்கு பன்னாட்டு இராணுவ கூட்டமைப்பு ஒன்றை அமெரிக்கா கடந்த திங்களன்று அறிவித்தது.

இந்நிலையில் தமக்கு எதிராக எந்த நாடேனும் செயற்பட்டால் செங்கடலில் அதன் கப்பல்கள் இலக்கு வைக்கப்படும் என்று ஹூத்திக்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை இஸ்ரேலிய கொடியுடனான கப்பல்களை தமது நாட்டில் நிறுத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று மலேஷிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் நேற்று அறிவித்தார். பலஸ்தீனத்திற்கு எதிராக படுகொலை மற்றும் கொடூரத்தை நிகழ்த்தி வருவதாக அவர் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டது.

தவிர, மலேசிய துறைமுகங்களில் சரக்குகளை ஏற்றி இஸ்ரேலுக்கு செல்லும் கப்பல்களுக்கும் தடை விதிக்கப்படுவதாகவும் அதில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகள் உடன் அமுலுக்கு கொண்டுவரப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 21ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.